Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம்-15 வெள்ளி-34 22-28 ஒக்டோபர் 2004

## ஓயாத அலைகள் இரண்டில் எங்கள் கிளிநகர் மீட்டோம்



## விபத்துக்கு என்ன காரணம்...?

### ஓட்டுநர்களுடன் சில நிமிடம்...




# திருமுக அறிமுகம்

நெய்தலும் மருதமும் நிறைந்த சைவமும் தமிழும் தளைத்தோங்கும் மீன் பாடும் தேன்நாடாம் மட்டக்களப்பில் உள்ள காரையம் பதியில் 1852 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 29 ஆம் திகதி சாமித்தம்பி கண்ணம்மை தம்பதிகளுக்கு மகனாக பிறந்தார் சுவாமி விபுலானந்தர்.

காரைதீவில் கோவில் கொண்டுள்ள கண்ணகை அம்மன் மீது அளவிலா பக்தி கொண்டவர் இவருக்கு தந்தையார் இட்ட பெயர் மயில்வாகனன் என்பதாகும். பெற்றோர் இவரை தம்பிப்பிள்ளை என்று செல்லமாக அழைப்பார். இவருக்கு இரண்டு சகோதரிகளும் உண்டு.

இவர் தனது ஏட்டுக் கல்வியை நல்லரெத்தினம் என்பவரிடம் கற்றார். ஆரம்பக் கல்வியை காரைதீவு தமிழ் வித்தியாலயத்தில் குஞ்சித்தம்பி ஆசிரியரிடம் கற்றார். "திருக்குறல்" "பாரதம்" "நன்னூல்", 'சூடாமணி', 'நிகண்டு' வடமொழி என்பவற்றை காரைதீவு வைத்திலிங்க தேசிகரிடம் கற்றார். மேலும் 'அஸ்வமேதபர்வதம்' 'பெரியபுராணம்' 'பஞ்சதந்திரம்' 'விநோதரச மஞ்சரி' 'வில்லிபாரதம்' "நைடதம்" கந்த புராணம் போன்ற நூல்களை சிவகுருநாதப்பிள்ளை, வசந்தராசபிள்ளை என்போரிடம் கற்றார்.



சுவாமி விபுலானந்த அடிகள்.

இளமைக் காலம் தொட்டு தன் தாயாருடன் கண்ணகை அம்மன் கோவிலுக்குச் சென்று வணங்கும் பொழுது சிலப்பதிகார பதிகம் அடிகளாரின் மனதை ஆழத்தொட்டுவிட்டது. இவ்வாறான நிலைமையில் தாயார் கண்ணம்மை காலமாகிவிட்டார். அன்னையின் இழப்பு அடிகளாரை தாக்க கல்முனை வெஸ்லி கல்லூரியிலேயே ஆசிரியராக கடமை புரியத் தொடங்கிவிட்டார்.

அத்துடன் சிலப்பதிகாரத்திற்கு உரைகாணப்பிடாத பகுதிகளுக்கு உரை காணும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் கண்டார். அத்தோடு மதுரைத் தமிழ்ச் சங்க பரீட்சையில் தோற்றி பண்டிதர் பட்டமும் பெற்றார். 1915 கொழும்பில் விஞ்ஞானம் பயின்று விஞ்ஞான டிப்ளோமா பட்டத்தையும் பெற்றார்.

இவர் யாழ்ப்பாணத்தில் சம்பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகவும், வண்ணப்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். மேலும் படித்து லண்டன் பல்கலைக் கழகம் நடத்திய பி.எஸ்.ஸி தேர்வில் வெற்றிபெற்றார்.

எத்தகைய பணிகள் இருந்தாலும் இரவில் இரண்டு மணித்தியாலங்கள் படிப்பது என்ற நியதியைக் கைக்கொண்டு அதன்படி ஒழுகியும் வந்தார்.

1920 ஆண்டு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றினார். இக்காலத்தில் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம் என்றொரு சங்கத்தை அமைத்தார்.

1922 ஆம் ஆண்டு துறவு வாழ்வில் ஆர்வங்கொண்டு மயிலாப்பூரில் இருந்த இராமகிருஸ்ண மிசன்மடத்துத் தலைவர் சுவாமி சிவானந்தரிடம் பிரபோத சைதன்யர் எனும் தீட்சா நாமும் பெற்றார். அங்கே வெளிவந்த ஆன்மீக பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றுக்கும் அரிய பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

யாழ் நூல் ஆராய்ச்சி சம்பந்தமாகவும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதினார்.

ஆச்சிரம வாழ்க்கை முடித்து சுவாமி விபுலானந்தர் எனும் குருப்பட்டமும் பெற்று இலங்கை வந்த விபுலானந்த அடிகளார் இலங்கை பல்கலைக் கழகத்திற்கு முத்தமிழ் பேராசிரியராக இருந்தார். இந்த பல்கலைக் கழகத்தில் இருந்த நூல்கள் சுவாமி அவர்களின் யாழ் நூலாய்வுக்கு பெரிதும் உதவின. சுவாமியவர்கள் இராமகிருஸ்ணமிசன் பாடசாலைக்கு முகாமையாளராகவும், திருகோணமலை இந்துக் கல்லூரிக்கு அதிபராகவும் கடமை புரிந்ததுடன் கல்விக்கும் பாரிய தொண்டாற்றியுள்ளார். தலைநகரான கொழும்பில் தமிழ் பாடசாலை இல்லாத குறையைப் போக்க விவேகானந்தா வித்தியாலயத்தை தொடங்கினார்.

1937 ஆண்டு இந்தியாவில் இருந்து வெளிவரும் 'பிரபுத்தபாரதா" ஆங்கில சஞ்சிகைக்கு ஆசிரியராகவும் கடமையாற்றினார். யாழ் நூல் ஆராய்ச்சிக்காக தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று 15 ஆண்டுகள் ஆராய்ந்து கரந்தை தமிழ்ச்சங்க ஆதரவில் இந்தியாவின் திருக்கோவிலில் 1947 ஆம் ஆண்டு ஆனித் திங்கள் யாழ் நூல் அரங்கேற்றம் வெகு விமரிசையாக நடந்தேறியது.

இவ்வாறு தமிழுக்கு தொண்டாற்றிய சுவாமி விபுலானந்தர் 1947 ஆண்டு ஆடி மாதம் 17 ஆம் திகதி அவர் விண்ணுலகம் அடைந்தார்.

சிவானந்த வித்தியாலய முன்றலில் சுவாமி விபுலானந்தரின் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டது. அடிகளார் மண்ணைவிட்டு மறைந்து விட்டாலும் இம்மக்களின் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

# காரசாரம்

எல்லையோரக்கிராமங்கள் என்று சொல்லப்படும் சிங்கள, தமிழ் எல்லைக் கிராமங்கள் எப்போதும் பிரச்சனைகளைச் சந்தித்து வருகின்றன. சமாதான காலங்களில் சந்தடியில்லாமலே நடக்கும் சில வேலைகள் முற்று முழுதாகத் தமிழர்களைத் தொலைத்துக் கட்டுவதாகவே அமைகிறது. தமிழ் மக்களில் பல்லாயிரக் கணக்கானவர்கள் தமது உயிர் உடைமைகளை இழந்து போய்விட்டனர். சிலர் உடைமைகளை இழந்து போய் விட்டனர். சிலர் உடைமைகளைச் சேகரித்துள்ளனர். இந்த வகையில் மீனுக்கு வாலும் பாம்புக்குத் தலையுமாக எத்தனை மனிதர்கள் வாழ்கிறார்கள். இவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் மடத்தன வேலைகளையும் நாமே செய்கின்றோம். அண்மையில் எல்லையில், வவுனியாவின் ஒரு எல்லைக் கிராமத்தில் நடந்தது இது. காலங்காலமாகத் தமிழர்களால் பயிர் செய்யப்பட்டு வரும் நிலங்கள் அங்குள்ளது. உண்மையில் மத்தியதர வகுப்பாருக் கிராமங்களை சொந்தக்காரர் விட்டுவிட்டு தமது பாதுகாப்புக்கு வெளிநாடுகளுக்குப் போனார்கள்.

குத்தகைக்கு காணிகளை பராமரித்தவர்களோ, குத்தகையைக் கொடுத்துவிட்டு இராணுவ நெருக்கடிக்குள்ளும் நிலங்களை விடாப்பிடியாகக் காப்பாற்றி வந்தனர். அதைவிட தரிசாகக் கிடந்த நிலங்களையும் திருத்தி தமிழர்களின் எல்லையைக் காப்பாற்றி வருகிறார்கள்.

இந்தக் கிராமத்தையடுத்து சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டதுடன் இராணுவ முகாமும் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. இவர்களுடைய எல்லையில் இருந்த கிராம அபிவிருத்திச்சங்கம் தமிழர்களை அங்கத்தவர்களாகக் கொண்டே இதுவரை அதன் வருடாந்தக் கூட்டம் நடை பெற்றபோது அக்கிராமத்தின் மக்களை புறந்தள்ளி சிங்களமக்களே சங்கத்தின் நிர்வாக சபையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இச்சங்க நிர்வாகத்தை சிங்களவர்களின் கைக்கு மாற்றியதைக் கொண்டாட

இங்குள்ள மக்கள் திட்டமிட்டு சிங்களவர்களாலும் சூழவுள்ள இராணுவ முகாம்களாலும் விரட்டப்பட்டனர். பெரும் தென்னந்தோப்புகள் விருட்சமாக வளர்ந்த மாமரங்கள், பழமரங்கள். ஆங்கிலேயர் காலத்துக் கல்வீடுகள் எனப் புகழ் நிறைந்த கல்விமான்கள் மாவீரர்கள் வாழ்ந்தமண். இன்று பத்துப் பதினைந்து வருடங்களுக்கு மேலாகத் தமிழர்கள் மீண்டும் இங்கு வயற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். எப்படி

சிங்கள முதலாளிகட்கு குத்தகை கொடுத்தும் பயிர் செய்வதாக இவர்கள் கூறினார்கள். அவை தமிழர்களுடைய காணிகள் தானே. "அவை விட்டிட்டுப் போக சிங்களவர் ஆளாளாப் பிடிச்சு வைச்சுக் கொண்டு இப்ப எங்களுக்கு தாறாங்கள். குத்தகை பெரிசா இல்லை. இஞ்சால மூவாயிரமெண்டா அவங்கள் ஆயிரம் ஆயிரத்தைநூறு எண்டுதான் தாறாங்கள்" என்றார் ஒரு விவசாயி.

வாரிக் குட்டியூர் வவுனியாவுக்கு மேற்கே பூவரசங் குளத்துக்கு அண்மையில் உள்ள கிராமம் இங்கு இராணுவ முகாம் அமைக்கப்பட்டு அதனருகே சிங்களக் குடியேற்றம் நடைபெற்று வருகிறது.

அங்கும் இங்கும் எங்கும் இந்தச் செயற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டு தரகர்களாகச் செயற்படுபவர்கள் தமிழர்கள் தான்.

# அயலைப் பற்றி எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்

கென காணிகள் வழங்கப்பட்டபோது அரசஊழியர்கள் பெரும்பாலும் நிலங்களைப் பெற்றனர்.

வவுனியாவின் தச்சங்குளம் பிரதேசம் அப்படிப்பட்ட ஒன்றுதான். ஆயிரத்துத் தொளாயிரத்து ஏழுபத்தியேழில் இங்கிருந்த தமிழர் விரட்டப்பட அவர்கள் கோவிற்குளம் பகுதியில் பாடசாலைகளில் தஞ்சம் புகுந்தனர். அதன்பின் அப்பகுதி மக்களுக்கு அழிவுக்கான நிவாரணம் வழங்கிய அரசாங்கம் சொத்துகளுக்கான அழிவைக் கணக்கிட்டு வழங்கிய போது அந்தக் காணிகளில் வசித்து சொத்துகளை இழந்தவர்களைப் புறந்தள்ளிக் காணி உரிமையாளர்களான அங்கு குடியிராத மக்களுக்கே நிவாரணத்தை வழங்கியது. காரணம் அவர்களே நிலச்சொந்தக்காரர்கள். பின்னொரு முறை வரட்சி வந்தபோதும் பயிரை அழியவிட்டு இழப்பைச் சந்தித்த பயிர்ச்செய்கையாளர்கள் இருக்க, நிலச்சொந்தக்காரர்கள் நிவாரணம் பெற்றனர். தொடர்ந்து நெற்செய்கைக்கான, ஏனைய விவசாய நடவடிக்கைகளுக்கான கடனுதவிகளையும் நிலச்சொந்தக்காரர்களே பெற்றுக்கொள்ள, பயிர்ச்செய்கையிலீடுட்ட மக்கள் சோகம் காத்தனர். காலம் மாறியது. யுத்தம் மூண்டது. இலங்கை இராணுவ முகாம்கள் வீங்கிப் பருத்தன. இந்தநில உரிமையாளர் எங்கோ தொலைவுக்கு வெளிநாடுகளுக்குள் தஞ்சம் புகுந்தனர்.

சொந்த நாட்டுக்குத் திரும்ப முடியாத மக்கள் இருந்த நிலத்தைக் கைவிடாது பயிர் செய்து வாழ வேண்டியதாயிற்று. வவுனியாவில் இப்படி அநேக கோழிசமைத்து குடிவகை எடுத்து விருந்து வைத்துக் கொண்டாடினான் ஒரு தமிழன். நிராகரிக்கப்பட்ட தமிழர்கள் தமது பகுதியில் புதிய ஒரு சங்கத்தை அமைக்கும் முயற்சியில் ஈடுபட முயன்றபோது.

அவர்களுக்கு நில உரிமையில்லை என்றும், அப்பகுதி முழுவதும் அரச காணியுட்பட தனக்கே சொந்தம் என்றும் ஆதிக்கம் செய்ய முன்னைநாள் அரச ஊழியர் ஒருவர் முன்வந்து இருப்பவர்களை எழுந்து வேறிடம் போகச் சொல்கிறார். இதே கிராமத்தில் கடந்த வருடம் இதே போன்று முன்னாள் தமிழ் அரச ஊழியர்களால் விரட்டப்பட்ட தமிழ்க் குடும்பங்கள் இருபதைத்தாண்டி விட்டது.

சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னரே குடிவந்தவர்களின் வாரிசுகள் மறுபேச்சில்லாமல் புறப்படும் போது இவர்களிடம் நீங்கள் போறபோது இந்தக் காணியை என்னிடம் குத்தகைக்கு வாங்கிச் செய்ததாக ஒரு துண்டெழுதித் தந்திட்டுப் போங்கோ." என்றும் இவர்கள் கேட்கிறார்களாம். அப்பாவிகள் அப்படி எழுதிக்கொடுத்துமுள்ளார்கள். இவர்கள் காணிகளை மீளப்பெற்று, பெரும்பான்மை இனத்துக்கு விற்றுவிட்டு ஊரோடு போய்ச் சேரவுள்ளனர். சிலர் இவ்வாறு செய்துவிட்டுச் சென்றுமுள்ளனர்.

தமிழ் மக்களின் குடித்தொகையைக் குறைத்து சிங்கள வாக்காளர்களின் பரம்பலை அதிகரித்து தமிழ்ப் பிரதேசங்களைப் படிப்படியாகச் சிங்களப் பிரதேசமாக மாற்ற முனையும் இச்செயற்பாட்டை சிறிய அளவில் எப்படி எடை போட முடியும். வவுனியாவின் கிழக்கெல்லை. கறுவப் புளியங்குளம்

சிதம்பரபுரம் குடியேற்றம் கூட அதன் அண்மையில் இருந்த சிங்களக் கிராமங்களின் ஆபத்தைத் தவிர்க்கவே அந்நாளில் அங்கு தொடர்ச்சியாகக் குடியிருந்த ஆதிக்குடிமகனும் பதிவாளருமான சிதம்பரப்பிள்ளையவர்களின் முயற்சியில் தான் உருவானது. தமிழர்கள் ஆசிகுளத்தை காவல் செய்து குடியமர்த்தப்பட்டதுடன், சிதம்பரப்பிள்ளையவர்களின் பெயரைக் கொண்டதாகவே இக்கிராமம் அமைக்கப்பட்டது. சிங்களக் காடையர் வந்தாலும் முதற்பலி இவர்கள் வனவிலங்குகள் வந்தாலும் முதல்பலி இவர்கள் உற்பத்தி. தொடர்ந்து நினைத்தது போலவே ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தியாறில் உட்புகுந்த சிங்களக் காடையர் சிதம்பரபுரத்தையும்சூறையாடி சிதம்பரப்பிள்ளை அவரது பேரன் உட்பட ஒன்பது பேரை கொன்றும் பதினேழு பேரைபடுகாயப்பட வெட்டியும் முடித்தனர்.

காட்டிக் கொடுக்கும் கயமைத் தனமுள்ளவர் நம்மிடையே இருந்தாலும் அவர்களை உரிய இடத்தில் நாம் காட்டிக் கொடுக்காமல் 'எமக்கென்ன' என்ற போக்கில் இருக்கிறோம். எமது நாட்டுக்காக உதிரத்தையும் உயிரையும் கொடுக்க ஒருசாரார் இருக்க அந்த உதிரத்தை உறிஞ்சி கொழுக்கவும் ஒரு சாரார் உள்ளனர். அயலைப் பற்றி எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் இல்லாவிட்டால் எமது சந்ததிக்கான அழிவை நாமே தேடிக் கொள்வோம். துரோகிகளை அடிவளவு வரை நடமாட விடும் போது அது அடிமடியில் நெருப்பாகத்தானே இருக்கும்.

மாயா

புலிகளின் தூதுக்குழு ஐரோப்பாவில் நின்றிருந்தவேளை நோர்வேயின் தூதுவர்கள் அங்கு அவர்களைக்கண்டு கதைத்தார்கள். அதன்பின் நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சர் வெதார் கெல்கிசன் இந்தியாவுக்கு வந்தார். அங்கே அவர் இந்திய அரசின் பிரதானி களையும் கொள்கை வகுப்பாளர்களையும்



கண்டு கதைத்தார். அவர் இந்தியாவுக்கு வந்த வேளை ரணில்விக்கிரமசிங்கவும் இந்தியாவுக்கு போனார். அங்கே ரணில் இந்திய அரசின் பிரதானிகளையும் எதிர்க்கட்சிப் பிரதானி களையும் கெல்சிசனையும் கண்டு கதைத்தார். இதே காலப்பகுதியில் சுவிற்சலாந்தின் வெளி விவகார அமைச்சர் மிச்சலின் காமீரி கொழும்புக்கு வந்தார். இங்கே அவர் அரசதரப்பு பிரதானிகளையும் அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளையும் ஏனைய சில முக்கிய பிரமுகர்களையும் கண்டுகதைத்தார்.

இப்படியாக கடந்த இரு கிழமைகளாக கிளிநொச்சியிலிருந்து தொடங்கி ஐரோப்பா, புதுடில்லி, கொழும்பு என்று நான்கு முனை ராஜதந்திர நகர்வு ஒன்று துரிதகதியில் நிகழ்ந்து வருகிறது.

இதில் அதிகம் கவனத்தையீர்க்காத

# சமாதானத்தின் திறப்பு யாருடைய கையில்?

தும் ஆனால் முக்கியத்துவம்மிக்கதுமாகிய ஒரு நகர்வு சுவிற்சலாந்தின் வெளிவிவகார அமைச்சரின் விஜயம் ஆகும்.

ஐரோப்பாவின் மிகப்பெரிய செல்வந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஒருவர் எத்தகைய பரபரப்பும் இன்றி அமைதியாக கொழும்பு வந்து திரும்பியிருக்கிறார். சுவிற் சலாந்தில் புலிகளின் பிரதானிகளுடன் அந் நாட்டின் உயர் அதிகாரிகள் கண்டு கதைத் திருந்ததன் ஒரு பின்னணியில் அவருடைய கொழும்பு விஜயம் நிகழ்ந்திருக்கிறது. அவர் புலிகள் தரப்புத்தகவல் எதையாவது கொழும்புக்கு கொண்டு வந்திருக்கலாம் என்றே பரவலாக ஊகிக்கப்படுகிறது. அதன்படி புலிகள் தமது இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபை பற்றிய வரைபில் பெருமளவுக்கு நெகிழ்ந்து கொடுக்க தயாரில்லை என்ற ஒரு செய்தியை அவர் கொழும்புக்கு கொடுத்திருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது. "பந்து இப்பொழுது உங்களுடைய கையில் அதை புலிகளை நோக்கி எறிவதா இல்லையா என்பதை நீங்களே தீர்மானிக்கவேண்டியிருக்கிறது... எனவே அரசாங்கம் என்ன செய்யவிரும்புகிறது என்பதை தீர்மானிக்கவேண்டியது அரசாங்கத்தைப் பொறுத்தவிசயமே..." என்று அவர் கதிர்காமரிடம் சொன்னதாக ஒரு தகவல் தெரிவிக்கிறது.

இதில், அவர் கொண்டுவந்த செய்தி என்ன? அல்லது அந்த செய்திக்கான அரசாங் கத்தின் எதிர்வினை என்ன? என்பவற்றைவிட முக்கியமானது, அவர் தமிழர் தரப்பு உணர் வலைகளைக் காவிவந்து அரசாங்கத்திடம் கொடுத்திருப்பார் என்று நம்பப்படுவதே.

இது ஐரோப்பா எவ்வளவு தூரத்திற்கு இலங்கைத்தீவின் சமாதான முயற்சிகளில் அக்கறையோடும் ஈடுபாட்டோடும் உள்ளது என்பதைக் காட்டுகிறது. புலிகளை அவர்கள் விருந்தோம்பிய விதத்திற்கூடாகவும் புலிகளை சந்தித்த அந்தந்த நாடுகளின் பிரதானிகளின் பதவிநிலை தகுதிநிலை என்பவற்றுக்கூடாகவும் இது காட்டப்பட்டிருக்கிறது.

சமாதானத்தை பாதுகாப்பது என்றால் அவர்களுக்கு மூன்றுவழிகள் உண்டு. முதலாவது அரசாங்கத்தின் மீது நிர்பந்தங்களை பிரயோகிப்பது. இரண்டாவது அவ்வாறு நிர்ப்பந்தங்கள் பிரயோகிக்கப்படும்போது அரசாங்கம் இந்தியாவின் பக்கம் போகக்க கூடிய வாய்ப்புக்கள் இருப்பதால், இதுவிசயத்தில் இந்தியாவை ஏதோ ஒருவிதத்தில் சமாதானத்தின் ஆகக்குறைந்தபட்ச பங்காளியாக் குவதன்மூலம் இலங்கை அரசாங்கம் இந்தியாவிடமிருந்து உதவிகள் கிடைக்கலாம் என்ற துணிச்சலில் சமாதானத்தை முறித்துவிடாதபடி பார்த்துக் கொள்வது. அதாவது இந்தியா சமாதானத்துக்கு ஆதரவாக இல்லாவிட்டாலும்கூட அது எதிர்நிலைக்கு போய்விடாதபடி பார்த்துக்கொள் வது. மூன்றாவது, புலிகளை அரவணைப் பதன்மூலம் அவர்களை சர்வதேச சமூகத்திற்கு பொறுப்புக்கூறும் கடப்பாடுடையவர்களாக மாற்றுவது.

கடந்த இருவாரகாலமாக முடுக்கி விடப்பட்டிருக்கும் இந்த மும்முனை அணுகு முறை வெற்றிபெறுமா? இதன்மூலம் மெலிந்து கொண்டேபோகும் சமாதானத்தை பாதுகாக்க முடியுமா? இக் கேள்விகளுக்கு விடைகாண்பது என்றால் சிறிது ஆழமாகப்போகவேண்டி யிருக்கும்.

இலங்கைத்தீவின் சமாதான முயற்சி களைப் பொறுத்தவரை தொடக்கத்தில் இருந்தே சமாதானத்திற்கான மேற்கின் மூலோபாயமாக இந்த மும்முனை அணுகுமுறையே இருந்து வருகிறது. இம்முறை யுத்தநிறுத்தம் வழமைக் குமாறாக நீண்டதாக அமைந்ததற்கும் அது ஒரு தற்கொலைக் குண்டுத்தாக்குதலையும் ஒரு மென்தீவிர யுத்தத்தையும் தாங்கும் சக்திமிக்க தாக அமைந்ததிற்கும் இம்மும்முனை



அணுகுமுறையும் ஒரு முக்கிய காரணம்.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங் கம் பதவியிலிருந்தவரை இந்த அணுகுமுறை குறிப்பிடத்தக்க அளவு சோதனைக்குள்ளாக வில்லை. எனினும் குறிப்பாக வொசிங்ரன் மாநாட்டில் புலிகள் நிராகரிக்கப்பட்டபோது இம்மும்முனை அணுகுமுறையின் சமநிலை குழம்பியது. ஆனாலும் அது யுத்த நிறுத்தத்தை முறிக்கும் ஒரு கட்டத்திற்கு வளரவில்லை.

ஆனால் கடந்த ஆறுமாதகாலமாக மேற்படி அணுகுமுறை கடும் சோதனைக் குள்ளாகிவருகிறது. முக்கியமாக மூன்று காரணங்கள் அதைச் சோதனைக்குள்ளாக்கின. முதலாவது, ரணிலின் ஆட்சி பறிக்கப்பட்டது. இரண்டாவது கருணாவிவகாரம். மூன்றாவது, இந்தியாவில் நிகழ்ந்த ஆட்சிமாற்றம்.

முதலாவதின்படி ரணில் ஆட்சியி லிருந்து அகற்றப்பட்டதும் இந்த மூன்று முனை களில் ஒருமுனை தளம்பத்தொடங்கியது. புதிய அரசாங்கம் அதன் பிறப்பாலேயே சமாதானத்திற்கு விரோதமானதாக காணப்பட் டது. ரணில் செய்துவந்த சமாதானத்தை பலியிட்டே இப்புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தது. இந்த அரசாங்கம் சமாதானத்தை பாதுகாப்பது என்றால் அது அதன் பிறப்பியல் புக்கு மாறான ஒன்று.

சந்திரிகாவின் இறுதி இலக்கு இப் பத்தியில் தொடர்ச்சியாகக் கூறப்பட்டுவருவது போல யுத்தமும் அல்ல சமாதானமுமல்ல தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பதற்கான ஒரு அரசியலமைப்பு மாற்றமே அவருக்குத் தேவை. அதை அடைவதற்கு ஒரு கருவியாக அவர் யுத்தமும் செய்யலாம் சமாதானமும் செய்ய லாம். அதாவது அவருடைய தனிப்பட்ட ஆசைகளின் வலைக்குள் சமாதானம் சிக்குண்டு விட்டது. அதை எப்படி விடுவிப்பது என்பதே இப்பொழுதுள்ள பிரச்சினை. அதாவது சமாதானத்தின் மூன்று முனைகளில் ஒரு முனையாகிய அரசாங்கத்தின் முனை தொடர்ந்தும் எதிர்வு கூறமுடியாததாக எளிதில் கையாள முடியாததாக தளம்பலான தாக; காணப்படுகிறது என்பதே இப்போதுள்ள மெய்நிலை.


இரண்டாவது, கருணாவின் பிரச் சினை, இதன்படி புலிகளின் பேரம்பேசும் சக்தி குறைந்துவிடும் என்றே முதலில் எதிர்பார்க்கப் பட்டது. கருணாவை கையாள்வதன்மூலம் சந்திரிகா புலிகளின் பேரம்பேசும் சக்தியை உடைத்துவிடலாம் என்று நம்பினார். இது ஒரு மென்தீவிர யுத்தத்தை தொடக்கிவைத்தது.

**நிலாந்தன்**

ஆனால் புலிகள் தமது உள்வீட்டுப் பிரச்சினையை தமக்கேயான பாணியில் தீர்த்துக்கொண்டதையடுத்து இந்த மென்தீவிர யுத்தம் தற்சமயம் தணிந்துவருகிறது. மேற்கு நாடுகளின் மும்முனை அணுகுமுறைக்கு உட்படும் ஒருமுனையில் ஏற்பட்ட சிறுதளம்பல் குறுகிய காலத்துள் சீர்செய்யப்பட்டுவிட்டது. தமது பேரம்பேசும் சக்தி கேள்விக்கிடமற்றது என்பதை புலிகள் நிரூபித்துக்காட்டியிருக் கிறார்கள். அதாவது மூன்றுமுனைகளில் மற்றொரு முனையாகிய புலிகளின் முனை ஸ்திரமாகவே உள்ளது.

மூன்றாவது, இந்தியாவில் ஏற்பட்ட ஆட்சிமாற்றம். இந்தியாவில் இப்பொழுது மன்மோகன்சிங்தான் பிரதமர் எனினும் சோனியா காந்தியே "கிங்மேக்கர்." எனவே தீர்மானிக்கும் சக்தியாக சோனியா காந்தியே இருக்கும் அரசாங் கத்துடன் சேர்ந்து ஒத்துழைப்பதன்மூலம் புலிகளை மடக்கிவிடலாம் என்று இலங்கை அரசாங்கம் நம்பியது. மறுபடியும் ஒரு யுத்தம் மூண்டால் புலிகளை எதிர்கொள்வதற்கு வசதி யாக இந்தியாவுடன் ஒரு பாதுகாப்பு உடன்படிக் கையை செய்துகொள்ளமுடியும் என்று கொழும்பு இப்பொழுதும் நம்புகிறது.

ஆனால், இலங்கை அரசாங்கம் எதிர் பார்த்த அளவுக்கு மன்மோகன்சிங்கின் அரசாங் கம் சமாதானத்திற்கு நேர்எதிரான வெளிப்படை யான ஒரு நிலைப்பாட்டை இன்னமும் எடுக்க வில்லை. சோனியா காந்தியை "சென்ரிமென் ரலாக"க் கையாளலாம் என்ற அவர்களுடைய எதிர்பார்ப்பும் இதுவரை நிறைவேறவில்லை. அண்மையில் டில்லிக்குப்போன ரணிலுக்குக் கிடைத்த அளவு வரவேற்பும் மதிப்பும் ரணில் போவதற்கு சிறிது காலத்திற்கு முன்புபோன அனுராபண்டாரநாயக்கவுக்குக்கிடைக்க



வில்லை என்பதை இங்கு சுட்டிக் காட்டவேண்டும். முன்னைய இந்திய அரசாங்கததைப் போலவே இந்த அரசாங்கமும் வெளிப் படையாக சமாதான முயற்சிகளை ஆதரிப்பது போன்ற ஒரு தோற்றத் தையே காட்டிவருகிறது. சந்திரிகா முதலில் கற் பனை செய்ததுபோல புதுடில்லியை இன்னமும் இந்த சமாதானச்சிக்கலில் எளிதில் மாட்டிவிடமுடிய வில்லை. இதை சமாதானம் செய்யும் நாடுகள் மிக வாய்ப்பான ஓர் அம்சம் என்று நம்புவது தெரிகிறது.

அதாவது மேற்கு நாடுகளால் கையாளப் படவேண்டிய மூன்றாவது முனையும் ஒப்பீட்டள வில் பெரிய மாற்றங்களின்றியே உள்ளது. எனவே ஒப்பீட்டளவில் ஸ்திரமாக காணப்படும் இரண்டு முனைகளையும் அதாவது கிளி நொச்சியையும் புதுடில்லியையும் அதிகம் கவனமெடுத்து கையாள்வதன்மூலம் தளம்பிக் கொண்டிருக்கும் மூன்றாவது, முனையாகிய கொழும்பை ஓரளவிற்காவது தமது செல்வாக்கு வீச்செல்லைக்குள் கொண்டு வந்துவிடலாம் என்ற நம்பிக்கையோடு மேற்கு நாடுகள் காய்களை நகர்த்துவது தெரிகிறது. மேற்கின் விசுவாசிகளான ரணிலும் மிலிந்த மொறகொட வும் புதுடில்லிக்கு போனதையும் அங்கே அவர்கள் கெல்கிசனைச் சந்தித்ததையும் இந்த விளக்கத்தின் பின்னணியில் வைத்தே புரிந்து கொள்ளவேண்டும். இதுதவிர சந்திரிகா விரை வில் இந்தியாபோகவிருப்பதையும் இங்கே சுட்டிக்காட்டவேண்டும்.

அதாவது, சமாதானத்திற்கு எதிரான ஒரு பகிரங்க கூட்டில் இணையும் முடிவை இந்தியா இன்னமும் எடுக்கவில்லை. மேற்கு நாடுகள் இதை ஒரு சாதகமான அம்சமாக கருதி காய்களை நகர்த்துவது தெரிகிறது. இந்தியாவுக்கு ஊடாக இலங்கை அரசாங்கத்தை கையாள்வது என்ற ஒரு தெரிவு அவர்களுக்கு மிக வசதியானதாகவும் யதார்த்தமானதாகவும் இருக்கலாம். புவிசார் அரசியல் யதார்த்தமும் அப்படித்தான் இருக்கிறது. சமாதானத்தின் திறப்பு இந்தியாவிடம்தான் உள்ளது.

ஒரு புறம் புலிகளின் அரசியல் அந்தஸ்தை உயர்த்துவது. இன்னொருபுறம். இந்தியாவை இலங்கைத்தீவின் சமாதான முயற்சிகளில் கொள்கைரீதியிலான பங்காளி யாக மாற்றுவது. இந்த இரண்டு வழிகளின் ஊடாகவும்தான் தேங்கிநிற்கும் சமாதானத்தை ஓரளவுக்கேனும் அசைக்கலாம். இதிலும்கூட அதிகம் ஆசைப்படமுடியாது.சமாதான முயற்சி களை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவது என்பது இப்போது நிலவும் யுத்தநிறுத்தம் ஒரு யுத்தத் திற்கு திரும்பிச்செல்வதை தடுப்பது மட்டுமே. இதற்குமப்பால் சமாதானத்தை குறித்த வீணான கற்பனைகளை வளர்த்துக்கொள்ளமுடியாது. ஏனெனில் இலங்கைத்தீவின் அரசியல் யதார்த் தத்தை பொறுத்தவரை யுத்தத்தை ஒத்திவைப் பதே சமாதானம் எனப்படு கிறது. இதில் வரக்கூடிய ஒரே ஒரு கேள்வி எவ்வளவு காலத் திற்கு யுத்தத்தை ஒத்திவைக்கலாம் என்பதே. ●

# நறுக்கென...

## யானை மீது ஏறிய திலக்கருணாரத்ன



புலிகளின் வாலை ஒட்ட நறுக்குவேன் என சூளுரைத்து வில்லும் அம்பும் ஏந்தி களம் புகுந்த அந்த கண்ணாடி அணிந்த தாடிக்காரப் பேர்வழியை அதுதான் திலக்கருணாரத்ன என்ற சிகல உறுமயகட்சியின் முக்கியஸ்தர் தெரியும்தானே....!

வில்லில் அம்பை எப்படி எந்தப் பக்கம்வைத்து நானேற்றுவது என்று தெரியாமல் சிங்கள மக்களை காப்பாற்ற அரசியல் களம் புகுந்த அந்த சிறிலங்காவின் சுப்பிரமணிய சுவாமியையும் அவரது சிகலஉறுமய கட்சியையும் சிங்கள மக்கள் எப்படி நிராகரித்தார்கள் என்பதும் தெரியும் தானே...!

வாய்ச்சவடால் அடிப்பதில் வல்லவரான இந்த தாடிக்கார ஆசாமி சிறிலங் காவின் அனைத்து அரசியல்வாதிகளையும்-குறிப்பாக சமாதானம் என்ற சொல்லை உச்சரிக்கும் அனைவரையும் சிங்கள இனத்திற்கு துரோகம் செய்பவர்கள் என தனது சகாவான மற்றக்கண்ணாடிக்காரர் சம்பிக்கரணவக்கவுடன் பெரும்பான்மை இனத்தவரை தங்களாலேயே ரட்சிக்க முடியும் என்று கூறிக்கொண்டு நாலைந்து வருடங்களின் முன்னர் சிகலஉறுமயவை ஆரம்பித்த வேகம் இருக்குதே....! அதனை வார்த்தைகளால் வர்ணிப்பது கடினம்.

பேரினவாதப் பிக்குகள், சிந்தனையாளர்கள், அறிவுஜீவிகள், ஓய்வு பெற்ற இராணுவ உயரதிகாரிகள்,

ஏன்...அந்த புகழ்பெற்ற சிங்கள இனவெறியர் கே.எம்.பி ராஜரத்ன கூட அவர்களுடன் அணிசேர்ந்து தமிழர்களுக்கு எதிராக அணிதிரண்டபோது எல்லோருமே கொஞ்சம் மிரண்டுதான் போனார்கள். அவ்வளவுதான் முதல் தேர்தலிலே அவர்கள் நாடி தளரும் அளவுக்கு சிங்கள மக்கள் மரணஅடி கொடுத்துவிட்டார்கள்.

தேசியபட்டியல்மூலம் கிடைத்த ஒரே ஒரு ஆசனத்திற்காக S.L குணசேகர, திலக்கருணாரத்ன, சம்பிக்க ரணவாக்க ஆகியோர் 'சங்கீதக் கதிரை' போன்ற 'பதவி கதிரை' விளையாட்டில் இறங்கிய கோலம் இருக்கிறதே...! தங்களைத்தாங்களே அரசியல் குப்பைகளாக இனங்காட்ட அவர்கள் ஆடிய ஆட்டம் அதுவேயாகும். அதன்பிறகு சிகல உறுமய, ஜாதிகஹெல உறுமயவாக மஞ்சள் அங்கிகளைப் போர்த்தி உருமாற்றம் செய்துகொண்டும், மதவாத அரசியல் பேசிக்கொண்டும், பிக்குமாரை முன்னேவிட்டு பின்னால் பதுங்கியபடி செல்லும் மூலோபாயத்தை வகுத்து அரசியல் பேச முயன்றது ஓரளவு வெற்றிபெற்றது. ஆனால் பிக்குமார் கைதேர்ந்த அரசியல் வாதிகளாக தம்மை வெளிப்படுத்த முயன்றபோது...திலக்கருணாரத்ன கும்பலை அவர்கள் தூக்கிவீசவேண்டிய தாயிற்று. இப்போது அந்த தாடிக்காரர் புலியின் வாலையும் பிடிக்கமுடியாது மஞ்சள் அங்கியிலும் தொங்கமுடியாது, கடைசியில் அந்தப்பழம் பெரும் யானையின் முதுகில் ஏறிச்சவாரிவிடும் நோக்கில் முதலில் வாலைப்பிடித்து தொங்கத்தொடங்கியுள்ளார்- அதாவது ஐக்கிய தேசியக் கட்சியில் ஒட்டிக்கொண்டார். அதாவது ரணிலுக்கு ஏழரைச்சனி பிடித்துவிட்டது.

இந்த மோசமான சமாதான எதிர்ப்பாளரை இணைத்துக்கொண்டு ரணிலின் சமாதான யானை எப்படி நகரப்போகிறதோ?

இவ்வளவு காலமும் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகளை விமர்சிப்பதையே,, எதிர்ப்பதையே தொழிலாக-இலட்சியமாகக் கொண்டிருந்த திலக்கருணரத்ன இனிமேல் அதனை பகிரங்கமாக விமர்சிக்க மாட்டேன் என பிரகடனம் செய்துள்ளார்....

அரசியல் சந்தர்ப்பவாதம் என்றால் இதுதான் பாருங்கோ...!

---



மல்வத்தை பீடாதிபதியா? கொக்கா? என்ன புதிர் போடுகிறேன் என்று நினைக்கிறீர்களா? மல்வத்தை பீடாதிபதி அதி. வண திப்பொட்டுவாவே சிறி சித்தார்த்த சுமங்கலதேரர், கண்டியில் உள்ள மகாவிகாரையில் வைத்து தன்னைச் சந்தித்த இந்தியத் தூதுவர் நிருபமா ராவிடம் நாட்டுக்கும் மக்களுக்கும் மிகவும் அவசியமான பலவிடயங்கள் குறித்தும், அரசியல் சூழ்நிலைகுறித்தும் உரையாடியுள்ளாராம். இங்கு முக்கியமாகக் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம் ஒன்றுண்டு. அதாவது இந்த நாட்டின் அரசியல் சூழ்நிலை குறித்து அரசவாழ்வைத் துறந்து ஞானியான ஒருவரின் வழிநடக்கும் துறவியொருவருடன் ஆலோசனை கலக்கும் நிலை

## மல்வத்தை பீடாதிபதி கொக்கா... மீனா...?

இந்தியத்தூதருக்கு ஏற்பட்டுள்ளது என்பதே அதுவாகும்.

இங்குள்ள எத்தனையோ அரசியல் தலைவர்களிடம் அறியமுடியாத அரசியல் விடயங்கள் மகாநாயக்கர் வசம் இருக்கிறது என இந்தியத்தூதர் நம்புகிறார்; அவ்வளவுதான். அவருக்கு தெரியும் ஆன்மீக பீடங்கள்தான் அரசியற்பீடங்களை ஆட்டிப்படைக்கும் மாபெரும் சக்தியாக இயங்குகின்றன என்பது......இந்தியாவின் சங்கர பீடத்தின் ஆளுமையை அவர் உணர்ந்தவர்தானே....!

சரி மல்வத்தை பீடாதிபதி இந்தியத் தூதரிடம் என்ன கூறியிருப்பார் அல்லது கேட்டிருப்பார் என நினைக்கிறீர்கள்?

' நாட்டில் சமாதானம் ஏற்பட உதவுங்கள், தமிழ்மக்களுக்கான உரிமைகளை வழங்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுங்கள், போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களின் புனர்வாழ்வுக்கும், அந்தப்பகுதிகளின் புனரமைப்புக்கும் உதவுங்கள்' என்று அவர் கூறியிருப்பாரேயானால் அவர் அதிவணக்கத்திற்குரிய மகாநாயக்கர்தான்....

ஆனால் அவர் அப்படி தன்னை இனங்காட்டவில்லை...

'வடக்கு, கிழக்கில் அமைந்திருந்த புத்தவிகாரைகளை மீண்டும் அதே இடங்களில் கட்டியெழுப்பவும், தேவைப்படும் இடங்களில் புதிய விகாரைகளை நிர்மாணிக்கவும் இந்தியா உதவவேண்டும்' என்றல்லவா இந்தியத் தூதரிடம் கூறியுள்ளார் அவர்.

'பெரீரீய்ய... ஆன்மீக வாதிதான்'...?!

அதுமட்டுமல்ல 'இலங்கையில் ஆட்சியில் இருந்த எந்தவொரு அரசும் எந்தவொரு கட்சியும் தமிழ்ச் சிறுபான்மையினத்திற்கு எந்தவொருதீங்கையும் நினைக்கவில்லையாம்.... செய்யவுமில்லையாம்... புத்ததர்மத்தின் படி சமாதானத்தை விரும்பும் மக்களாகத்தான் சிங்கள-பௌத்த மக்கள் இருந்து வருகிறார்களாம்.....!"

'எப்படி இருக்கு மகாநாயக்கரின் மெகாஜோக்'?

அப்படியானால் இதுவரை சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்திய யுத்தமெல்லாம் புத்த தர்மத்தின்படி சமாதானத்திற்கென மேற்கொள்ளப்பட்ட ஆன்மீக ரீதியிலான நடவடிக்கை என்றா மகாநாயக்கர் கூறுகிறார்?

அட கர்மமே....?அதைத்தான் விடுங்கள்.... இதற்கு அந்த இந்தியத் தூதுவர் என்ன கூறினார். தெரியுமா? 21 வருடங்களின் முன்னர் தான் வந்தபோது நாடு பௌத்ததர்மத்தின் அடிப்படையில் எப்படி அமைதியாக இருந்ததோ அதேபோன்று இன்றும் அந்தமக்கள் அதேபௌத்த தர்மத்தை கடைப்பிடிக்கிறார்கள்.... என்பதுதான்

எந்த சுவரிலபோய் முட்டுவதாம்?

# அழுத்தங்களால் தடுமாறும் சனாதிபதி சந்திரிகா...!



என்ன சந்திரிகாவின் சத்தத்தையே கடந்த ஓரிரு வாரங்களாகக் காணவில்லை என்று யோசிக்கிறீர்களா? கடந்தமாதத்தில் அம்மணி தனது வெளிநாட்டு விஜயங்களின்போது எல்லா இடங்களிலும் (ஐ.நா.சபை உட்பட) அவர் மேற்கொண்ட ராஜதந்திர -பிரசார நடவடிக்கைகளின் பெறுபேறுகளையும், எதிர்காலத்தில் கிடைக்குமென கணக்குப்போட்டிருந்த அனுகூலங்களையும் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் உட்பட பல முக்கி[illegible]ஸ்தர்களின் வெளிநாட்டு விஜயங்கள் மிகச்சுலபமாக உடைத்[illegible]விடும் என அவர் கனவு கூடக்கண்டிருக்கமாட்டார்.

பத்தாக்குறைக்கு ரணிலின் வெளிநாட்டு விஜயமும் சந்திரிகாவு[illegible] நெருக்கடியை ஏற்படுத்தும் வகையிலேயே தாக்கங்களை ஏற்படுத்தும்போலுள்ளது.

அடுத்தது பங்காளிச்சண்டை நீறுபூத்த நெருப்பாக கனன்று கொண்டே உள்ளது. வெளிக்கு எங்களுக்குள் ஒன்றுமில்லை என சந்திரிகாவும் ஜே.வி.பியினரும் பேசிக்கொண்டாலும் சந்திரிகாவினதும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியினதும் அரசியல் எதிர்காலம் என்பது ஜே.வி.பியினரால் மெல்ல மெல்ல பாழடிக்கப்பட்டு வருவதை சந்திரிகா உணராமலில்லை.

எப்படியோ தவிர்க்க முடியாமல் ஒட்டிக்கொண்டுவிட்ட இந்த ஒட்டுணணியை (ஜே.வி.பியை) எப்படி சமாளிப்பது என்பதே இப்போது அவருக்கு தலையைச் சுற்றவைக்கும் விடயமாகும்.

அரசிற்குள் இருந்துகொண்டே இந்த அரசு மக்கள் நலனில் எந்தவிதமான அக்கறையையும் எடுக்கவில்லை என பொதுக்கூட்டங்களில் அரசை விமர்சிக்கும் ஜே.வி.பிஅமைச்சர்களின் செயல்கள் தன்னை கடுமையாக விமர்சிப்பதையே இலக்காகக்கொண்டுள்ளதை சந்திரிகாவினால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்வதன்மூலம் சமாதான முயற்சிக்குள்ளும் இந்தியாவை வலிந்து இழுத்து பிரச்சினையை சிக்கலாக்கும் சந்திரிகாவின் தந்திரத்திற்கு இடையூறாக இந்தியாவின் சேது சமுத்திரத் திட்டம் உருவாகியுள்ளது.

இத்திட்டம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு அ[illegible]து எனக்கூறி ஜே.வி.பி அதனை ஏற்றுக்கொள்வதாக இல்லை. இந்தவிடயத்தில் கதிர்காமரு[illegible]ந்தியாவை மெல்லச் சாடத் தொடங்கியுள்ளார்.

ஆனால் இந்தியாவில் வைத்தே ரணில் அதை வரவேற்று அரசுக்கு சிக்கலை உருவாக்கிவிட்டுள்ளார்.

ஒருபக்கம் இந்திய அழுத்தம், இன்னொருபக்கம் அமெரிக்க அழுத்தம் அவர் பக்கம் ஜே.வி.பி அழுத்தம் எதிர்ப்பக்கம் ரணில் அழுத்தம்... என சந்திரிகாவின் நிலை தர்மசங்கடமாகியுள்ளது.

இதேவேளை விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் உட்பட முக்கியஸ்தர்கள் சிலர் ஐரோப்பிய நாடுகளுக்கான தமது விஜயத்தை சமாதானம் தொடர்பான தமது தெளிவானதும், உறுதியானதும், நியாயமானதுமான நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்[illegible]ற்கு விளக்குவதற்கு பயன்படுத்திவருவதுடன், இலங்கை அரசின் ஸ்திரமற்ற கொள்[illegible] நிலைப்பாட்டையும் விளக்கிவருகின்றமையானது, பிரசாரயுத்தத்திலும் அரசுக்கு நெருக்கடியை உருவாக்கியுள்ளது.


அது சரி இந்த நிலையில் சந்திரிகா என்னதான் செய்யப்போகிறாராம்.

அரசு சரி எப்படியானாலும் தனது நிறைவேற்று அதிகார சனாதிபதிப் பதவியை மட்டும் தக்கவைத்துக்கொள்ளும்வகையில் அரசியலமைப்பில் ஏதாவது மாற்றம் கொண்டுவரமுடியுமா என்பது குறித்து யோசித்துக்கொண்டிருக்கிறாராம்!

இது சம்பந்தமான தனது முயற்சிகள் வெற்றியளிக்குமா என்பது குறித்து ஜோதிடர்களுடன் ரகசியமாக ஆலோசனை கேட்டும்வருகிறாராம்...!

---

# சொல்ஹெய்முக்கு பிடிபடவில்லையா...?



தனது கடைசிக்காலத்தில் தமிழரசுத் தந்தை செல்வதாயகம் அவர்கள் 'கடவுள்தான் இனித் தமிழினத்தைக் காப்பாற்றவேண்டும்'என்று கூறியதாக பரவலாக ஒருகதை பேசப்படுவதுண்டு.

அது உண்மையோ... பொய்யோ...வேறுவிடயம்.அவர் அப்படிச் சொல்லியிருப்பாரேயானால், தனக்கு அடுத்த தலைமைக்கு வரமுனைபோரின் தமிழ்த் தேசியத்தின் மீதான பற்றுறுதியில் அவருக்கு நம்பிக்கை இருந்திருக்கவில்லை என்பதே அர்த்தமாகும்.

சரி அதை விடுங்கள்....

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த அலையாய் அலைந்தலைந்து நொந்துபோய் இருப்பவர் ஒரேயொரு நபர்தான். புரிகிறதுதானே......! அவரேதான்.... சொல்ஹய்ம்தான்... சமாதானம் பேச இலங்கையுள் காலடிஎடுத்து வைத்தபோது இப்படி ஒரு இடியப்பச் சிக்கலான பிரச்சினைக்குள் இறங்குகிறேன் என அவர் எண்ணியே இருக்கமாட்டார்; இறங்கிவிட்டார். ஆனால்அந்தச் சிக்கலுக்குள் சிக்கியுள்ள தன்னையும், சமாதானத்தையும் விடுவிக்க அவர்படும் அவஸ்தை இருக்கிறதே.... மனிதர் விக்கிரமாதித்தன்தான்.

அடிக்கடி முருங்கை மரத்தில் தொத்திக்கொள்ளும் பேரினவாதத் தலைமைகளை (வேதாளங்களை என்று நினைத்துக்கொள்ளுங்களேன்....) சளையாது ஏறி இறங்கிக்கொண்டு சமாதானம் நோக்கி நடப்பதென்பது சாமானிய வேலையா?

கொழும்பு, ஒஸ்லோ, டோக்கியோ, வொஷிங்கடன், லண்டன், சுவிஸ் புதுடில்லி என ஓய்வின்றி அவர் பறந்தலைவது ஒரு கடுகுத் தீவில் சமாதானத்தை ஏற்படுத்தத்தான் என்றால் எவரும் நம்பமாட்டார்கள்தான்.!

ஆனால் உண்மை அதுதான்... கடந்த சிலவாரங்களாக நம்பிக்கை தளர்ந்துவிட்டநிலையிலும் அவர்தனது முயற்சிகளில் சோர்வடையாது, தனது நாட்டுக்கொடியை கொழுத்தி, அவமதித்து, தனது கொடும்பாவியை கட்டியிழுத்து எரித்து, தனது முயற்சிகளை நிராகரித்து, அவமானப்படுத்திய சிங்கள ஆட்சியாளருடன் சமாதானத்தை வலியுறுத்திப்பேசுவதென்பது எவ்வளவு கடினம் எனத் தெரிந்தும்... தொடர்ந்தும் முயற்சி செய்கிறாரே அவரை மதிக்கத்தான் வேண்டும்.

ஆனாலும் நம்பிக்கையற்ற நம்பிக்கையுடன்தான் அவர் தனது முயற்சிகளில் தற்போது ஈடுபடுகிறார் என்பதை கடைசியாக அவர் தெற்கு சமாதான நிதிய அமைப்பைச் சேர்ந்தவர்களுடன் பேசும்போது கூறிய வார்த்தைகள் உணர்த்தி நிற்கின்றன.

மேற்படி அமைப்பைச் சேர்ந்தவர்கள் அவரிடம் இடைக்கால நிர்வாக அதிகார சபையின் அடிப்படையில் விரைவில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க நீங்கள் உதவவேண்டும் எனக் கோரியபோது சொல்ஹய்ம் கூறியது-

"இடைக்கால நிர்வாக வரைவின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பமாக வேண்டுமென இறைவனைப் பிராத்தியுங்கள்"

எரிக்சொல்ஹெய்ம் கூறிய இந்த வார்த்தைகளின் பின்னணியில் அவரது நம்பிக்கையீனம் , சலிப்பு, எல்லாவற்றிலும் மேலாக பிரச்சினை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வரப்போவது கிடையாது என்ற தொனி ஆகியவை தென்படுகிறதல்லவா, பேரினவாத சாத்தான்களை கடவுளாலும் கட்டுப்படுத் முடியாது என்ற உண்மை சொல்ஹெய்ம் அவர்களுக்கு தெரியாது போலும்.... நாம் என்ன செய்யமுடியும்.

செங்குட்டுவன்

# டக்ளசின் சிங்கள அரசியல் விசுவாசமும் சிங்கள புலனாய்வு விசுவாசமும்

நீலன்

டக்ளஸ் குழுவின் மீதான தாக்குதல்களை பிஸ்டல் குழுவினர் தீவிரப்படுத்தியுள்ளமை அண்மைக்காலத்தாக்குதல் சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன.

டக்ளசின் நம்பிக்கைக்குரியவர்களான பாலா, ரமணி, அருள்தாஸ், பவான், சிங்கன் ஆகியோர் பிஸ்டல் குழுவினரால்சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறான தாக்குதல்களால் டக்ளஸ் குழுவினர் மத்தியில் விரக்தியும், சோர்வும், குழப்பமும், நம்பிக்கையின்மையும் தோன்றியுள்ளன. இதனால் டக்ளசின் நம்பிக்கைக்குரிய தோழர்கள் சிலர் தலைமறைவாகியுள்ளனர்.

இந்த நெருக்கடி நிலையிலிருந்து டக்ளஸ் குழுவினரை பாதுகாக்க சிங்கள அரசு முயல்கின்றது. சனாதிபதியின் கண்டன அறிக்கைகளும் பாதுகாப்பை பலப்படுத்தும் படியான உத்தரவுகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

சிங்கள அரசு டக்ளஸ் குழுவினரை பாதுகாப்பதில் அக்கறை காட்டும் மர்மங்கள்தான் என்ன? அது தமிழர்களின் கவனத்தை உரிமைப் போராட்டத்திலிருந்து திசை திருப்பும் சூழ்ச்சிகரமான அரசியலுக்காக அவர்களை பயன்படுத்துவதற்கே.

சிங்கள அரசியல் வாதியான மகிந்த விஜேசேகரா இரிதா பெரமுன பத்திரிகைக்கு வழங்கிய கருத்துக்களும் அந்த உள்நோக்கங்களையே பிரதிபலிக்கின்றன.

அவர் தமிழரின் படைப்பலமாக எழுச்சி பெற்றிருக்கும் புலிகளுக்கு எதிராகவுள்ள எந்தவொரு தமிழ்க்குழுவையும் சக்தியுள்ள அமைப்பாக உருவாக்கி அக்குழுவை இலங்கைக்கும் உலகிற்கும் அறிமுகம்செய்து வைத்து, அக்குழுவினரைப்பயன்படுத்தி தமிழர்களுக்குள் உட்சென்று தமிழர்களின் தேசியப்பலத்தை சீர்குலைத்து சிதைக்க வேண்டுமென குறிப்பிட்டிருந்தார்.

விஜேசேகரா போன்ற சிங்கள தலைவர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற டக்ளஸ் 87 இறுதிக் காலப்பகுதியில் சிங்கள அரசியல் களத்தில் குதித்தார். அவர் லக்ஸ்மன் பிரேமச்சந்திராவுடன் சமரசம் செய்த பின்னர் பிரேமச்சந்திராவின் கொலன்னாவ வீட்டில் தங்கியிருந்தபடி தனது அரசியல் வேலைகளை முன்னெடுக்கத் தொடங்கினார். காலநகர்வில் அவருக்கு பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ணாவுடனான உறவு நெருக்கமாகியது.

சிங்கள அரசு டக்ளசை வைத்து தமிழின ஆயுதப்போராட்டத்தை சிதைக்க ஒரு வழி கண்டுபிடிக்கப்பட்டதாக கருதி, அரசு தமது பாதுகாப்பு நிதிஒதுக்கீட்டிலிருந்து அவருக்கு மாதாந்தம் பண ஒதுக்கீட்டை ஒழுங்குசெய்தது.

**டக்ளஸ் மக்கள் கட்டமைப்புள்ள தளங்களைப் பயன்படுத்தி புலிகள் பற்றிய தகவல்களையும், புலிகளின் ஆதரவாளர்கள் பற்றிய தகவல்களையும் சேகரித்து சிங்கள இராணுவப் புலனாய்வு பிரிவிற்கு (MIC) வழங்கிவருகின்றார்.**

**அவரது மாவட்டச்செயலகங்கள் அனைத்தும் இராணுவப்புலனாய்வு பிரிவிற்கு கீழ் இயங்குகின்ற முகவர் நிலையங்களாகும்.**

டக்ளஸ் அரசிடமிருந்து பணம் பெறுவதனையும், தனது குழுவினர் கூலிப்படையாக இயங்குவதனையும், 26.11.2000ஆம் ஆண்டு பத்திரிகையாளர் மாநாடு ஒன்றின்போது ஒப்புக்கொண்டிருந்தார் என்ற செய்தியை சரிநிகர் விபரித்திருந்தது. ஆகவே டக்ளஸ் தமிழினத்தின் சுயமரியாதையை பலியிட்டும், சிங்களம் போடும் எலும்புத்துண்டை கவ்வி சுவைக்கும் கேவலமான அரசியலை விரும்பி ஏற்றுள்ளார்.

அவருடைய சிங்கள அரசியல் மீதான விசுவாசத்தால் அரசு அவருக்கு அமைச்சர் பதவிகளை வழங்கியது. அமைச்சர் பதவிக்குள் சூழ்ச்சிகரமான அரசியல் புதைந்து கிடக்கின்றது. இது தமிழர்களின் போரிடும் ஆற்றலை செயலிழக்கச்செய்வதாகவும், தமிழீழ தாயக இலட்சிய இலக்கை தமிழர்கள் அடையவிடாது தடுப்பதாகவும் இருக்கின்றது.

அவரின் சூழ்ச்சிகரமான அரசியல் அரங்கில் ஒலிக்கும் குரல்கள் தமிழர்களின் விடிவுக்காக பாடுபடுகின்ற ஒரு அரசியல் வாதியாக சித்தரிக்கின்றன. ஆனால் அவைகள் யாவும் கொடூரமான ஓநாய் விடுகிற முதலைக் கண்ணீராகும்.

டக்ளஸ் அரசிடமிருந்து பெறும் நிதியில் தமிழர்களை வசதிவாய்ப்புக்களை, அற்பசலுகைளை எதிர்பார்த்து வாழும் அடிமைச் சமூகமாக மாற்றி, அரசினது எதிர்பார்ப்பிற்கு அமைவாக தமிழர்களின் போராடும் மனப்பாங்கை இல்லாதொழிக்கமுனைகின்றார். இது ஒரு புறமாக நடைபெற்று வர மறுபுறமாக அரசு பெரியளவிலான நிதியை ஒதுக்கி சிதைந்து போயுள்ள தமது போர் ஆற்றலை பன்மடங்கு அபிவிருத்திசெய்துவருகின்றது.

அரசினது வஞ்சக அரசியல் தளத்தில் நின்று டக்ளஸ் தமிழர்களுக்கு செய்யும் துரோகமானது தமிழினத்தின் விடுதலைப்போர் வளர்ந்து இருக்கும் பெரிய விருட்சத்தின் வேருக்குநீர் ஊற்றுவதற்கு பதிலாக வெந்நீர் ஊற்றி அதை நாசம் செய்ய முயல்வதாகும்.

டக்ளஸ் கோடாலிக்காம்பாக செயலாற்றும் அதேசமயத்தில் காட்டிக்கொடுக்கும் துரோகியாகவும் செயலாற்றுகின்றார். அதாவது அவரும் அவரது தோழர்களும் சிங்கள இராணுவப் புலனாய்வுப் பிரிவின் (MILITARY INTELLIGENCE CORPS) முகவர்களாக இயங்குகின்றார்கள்.

புலனாய்வுப் பணிகள் போர் நிலவிய காலத்திலும் சரி, சமாதானம் நிலவும் காலத்திலும் சரி மறைமுகமாக நடைபெறுபவைகளாகும்.

அவர் புலனாய்வுப் பணிகளை இலகுவாக முன்னெடுக்க மக்கள் கட்டமைப்புகளை அமைத்துள்ளார். அவ் அமைப்புகளில் அபிவிருத்தி தொண்டர்கள் போக்குவரத்து கண்காணிப்புத் தொண்டர்கள் ஆகியவை முக்கியமானதாகும்.

டக்ளஸ் மக்கள் கட்டமைப்புள்ள தளங்களைப் பயன்படுத்தி புலிகள் பற்றிய தகவல்களையும், புலிகளின் ஆதரவாளர்கள் பற்றிய தகவல்களையும் சேகரித்து சிங்கள இராணுவ புலனாய்வு பிரிவிற்கு (MIC) வழங்கி வருகின்றார்.

அவரது மாவட்டச்செயலகங்கள் அனைத்தும் இராணுவப் புலனாய்வு பிரிவிற்கு கீழ் இயங்குகின்ற முகவர் நிலையங்களாகும்.

சிறிலங்கா இராணுவப்புலனாய்வு பிரிவினர் அரசின் புனர்வாழ்வுப் பணிக்களங்களையும், புனர்வாழ்வு அகதிமுகாம்களையும் தமது புலனாய்வு நடவடிக்கைக்கும் பயன்படுத்தி வருகின்ற தகவல்களை ஆதாரங்களுடன் சுடர்ஒளி 30.09.2002ஆம் ஆண்டு செய்தித்தாளில் பகிரங்கப்படுத்தியுள்ளது. இச்செய்தியானது டக்ளஸ் எம்.ஐ.சியுடன் இணைந்தியங்குவதை வெளிப்படுத்தியிருக்கின்றது.

மேலுமொரு சான்றுள்ள தகவலை 10.03.2002திகதி நிகரி செய்தித்தாள் விபரித்துள்ளது. அது என்னவெனில் மட்டக்களப்பிலுள்ள டக்ளஸ் தோழர்களான குமார், ரதீஸ் ஆகிய இருவரும் எம்.ஐ.சியுடன் இணைந்து வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த இரு புலிகளை அச்சுறுத்தியுள்ளார்கள் என குறிப்பிட்டிருந்தது.

டக்ளசின் குழுவினர் எம்.ஐ.சியுடன் இணைந்த செயற்பாடுகள் பல்வேறு இடங்களில் நடைபெற்றுவருகின்றன. அதேசமயம் எம்.ஐ.சி இயக்குநரான ஹெந்த விதாரணவும் டக்ளசும் இரகசிய சந்திப்புக்களை செய்து அடுத்த கட்ட மேம்பட்ட புலனாய்வு பணிகளை மேற்கொள்வது பற்றி அலசி ஆராய்கின்றனர்.

டக்ளசின் உளவுப்பணிகளால் பல தமிழ்த் தேசப்பக்தர்கள் கொல்லப்பட்டும், காணாமல்போயும், சிறையில் தடுக்கப்பட்டும் உள்ளார்கள். இக்காட்டிக்கொடுப்புகளால் தமிழர்களுக்கு எழக்கூடிய பாரதூரமான விளைவுகள் பற்றி கவலை கொள்வதில்லை.



அவரின் கவலையெல்லாம் தமிழரின் விடுதலைப்போர் செருக்கோடு பலமாக இருப்பது பற்றியும், அவரது சுயலாபங்களுக்காக செய்துவரும் சூதாட்ட அரசியல் களத்தில் விசுவாசமிக்க தோழர்களை இழந்துவருவது பற்றியதுமாகவே உள்ளது.

டக்ளஸ் கவலையுடன் இருந்துவரும் வேளையில்தான் கருணாவின் தமிழ்த் தேசத்துரோக நிகழ்வுகளும் நடைபெற்றது. கருணாகுழுவை, சிறிலங்கா இராணுவப் புலனாய்வுஇயக்குநரான ஹெந்தவிதாரண தமது சூழ்ச்சிகரமான புலனாய்வு செயற்பாடுகளுக்கு பயன்படுத்த டக்ளசின் உதவியையும் பெற்று வருகிறார்.

ஹெந்த விதாரணவும் டக்ளசும் இணைந்து சுறுசுறுப்பாக இயங்குவதாகவும் கருணா குழுவினரை பயன்படுத்துவது பற்றி மந்திர ஆலோசனைகளை நடாத்திவருகின்ற செய்திகளை ஊடகங்கள் அம்பலப்படுத்தி, தமது ஊடகப்புலனாய்வுத்திறனையும் வெளிப்படுத்தியுள்ளனர். இத்தகவல்களை உறுதி செய்யும்வகையில் டக்ளசின் அறிவிப்புக்களும் வெளியாகியது.

அவர் கருணா குழுவைச்சேர்ந்தவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவிரும்பியதாகவும், அப்படி வருவோருக்கு 9500ரூபா சம்பளம் வழங்கி வேலை கொடுக்கமுன்வந்துள்ளதாகவும் ஊடகங்களுக்கு தனது அறிவிப்புக்களைக் கொடுத்திருந்தார். ஆகவே ஹெந்தவிதாரண டக்ளசின் புலனாய்வு முகவர் நிலையங்களுடன் கருணா குழுவைச் சேர்ந்தோரை இணைத்து இயக்கும் புலனாய்வு உத்தியுடன் களமிறங்கி இருப்பது உறுதியாகின்றது.

டக்ளசின் புலனாய்வு ஒருங்கிணைப்பாளராக செயலாற்றியவர்ணகுலசிங்கன் வெள்ளவத்தையில் சுட்டுக்கொல்லப்பட்டார். இதனை அடுத்து இராணுவப்புலனாய்வு பிரிவிற்கு தகவல்களை பரிமாறிவந்த டக்ளசின் தகவல் வங்கி சிலநாட்கள் இயங்காது இருந்தது. தற்போது மீண்டும் அது சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்துள்ளது.

அவரின் புலனாய்வு செயற்பாடுகளுடன் இணைந்த பல்வேறு மர்மக்கொலை சம்பவங்களும் பகிரங்கத்திற்கு வந்துள்ளன. அப்படுகொலை பட்டியல் நீண்டது.

இந்த பட்டியலில் ஊடகவியலாளர் நிமலராஜன், தினமுரசு பொறுப்பாளர் ரமேஸ் (அற்புதன்) டக்ளசின் அலுவலக நிர்வாகி வடிவேல் ஆகியோர்களை உதாரணங்களாக பார்க்க முடியும். இதுபோன்ற கொலைச்சம்பவங்களை டக்ளஸ் - எம்.ஐ.சி கூட்டாக இணைந்து செய்ததற்கான ஆதாரங்கள் இருப்பது மறுக்கமுடியாத உண்மை. அதாவது கொலை செய்யப்பட்ட விதம், பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், கொலை செய்த ஆட்கள் போன்றவை உண்மையை உறுதிப்படுத்தியுள்ளது.

இதுவரையிலும் பார்க்கப்பட்டவை டக்ளசின் சூழ்ச்சிகரமான வஞ்சக அரசியலும், புலனாய்வுப் பணிகளும், மர்மக்கொலைகளும் சொற்பமானவைகள் மட்டுமே. அவரின் சிங்கள அரசியல், புலனாய்வு மீதான விசுவாசத்தினால் அவர் அரசுக்கு வழங்கிவரும் ஒத்துழைப்புகள் அதிகம். ஒட்டுமொத்தமாக அவரின் உடந்தை அல்லது ஒத்துழைப்புக்கள் தமிழரின் வலிமையை இல்லாதொழிக்கும் ஒருமுனைப்பாகவே இருந்துவருகின்றது.

தமிழர்களுக்கு நாசஞ்செய்யும் இத்தகையமுயற்சிகளை சிங்கள அரசு டக்ளஸ் போன்றவர்களை வைத்து தொடரவே செய்யும். அது தமிழ்த் தேசியம் பலவீனப்படும் வரை தொடரவே முயற்சிக்கும். ஆகவே தமிழ்த் தேசியம் பலமாக இருப்பதனாலேயே அரசுக்கு டக்ளஸ் தேவைப்படும் ஒருவராக இருக்கின்றார்; இருப்பார். இந்த யதார்த்த களநிலை பற்றி டக்ளஸ் சிந்திப்பாரா?

டார்வின் தத்துவம் அடிமையாக்கப்பட்ட யாரையும் மனிதன் தனக்கு சரிசமமாக கருதுவதில்லை என எடுத்துக் கூறுகின்றது. இத்தத்துவத்தைக்கூட டக்ளஸ் சிந்திப்பாரா?

அவர் ஒருபோதும் சிந்திக்கப் போவதில்லை. அவரின் சிந்தனையெல்லாம் சிங்கள எஜமான்களுக்காக விசுவாசமாக பாடுபடுவது பற்றியதாகவே இருக்கின்றது.

ஆகவே தமிழர்கள் விழிப்புணர்வோடு இருக்கும்போதே வலுமிக்க தமிழ் இனமாக வாழமுடியும். அந்த வலிமை தான் டக்ளசின் சுயநல லாபங்களுக்கான சூதாட்ட சுத்துமாத்து அரசியலை தோற்கடித்து டக்ளசின் சிங்கள அரசியல், புலனாய்வு தந்திரோபாயங்களை திக்குமுக்காடச் செய்து செயலிழக்கச்செய்யும். ●

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 22. 10 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# உண்மையான உறவு யார்...?

இலங்கை : இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றை செய்து கொள்ள அவசரம் காட்டிவருகிறது.

இந்தியா இலங்கையுடன் சில இராணுவரீதியான தொடுசல்களை தொடர்ந்து பேணிக்கொள்ளவிரும்புகிறது.

இந்த இரண்டு நிலைமைகளின் பிரகாரம் இலங்கை இந்தியாவின் நெருக்கம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இலங்கை விவகாரத்தின் மூலமாக நிகழக்கூடிய மாற்றமானது இந்தியாவின் பிராந்திய கனவுக்குக்கேடு ஏற்படாமலும், இந்தியாவின் மாநிலங்களை தொடர்ந்து கேடு இன்றி நிர்வகித்துக்கொள்ள இந்தியாவின் அனுகுமுறை வழிசமைக்கும் என்ற வகையில் அதில் இந்தியா கூடுதல்கவனம் செலுத்துகிறது.

இதனடிப்படையில் இலங்கைப்பிரச்சினையில் இந்தியாவில் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருந்த பாரதிய ஜனதாக் கட்சியும், காங்கிரஸ்கட்சியும் ஒரே நிலைப்பாட்டையே கடைப் பிடித்து வருகிறது.

மேம்போக்கான நிலையில் இந்தியா இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு தனது ஆதரவை வெளிப்படுத்தினாலும் உள்ளூர அச்ச உணர்வுடனேயே சமாதான முயற்சியை நோக்கி வருகிறது.

இந்த வகையில் இலங்கையின் இனப்பிரச்சினைவிவகாரமானது சமாதானரீதியில் ஒரு முடிவை எட்டினாலும் இந்தியாவுக்கு ஆபத்தாக முடிந்துவிடுமோ என்றும், யுத்தம் மூலமாக ஒரு நாட்டை தமிழர்கள் அமைத்துவிட்டால் அதுவும் இந்தியாவுக்கு ஆபத்தாகமுடிந்துவிடும் எனவும் கற்பனைகளின் அடிப்படையில் இந்தியா அஞ்சுகிறது.

இதற்காக இந்தியா இலங்கைக்கு சமாதான முயற்சிகளுக்கு வழங்குகின்ற ஆதரவைவிட இராணுவ ரீதியான ஆதரவை கூடுதலாக வழங்கிவருகிறது போல தோன்றுகிறது.

இறுதியாக இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் இலங்கை இராணுவத்தினருக்கு இராணுவ ஆயுத தள பாடங்கள் என்றவகையில் ஆட்லறி, உலங்குவானூர்தி, இராணுவ வாகனங்கள் மற்றும் வேறு சில இராணுவ தள பாடங்களையும் கடன் அடிப்படையில் வழங்க இந்தியா விரும்பி அதற்கான பட்டியல் ஒன்றையும் இலங்கையிடம் கேட்டிருப்பதாக தெரிகிறது. அத்தோடு பலாலி விமான தளத்தை புனரமைப்பதிலும் இந்தியா அதிக அக்கறை செலுத்துவதாக தெரிகிறது.

ஆக இந்தியாவின் அண்மைய எல்லா நகர்வுகளும் இலங்கைக்கு இராணுவரீதியாக உதவும் நகர்வுகளாகவே அமைகிறது.

இலங்கை இராணுவத்தின் படைக்கட்டமைப்பை பலப்படுத்துவதிலும் அதனைப் பாதுகாப்பதிலும் இந்தியா கூடுதலான கரிசனையையே தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகிறது.

இதற்கு முன்னரும் புலிகளால் ஓயாத அலைகள் இராணுவநடவடிக்கைமூலமாக யாழ்ப்பாணம் முற்றுகையிடப்பட்டு யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் நெருக்கடியை சந்தித்த போது சிறிலங்கா இராணுவ இயந்திரத்தை பாதுகாப்பதற்கு இந்தியா அக்கறை காட்டியமை நினைவிற்கொள்ளத்தக்கது.

ஆனால் உண்மையில் இந்தியா தனது நிரந்தர உறவாக இருக்கக்கூடிய தமிழர்பிரச்சினையை தவறான கண்ணோட்டத்துடனேயே நோக்குகிறது.

இந்தியாவின் பிராந்திய அபிலாசைக்கும், தனது மாநிலங்களுக்கிடையில் இருக்கவேண்டும் என கருதும் பாதுகாப்புக்குமான உத்தரவாதம் என்பது சிறிலங்கா அரசோடு ஏற்படுத்திக்கொள்ளும் உறவின் மூலமாக ஏற்படுத்திக்கொள்ளமுடியாது.

இந்தியா, நினைப்பதுபோல இலங்கை இந்தியாவின் நட்பாளர்களாக இருக்கக்கூடியதல்ல.

இன்றைய பூகோல பொருளாதார யதார்த்தத்தில் பொருளாதார நலனின் அடிப்படையில் இலங்கை இந்தியாவுக்கு எதிரான சக்திகளின் தளமாக மாறக்கூடிய அபாயமே இருக்கிறது.

இந்தியா தமிழர் தரப்போடு நேசரீதியாக ஏற்படுத்திக்கொள்ளும் நட்புறவே இந்திய வுக்கு அதிக நன்மை பயக்கும்.

கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் எதற்கு என்பது போல சிறிலங்காவை பலப்படுத்தும் வரை பலப்படுத்திவிட்டு இந்தியாவின் கைகளிலிருந்து இலங்கை நழுவிப்போகும் ஒரு தருவாயில் தமிழர் தரப்போடு இந்தியா உறவை ஏற்படுத்த முனையுமாயின் அதனூடாக இந்தியா என்ன இலாபத்தை பெற்றுவிடப்போகிறது?

# சந்திரிகாவின் புதிய கபட நாடகத்திற்கு அவர் வைத்த பெயர் ஆலோசனைச் சபை

நியூயோர்க்கில் இடம்பெற்ற ஐ.நா கூட்டத்தில் இலங்கை அரசு அமைதிப்பேச்சுக்களுக்கு தயாராகவுள்ளதாக அறிவித்துவிட்டு நாடு திரும்பிய கையுடன் சனாதிபதி தேசிய சமாதான ஆலோசனை சபையை அமைத்துள்ளார். சமாதான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான உறுதியான அடித்தளத்தை இடும் நோக்குடன் இந்த சபை அமைக்கப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

சனாதிபதி அழைப்பு விடுத்திருந்த இந்தக் கூட்டத்தில் அரசின் பங்காளி கட்சிகள் தவிர்ந்த வேறு கட்சிகள் எதுவும் பங்கு பற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, சி.மு.கா ஆகியன இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளாமை முக்கிய அம்சமாக இருந்தது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமை பற்றி தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டை தெளிவாக அறிவித்துள்ளது. கடந்த யூன் 10ஆம் திகதி தமிழ் கூட்டமைப்பினருக்கு வழங்கிய உறுதிமொழியிலிருந்து பின்வாங்கிச் செல்வதாக கூட்டமைப்பினர் சனாதிபதிக்குச் சுட்டிக்காட்டியுள்ளனர். இடைக்கால நிர்வாக கட்டமைப்பு யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுமென அப்போது சனாதிபதி கூறியிருந்தார்.

இடைக்கால நிர்வாக கட்டமைப்பின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். அதே நேரம் காலத்தை இழுத்தடித்து தமிழ் மக்கள் சார்பாக முன்வைக்கப்பட்டுள்ள தீர்வு யோசனையிலிருந்து கவனத்தை திசைதிருப்பும் எந்தவொரு செயற்பாட்டையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதையும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரின் இந்த நிலைப்பாடு வெளிக்காட்டி நிற்கிறது. அதே நேரம் கடந்த காலங்களைப் போல தமிழ் தலைமைகளை ஏமாற்றி பேரினவாத நாசகார சதித் திட்டங்களிற்குள்ளும் கபடத்தனங்களிற்குள்ளும் உள்வாங்கமுடியாது என்பதையும் சிங்கள ஆட்சியாளருக்கு உணர்த்தியுள்ளனர்.

"இடைக்கால திட்ட வரைவின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும். அரசு முதலில் தமக்குள் காணப்படும் முரண்பாடுகளை தீர்க்கவேண்டும். அரசின் சமாதான முயற்சிகளுக்கு நாம் பூரண ஆதரவை வழங்கியுள்ளோம்" என்று ஐ.தே. கட்சி பேச்சாளர் ஜீ.எல். பீரிஸ் கருத்து கூறியுள்ளார் அதே நேரம்.

ஜாதிக ஹெல உறுமயவினர் இந்த கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்றே எதிர்பார்க்கப்பட்டது. சமாதானத் தீர்வை நோக்கிய பயணத்தின் ஆரம்பமாக ஆலோசனைச் சபை அமைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாக ஹெல உறுமயவினர் இதனை எதிர்ப்பதாகக் கூறப்படுகிறது.

அரசின் பங்காளி கட்சிகளிலுள்ள சுயநல அரசியல் வாதிகளும் சிங்கள பேரினவாதி களும் அங்கம் வகிக்கும் இந்தச் சபை ஏன் அமைக்கப்படுகிறது? யாருக்காக இந்த சபை அமைக்கப்பட்டுள்ளது? இவர்களின் ஆலோசனைகள் எவ்வாறு அமைதிப் பேச்சுக்களுக்கு உதவப் போகின்றன? என்ற சந்தேகங்கள் எழவே செய்கின்றன. அரசில் இணைந்து அரசாங்கத்தின் திட்டங்களை செயற்படுத்தி வரும் இவர்கள் தமிழ் மக்கள் சார்பாக அரசிடம் பேரம் பேசும் வல்லமை கொண்டவர்களா? அந்தக் தகுதி தான் அவர்களுக்கு இருக் கிறதா? அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இவர்களைக் கொண்டு தனியான அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமா? இந்த இடத்தில் சனாதிபதி இந்த ஆலோசனைச் சபையை ஏற்படுத்தியதற்கு ஏதேனும் உள்நோக்கம் இருக்கிறதா என்ற சந்தேகம் எழவே செய்கிறது. இதற்கு சனாதிபதியினதும் சிங்கள பேரினவாதத் தலைவர்களினதும் கடந்த கால செயற்பாடுகளைப் பார்க்க வேண்டியுள்ளது.

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக தமிழர்கள் தமது உரிமைகளுக்கான போராட்டத்தை நடத்தி வருகின்றனர். இரு தசாப்தகாலமாக ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இராணுவ ரீதியில் இலங்கைப்படையினருக்கு இணையான படை வலு சமநிலையை தமிழர் படையும் பெற்றுவிட்ட நிலையில் அரசாங்கம் (ரணில்அரசு) யுத்தநிறுத்தத்திற்கு உடன்பட்டு பேச்சு மேசைக்கு வந்தது. ஆயினும் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்திலும் தமிழ் மக்கள் மீது இன அழிப்பு செயற்பாடுகள் மேற்கொள் ளப்பட்ட காலத்திலும் சிங்கள அரசுகள் காலத்துக்குக் காலம் சமாதான முயற்சிகளை மேற்கொண்டன. உண்மையில் சமாதான முயற்சிகள் என்ற போர்வையில் தமிழ் மக்களை மட்டுமன்றி உலக நாடுகளையும் சர்வதேச நிதி நிறுவனங்களையும் ஏமாற்றி வந்தனர். தமிழ் மக்கள் மீதான யுத்தத்துக்கு ஆயுதங்களையும் நிதியினையும் பெற்றுக்கொண்டனர். நாட்டில் இனப் பிரச்சினை எதுவும் இல்லை. பயங்கரவாத பிரச்சினைதான் உள்ளது என பிரசாரம் செய்து ஆக்கிரமிப்பையும் இன அழிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்தன. உண்மை நிலையை மூடி மறைத்து தவறான பிரசாரங்களை மேற்கொள்ளவும் தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்பு திட்டங்களை நிறைவேற்றவும் பல்வேறு வழிமுறைகளை கையாண்டார்கள். வட்டமேசை மாநாடு, சர்வகட்சி மாநாடு, அரசியல் யாப்பு சீர்திருத்த சபை, நாடாளுமன்ற தெரிவுக்குழு என பலவற்றை ஏற்படுத்தினார்கள். இறுதியில் எதுவுமே இடம்பெறவில்லை. காலத்தை இழுத்தடிப்பதற்கும் தமக்கு சார்பான பிரசாரங்களை மேற்கொள்வதற்குமே இவைகள் பயன்பட்டன.

1983இல் இனக்கலவரம் ஏற்பட்ட பின்பு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா வட்டமேசை மாநாடு ஒன்றை நடத்தினார். இந்த மாநாட்டின் மூலமாக தமிழ் மக்களுக்கு பல நன்மைகள் ஏற்படும் என கூறப்பட்டது. உண்மையில் இந்த மாநாட்டின் பெறுபேறுகள் என்ன? தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை சிங்கள அரசு கவனத்தில் எடுத்ததா? அல்லது சிங்கள ஆட்சியாளர்கள் பிரச்சினையை தீர்க்கும் நோக்குடன் தான் இந்த மாநாட்டை நடத்தினார்களா? முடிவில் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டனர். சிங்கள பேரினவாதத்துக்கு தூபமிடுவதாக - பேரினவாத பேயின் பசிக்கு உணவாக - மட்டுமே அந்த மாநாடு அமைந்தது.

அதன் பின்பு பிரேமதாசா அரசாங்கத்திலும் இதே கைங்கரியங்கள் தான் இடம்பெற்றன. தொடர்ந்து சமாதான தேவதையாக தன்னை இனங்காட்டிக் கொண்டு வந்த சந்திரிகா சர்வகட்சி மாநாடு, அதிகாரப் பரவலாக்கல்யோசனை சபை என மாநாடுகளையும் சபைகளையும் ஏற்படுத்தவில்லையா? இவற்றின் முடிவில் தானே தமிழ் மக்கள் மீது சமாதானத்துக்கான யுத்தம் என்ற பெயரில் கொடிய யுத்தம் ஒன்று ஏவிவிடப்பட்டது. இவை யெல்லாம் கடந்தகால அனுப வங்கள்.

சமாதான முயற்சிகளில் ஈடுபட சனாதிபதிக்கு உண்மையான ஆர்வமும் கரிசனையும் இருக்குமானால் அவர் எவ்வளவோ நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். உயர் பாதுகாப்பு வலயம். மக்களின் மீள் குடியேற்றம், கிழக்கில் ஆயுதக் குழுவுக்கு உதவுவதை நிறுத்துவது என எத்தனையோ நடவடிக்கைகளை மேற்கொண்டு தனது சமாதான ஆர்வத்தை வெளிப்படுத்த முடியும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக புலிகள் இயக்கம் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம். இவ்வாறு பல வழிகள் இருக்கும் போது அவர் எதற்காக இந்த ஆலோசனைச் சபையை அமைக்க வேண்டும்? உண்மையில் மேற்கூறிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளும் அரசின் மீதான தமது அச்சத்தையும் அவநம்பிக்கையையும் அகற்றிக்கொள்வார்கள் இவைகள் சமாதான பேச்சுக்களுக்கான சிறந்த அடித்தளத்தை இடும் என்பதை சனாதிபதி ஏன் உணரவில்லை?

சனாதிபதியின் தேசிய ஆலோசனைச் சபையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஜாதிக ஹெலஉறுமயவும் தமிழ், முஸ்லிம் தேசிய இன மக்களின் ஆதரவைப் பெற்ற தமிழர் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளும் மலையக மக்கள் முன்னணியும் என அனைத்து இன மக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளாத நிலையில் இந்த சபை எப்படி தேசிய ஆலோசனைச் சபையாக இருக்கமுடியும்?

தேசிய சமாதான பேரவை அமைக்கப்படுவதன் பின்னணியில் இரண்டு பிரதான நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள சந்திரிகா முயற்சிப்பது வெளிப்படையாக தெரிகிறது ஒன்று.

இனவாதசக்திகளை ஒன்றிணைந்து அவர்களின் சமாதான எதிர்பிரசாரங்களை அரசின் ஆதரவுடன் மேற்கொள்வது (இந்த வகையில் ஹெல உறுமயவினர் கலந்து கொள்ளாதது அரசுக்கு ஏமாற்றமாக இருக்கும்) அதாவது இன்று புலிகளுக்கு எதிராகவும் இடைக்கால நிர்வாக யோசனைகளுக்கு எதிராகவும் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வோருக்கு வசதிவாய்ப்புகளை ஏற்படுத்தி சில அதிகாரங்களும் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன. இதன் மூலம் இனவாத ஊடகங்கள் மட்டுமன்றி சர்வதேச ஊடகங்களிலும் இனவாதிகளின் கருத்துக்கள் வெளிப்படுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படும்.

இந்த பேரவை மூலம் சனாதிபதி தனது வழமையான பிரசார நடவடிக்கையை மேற்கொள்ளும் அதே நேரம் பேச்சுக்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இந்த சபை ஊடாக மேற்கொண்டுவருவதாக காட்ட முற்படுவார். இதுவே அவரது மற்ற நோக்கம். இந்த சபை மூலம் நிலையான அமைதியை ஏற்படுத்த முடியுமென்றும் இதைவிட்டால் சமாதானத்தை முன்னெடுக்க வேறு வழியில்லை என்று கூறுமளவிற்கு தனது பிரசாரங்களை மேற்கொள்வார். இந்த தேசிய சமாதான பேரவை ஊடாக காலத்தை இழுத்தடிக்கும் அதே வேளை புலிகள் இயக்கம் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக யோசனைகளிலிருந்து நாட்டு மக்களினதும் சர்வதேச நாடுகளின தும் கவனத்தை திசை திருப்பும் முயற்சிகளை மேற்கொள்வார் என்பது மட்டுமே இதன் நோக்கமாகும்.

**சபேசன்,**
**களுவாஞ்சிக்குடி**

# எதிர்காலம் நோக்கி உப்பள ஊழியர்கள்

உப்பின்மூலம் அதிகளவு வருமானத்தை அரசாங்கத்திற்கு ஈட்டிக்கொடுத்த ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பளங்கள் இறுதியில் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதை கண்ணுற்ற பொருண்மிய மதியுரையகம் (TECH) இவ்விரு உப்பளங்களையும் புனரமைப்புச்செய்யும் நடவடிக்கையை 2001ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பித்தது.

முதல் நடவடிக்கையாக பாழடைந்திருந்த உப்புக்குளங்கள், உப்புப்பாத்திகள் அனைத்தும் பல புதிய தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்து திருத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

பொருண்மிய மதியுரையகத்தால் உப்பு உற்பத்தி நிறுவனம் என பெயர் பொறிக்கப்பட்டு ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பளங்களில் ஆரம்பிக்கப்பட்ட இத்திருத்த வேலைகள் நாளடைவில் முன்னேற்றம் கண்டது மட்டுமன்றி 2002ஆம் ஆண்டு முற்பகுதியில் உப்புச்செய்கைக்கான நடவடிக்கையிலும் இறங்கி வெற்றியும் கண்டது.

இயற்கையாகவே ஆனையிறவு உப்புக்குளங்களில், பாத்தி



களில் விளைந்திருந்த உப்புக்களை சேகரித்ததோடு குறிஞ்சாத்தீவு உப்பளத்தில் உள்ள 578 உப்பு பாத்திகளில் 108 உப்புப்பாத்திகளை மட்டும் தெரிவுசெய்து 2003ஆம் ஆண்டு பரீட்சாத்தமாக எடுக்கப்பட்ட உப்புச் செய்கைக்கான நடவடிக்கையிலும் திருப்தி கண்டதால் 2004 ஆம் ஆண்டு முற்பகுதியிலிருந்து குறிஞ்சாத்தீவு உப்பளத்தின் மிகுதிப்பாத்திகள் அனைத்தும் புதிய நடைமுறைக்கமைய நவீனமுறையில் மிகவும் வேகமாக புனரமைப்புவேலைகள் நடைபெற்றுவரும் அதேவேளையில் 27 குடும்பங்கள் உட்பட 270பணியாளர்களும் இப்புனரமைப்பு வேலைகளில் பங்குகொண்டு பயனடைந்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

2001ஆம் ஆண்டு பிற்பகுதியில் ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு பகுதியில் உப்பு உற்பத்தி நிறுவனத்திற்கான கட்டடங்கள் கட்டுவதற்கான சாத்தியமில்லாதிருந்ததால் பரந்தன் இரசாயன தொழிற்சாலையில் உப்பு உற்பத்தி நிறுவனத்தின் கட்டடங்கள் அமைக்கப்பட்டு இங்கு இரு உப்பளங்களிலும் சேகரித்துசேரும் உப்பு கொண்டு வரப்பட்டு உப்புமால்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரசாங்க உப்புக் கூட்டுத்தாபனத்தில் ஆனையிறவு பிராந்தியத்தில் இறுதியாக வட பிராந்திய முகாமையாளராக கடமையாற்றிய ஒருவரை ஆலோசகராக கொண்டு இயங்க ஆரம்பித்த உப்பு உற்பத்தி நிறுவனத்திற்கு யுனிசெவ் என்ற பொது நிறுவனத்தின் ஆதரவும் அன்பளிப்பும் கிடைக்கத் தொடங்கியது.

பல புதிய நவீன இயந்திரங்கள், ஆயுதங்களின் உதவியுடன் உப்பை பொதியிடும் நடவடிக்கையை உப்பு உற்பத்தி நிறுவனம் 2003ஆம் ஆண்டு பிற்பகுதியில் ஆனையிறவில் ஆரம்பித்தது.

பல புதிய பெண் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பளித்ததோடு பல நூறு புதிய ஆண் தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பளிக்கும் வகையில் உப்பு உற்பத்தி நிறுவனத்தின் வேலைகள் அனைத்தும் விஸ்தரிக்கப்பட்டது.

அதே நேரத்தில் அரசாங்க உப்புக் கூட்டுத்தாபனத்தில் ஆனையிறவு குறிஞ்சாத்தீவு உப்பளங்களில் நிரந்தர, நாட்சம்பளத்தில் கடமையாற்றிய ஆண்-பெண் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பளிப்பதற்கு உப்பு உற்பத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் அக்கறை காட்டத்தெடங்கியது மிகவும் வரவேற்கக் கூடிய விடயமாகும். அது மட்டுமின்றி இத்தொழிலாளர்களுக்கு அரசாங்கத்தால் கடந்த 6 வருடகாலமாக சம்பளம் வழங்கப்படாமல் இருப்பதை அறிந்த பணிப்பாளர் அவர்கள், இவர்களுக்கு சம்பளம் கிடைக்கும் வரையிலாவது வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென எண்ணி பத்திரிகை வாயிலாக அழைப்புகள் விட்டிருந்தமையும் மேலும் வரவேற்கக்கூடிய விடயமாகும்.



பணிப்பாளரின் இந்த அழைப்புக்கு முழுமையான வெற்றிகிட்டாவிட்டாலும்கூட சில தொழிலாளர்கள் குடும்பத்துடன் இங்கு வந்து வேலைசெய்ய ஆரம்பித்தனர். அது மட்டுமின்றி 1936ஆம் ஆண்டிலிருந்து பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த எங்கள் பூமியிலிருந்து எந்த அரசாங்கத்திற்கு எமது வியர்வைகளை சிந்தி ஆண்டாண்டு காலமாக உழைத்துக் கொடுத்தோமோ அதே அரசாங்கத்தால் மிருகத்தனமாக இரக்கமின்றி 1990ஆம் ஆண்டு இந்தப் பூமியிலிருந்து நாம் விரட்டப்பட்ட தோடல்லாமல் எவ்வித ஆதரவுமின்றி அநாதரவாக இருந்த எம்மை மீண்டும் இதே பூமியில் குடியிருக்கவைத்து, உழைப்புத்தந்து, நிம்மதியான கஞ்சி குடிக்க வழிவகை செய்த எமது இளைஞர் யுவதிகளுக்கு நாம் நன்றி சொல்லாமல் இருக்கமுடியாது என இக்குடும்பத்தினர் கூறிவருவது நெஞ்சை நெகிழவைக்கும் ஒரு விடயமாகும். அத்துடன் உப்புக் கூட்டுத்தாபன தொழிலாளர்கள் அனைவரும் எப்போது வந்தாலும் வேலை வாய்ப்பளிக்கத்தயார் என பணிப்பாளர் அவர்கள் வேண்டுகை விடுத்திருப்பது மிகவும் பாராட்டப்படவேண்டிய விடயமாகும்.

கூடியளவு மனித சக்தியை பயன்படுத்தாமல் பல புதிய நவீனயந்திரங்களின் உதவியுடனேயே உப்பு பொதியிடும் வேலைகள் நடைபெறுகின்றதென்றாலும் உப்புக் கூட்டுத் தாபன தொழிலாளர்கள் இங்கு முழுமையாக வருகை தந்தாலும்கூட நிச்சயம் இத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்பளிப்பதோடல்லாமல் இவர்களின் பழைய வாழ்வுக்கும் வழிகோல முடியுமெனவும் கூறப்படுவது மிகவும்மெச்சக கூடிய விடயமாகும்.

குடிநீர் வசதிகள், மின்சாரவசதிகள், வீட்டுவசதிகள் அனைத்தையும் உப்பு நிறுவனத்தை அண்மித்துள்ள தட்டுவன்கொட்டி கிராமத்துக்கு செய்து கொடுப்பதைப்போன்று செய்துகொடுக்க ஜேர்மன் அரச நிறுவனம் முன்வந்திருப்பதால் உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு மீண்டும் மறுவாழ்வு கிடைக்கும் சாத்தியம் தென்படுகின்றது என்பதை சந்தேகத்திற்கிடமின்றிக் கூறலாம்.

உப்பு உற்பத்தி நிறுவனத்தின் தற்போதய வளர்ச்சியும் அதன் போக்கும் கிட்டத்தட்ட நூற்றுக்கு நூறு நல்லதொரு எதிர்காலத்தை (பொருளாதார ரீதியில்) நோக்கிசெல்கிறது என்பதை தெட்டத்தெளிவாக கூறலாம்.

**க. கணபதிப்பிள்ளை**

---

## நேர்நோக்கு

# கல்வியை மேம்படுத்த அனைவரும் பாடுபட வேண்டும்

கடந்தகால போரினால் சிதைக்கப்பட்டதமிழ் மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் வகையில் பல்வேறு அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன. அடிப்படைக் கல்விகூட இன்றும் விருத்தி செய்யப்படவில்லை. தகவல் தொழில் நுட்பம் என்ற வகையில் தமிழர் தாயகப்பகுதிகளில் உள்ள எந்தப்பாடசாலைக்கும் தகவல் தொழில் நுட்ப, கற்றல் கற்பித்தல் உபகரணங்களை இதுவரையில் முழுமையாக வழங்கவில்லை. ஆரம்பகல்வியை வளப்படுத்துவதற்கான போதியளவு ஆசிரியர்களை நியமிக்காது உரிய கற்றல் கற்பித்தல் உபகரணங்களை உரியகாலங்களில்வழங்காமை போன்ற பல்வேறு புறக்கணிப்புக்களை சிறிலங்கா அரசானது தொடர்ந்தும் தமிழர் தாயகப்பகுதிகளுக்கு மேற்கொண்டு வருகின்றது. இந்த இரண்டரை வருட சமாதானத்தின் மூலம் எமது தமிழ் மக்களோ அல்லது தமிழ் மாணவர்ளோ எதனையும் பெரிதாக பெற்று விடவில்லை. அதனைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பையும் அரசு ஏற்படுத்தவில்லை. கல்வியில் அழிக்கப்பட்ட வளங்கள் இதுவரை மீள முற்றுமுழுதாக வழங்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு போரினால் சிதைக்கப்பட்ட தமிழ் மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் வகையில் பேர் இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள கிராமங்களை இனங்கண்டு அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமித்து மாணவர்களின் மேலதிக கற்றல் செயற்பாடுகளை, தமிழர்புனர்வாழ்வு கழகம் முன்னெடுத்து செல்கின்றது. அந்த வகையிலே மிகவும் பின்தங்கிய, அம்பாறை மாவட்டத்தில் நாவிதன் வெளி, வீரமுனை, மாணிக்கமடு, வீரச்சோலை, ஆகிய பகுதிகளிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஆலங்குளம், கரியாலை நாகபடுவன். ஆகிய இடங்களிலும் மன்னார் இலுப்பைக்கடவையிலும் பிரத்தியேக கல்வி நிலையங்களை அமைத்து கல்வியில் பின்தங்கிய வறிய மாணவர்களை இனங்கண்டு கல்வி, கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொண்டு வருகின்றது. இதன்மூலம் 500 இற்கும் அதிகமான மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

இவை தவிர யுனிசெப் நிதியுதவியுடன் இடைவிலகிய, பாடசாலை கல்வியை இடை நிறுத்திய மாணவர்களை மீளக்கற்றலில் இணைத்தல் என்ற செயற்திட்டத்தின் கீழ் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, இதற்கான, திட்டம் கடந்த 09.08.2003முதல் 30.08.2004 வரையான காலப்பகுதியில் செயற்படுத்தியுள்ள திட்டத்திற்காக 3.5 மில்லியன் ரூபா நிதியினை யுனிசெப் வழங்கி இச்செயல்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் மூலம்இனங்காணப்பட்ட மாணவர்கள் மீளக்கற்றலில் இணைத்தல், தொழில்சார் பயிற்சி வழங்கள், கற்றல் உபகரணத்தொகுதி வழங்கல், போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதைவிட வெளிவாரி பட்டப்படிப்புக்கான உதவிகளை மேற்கொள்ளும்வகையில் அறிவும் ஆர்வமும் மிக்க வறிய மாணவர்கள் கல்வியைத்தொடர சுவிஸ் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிதியுதவியுடன் வெளிவாரி பட்டப்படிப்பு கற்கை நெறிமேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன்மூலம 35 மாணவிகள் பயன் பெற்று வருகின்றனர்.

இதைவிட மலரவன் நம்பிக்கை நிதியம் என்ற அமைப்பின்மூலம் கனேடிய தமிழர் புனர்வாழ்வுக்கழக நிதியுதவியுடன் பல் கலைக்கழக கல்வியை தொடரும் மாணவர்களுக்கென சமூக பொருளா தார அபிவிருத்தி வங்கி மூலம் மாதாந்தம் 2000ரூபா வீதம் 52, மாணவர்ளுக்கு ஒரு உதவித் தொகையை தொடர்சியாக, வழங்கி வருகின்றது. இதன் மூலம் திருகோணமலை, மட்டக்களப்பு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர்.



கால் நூற்றாண்டு கால போர் இனக்கலவரங்களால் மிக மோசமாக பாதிப்புற்று போரின் அவலங்களையும்; அழிவுகளையும் சந்தித்து நலிவுற்ற துறைகளில் தமிழரின் கல்வித்துறையும் மிகமிக முக்கியமானது.

சிறிலங்கா கல்வித்துறையில் அதிதிறமைசாலிகளாக விளங்கிய வடக்கு கிழக்குபகுதி தமிழ் மாணவர்கள் கல்வி இன்றி அடிமட்ட நிலைக்கு பின்தள்ளப்பட்டதை பலரும் உணர்ந்து கொள்வதோடு, கண்கூடாக கண்டும் வருகின்றனர்.

ஆக்கிரமிப்புயுத்தம், தொடர் இடப்பெயர்வுகள், பொருளாதார தடைகள், எறிகணைத் தாக்குதல்கள் எனப்பல யுத்த அழுத்தங்களுக்கும் மத்தியில் சிதைந்து போன கல்வியை கட்டி எழுப்ப வேண்டும். 25வருடகால போர் நிகழ்த்திய பாதிப்புக்களில் இருந்து இருந்து எமது மக்களை மீட்டெடுத்து நம்பிக்கை யூட்டக் கூடிய திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் நொந்துபோயுள்ள மனங்களை ஒருவழிப்படுத்த முடியும். இதற்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பயன்மிக்க பல திட்டங்களை, மேற்கொண்டு வருகின்றது. இதே போன்று ஏனைய நிறுவனங்களும் எமது மாணவர்களின் கல்வியைகட்டியெழுப் முன்வரவேண்டும் என்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்பாக உள்ளது என்றே கூற வேண்டும்.

**பாஸ்கரன்**

# சவால்களை முறியடிக்குமா ஆபிரிக்காக் கண்டம்?

**நாற்றிசை நடப்பு**



ஆபிரிக்காக் கண்டத்த வரை அடிமைகளாக கொடுமைப் படுத்திய வரலாறு மண்டேலா வின் எழுச்சியுடன் மாற்ற மடைந்துவருகிறது. வெள்ளைக் காரர்களின் அடிமைகளாக, மிரு கங்கள் போல் பராமரிக்கப்பட்டு வந்த கறுப்பர்கள் அரசியல், பொருளாதார, இராணுவரீதியில் அணிதிரண்டு வருகின்றனர். இந்தப்போக்கு உலகளாவிய கறுப்பர்களை எழுச்சிகொள்ள வைத்ததோடு கறுப்பர்களை கொண்டிருக்கும் வெள்ளைக் காரர்களை அதிர்ச்சியுற வைக் கும் என்பதில் சந்தேகமில்லை. ஆபிரிக்கர்கள் போன்று வெள் ளைக்காரரின் அரசியல் ஊடுரு வலுக்குள் தப்பிப்பிழைத்துக் கொண்டு தமது அரசியலை புத்திசாலித்தனமாக நிகழ்த்தும் பிராந்தியங்களோ, கண்டங்களோ இல்லையென்றே கூறலாம். இந்தவகையில் ஆபிரிக்கா கண்டத்தின் அரசியல் ஐக்கியத் தன்மைக்கான ஓர் அம்சத்தை விரிவாக நோக்குவோம்.

சூடானின் டர்பூர் பிர தேசம் ஆபிரிக்காகண்ட அரசி யலை முன்நிறுத்தும் முயற்சி யில் பிரதான இடத்தை வகிக் கின்றது. டர்பூர் பிரதேசத்தில் நிகழ்ந்துவரும் வன்முறையால் சூடான் அரசியலையே நெருக் கடிக்குகொண்டு சென்றுள்ளது. எனக்கூறலாம். அப்பிரதேசத்தை அடிப்படையாகக்கொண்ட அரசி யல் நகர்வுகள் பாரிய மனித அழிவுகளுக்கு வித்திடுவதாக அமைந்திருந்தது. கடந்தகாலத் தில் பல அமைப்புகள் முன்பின் னான புள்ளிவிபரங்களை வெளி யிட்டு அப்பிரச்சினையை பாரிய அரசியல்-இராணுவப் பிரச்சினை யாக மாற்றுவதில் முயன்றுள்ளன. அத்தகைய முயற்சிகளை தோற் கடிக்கும் முகமாக ஆபிரிக்க யூனி யன், பிரதிநிதிகளும் தனிப்பட்ட ரீதியில் கேணல்.கடாபியும் முன்னின்று உழைத்துவருகின்றர்.

சூடான்வன்முறை அரசி யல் விடயத்தில் இரண்டு பிர தான அரசியல் சக்திகள் ஆரம் பம் முதல் இன்றுவரை தலை யீட்டை நிகழ்த்திவருகின்றன. ஒன்று அமெரிக்காவும் அதன் வழித்துணையான சர்வதேச அமைப்புக்களுமாகும். இரண்டா வது ஆபிரிக்க கண்டத்தின் சுதேச அமைப்பான ஆபிரிக்க யூனியனும் அதன் இதர அரசுகளின தலைமைகளுமாகும். இத்தகைய் இரண்டு முகங்களுக்குமிடையில் மிக நீண்டகாலமாக தலையீடும் இழுபறியும் மா்றிமாறி நிகழ்ந்து வருகின்றன. இதில் அமெரிக் காவும் அதன் பக்கபலமான சக்தி களும் சில தடவைகள் வெல் வதுபோல் காணப்பட்டாலும் ஆபிரிக்க யூனியன் கட்டுப் பாட்டிலே அதிகவிடயங்கள் என்றுமே காணப்படுகின்றன.

அமெரிக்காவும் அதன் வழித்துணையான ஐக்கிய நாடு கள் சபையும் உலக சுகாதார அமைப்புக்களின் அறிக்கை களையும் நடவடிக்கைகளையும் முதலில் பரிசீலிக்கும்போது ஐ.நா.சபை ஒரு தடவை தனது பொதுச்செயலாளரை சூடானுக்கு அனுப்பி நிலைமையை பெரிதாக் கியது. அத்தகைய விரிவாக்கல் பிரசாரத்திற்கு சூடான் மசிய மறுத்த பின்னர் சூடான்மீது பொருளாதாரத் தடையை கொண்டுவரும் தீர்மானத்தை நிறைவேற்றியது. அத்தீர்மானத் துக்குள் மாறிய அரசியல் முயற் சிகள் அனைத்தும் நிகழ்ந்த போதும் மிரட்டல் மாற்றமின்றி அமுலாகியது. அவ்வகையான மிரட்டலுக்கும் சூடான் அடி பணியாதென சூடானிய வெளி விவகாரத்துறை பதிலளித்தது. இந்த நடவடிக்கையால் ஐ.நா. சபைகுள்ளேயே அதிக வாதங் கள் எழுந்தன. அமெரிக்காவின் அணுகுமுறை சாதகமான பதிலை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை ஐ.நா.சபைக்கும் இருந்தது.

கொபிஅனான் அடிக்கடி அறிக்கை விடுவதோடு சூடானில் எந்தப்பிரச்சினையும் தீர்ந்ததாக இல்லை என்பதை திரும்ப திரும்ப உலகத்திற்கு வெளிப்ப டுத்திக்கொண்டிருந்தார். இது ஐ.நா.சபையின் தந்திரமான காய் நகர்த்தல் என்றே கூறவேண்டி யுள்ளது. ஆனால் இடைக்கால அமெரிக்காவின் நடவடிக்கையை கண்டிப்பது போலவும் ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பு சர்வதேச விதிமுறைக்கு முர ணானதெனவும் அறிக்கை விடுவது ஐ.நாவின் நடுநிலை மையை உலகத்திற்கு காட்டு வதற்காகும். உண்மையில் ஐ.நா நடுநிலைமையான அமைப்பு மல்ல; தத்துவரீதியாக நடு நிலைமை என்பதற்கு விளக் கமோ, விபரணமோகிடையாது. அவ்வாறான அமைப்பை கொபி அனான் அமெரிக்காவுக்கு சார் பாக காட்டுவதற்கு எடுக்கின்ற முயற்சிகளாகவே அவை காணப் படுகின்றன. வன்முறை ஆரம்பிக் கப்பட்டு கடந்த ஆறுமாதங்களில் எழுபதாயிரம் மக்கள் கொல்லப் பட்டதாக ஐ.நா. அறிக்கை விடுத்தது. அகதிமுகாமிலிருந்து மாதாந்தம் பத்தாயிரம் பேர்வரை கொல்லப்படுவதாக உலக சுகாதார அமைப்பு கூறுகின்றது. இதற்கெல்லாம் தெளி வான வரண்முறையான ஆதாரங்கள் எவையும் அந்த நிறுவனங் களால் வெளியிடப்படுவதில்லை. அவ்வாறு அவை வெளிக் கொண்டுவரவும் முடியாது.

இவ்வாறு தவறான முன்பின் முரணான தகவல்களை பரிமாறிவிட்டு அதன் சார்வுநிலை யில் உலகத்தையும் உலக மக்களையும் சூடான் அரசுக்கு எதிராக திசைதிருப்ப முயன்றன. இந்த அமைப்புக்களின் பிரதான நோக்கம் அமெரிக்காவின் பிர சன்னத்தை சூடானில் ஏற்படுத்து வதாகும். சூடானிய வளத்தை சுரண்டுவதற்கான திட்டமிடலோடு செயற்படும் அமெரிக்காவின் நகர்வுகளுக்கு துதிபாடும் அமைப் புக்களாகவே ஐ.நா.வும் அதன் பிரிவுகளும் செயல்படுகின்றன. அதனை நியாயப்படுத்த உலகத் திற்கு தவறான அதீதமான தகவல்களை அதிகரிப்பது அத் தகவலை மையப்படுத்தி உலகம் திசைதிருப்பப்படும் போது ஐ.நா வின் பொருளாதாரத்தடையோ இராணுவப்படையெடுப்பையோ உலகம் ஆதரிக்கும். அமெரிக்கா ஈராக்கில் விட்ட தவறுகளை இனி ஒரு நாட்டின் மீது படை யெடுக்கும்போது பிரயோகிக்கா தென்பது சூடான் விடயத்தை அவதானிக்கும்போது தெரிய வருகின்றது.

மறுபக்கத்தில் ஆபிரிக்க யூனியனும் அதன் பிராந்திய அரசுகளும் அமெரிக்க தலை யீட்டை தடுக்க பல முயற்சி களில் இறங்கிசெயற்பட்டன. ஆரம்பத்தில் ஐ.நா.சபை மட்டத்தில் போராடிய ஆபிரிக்க நாடுகள் அது சாத்தியப்படாத போது தமது பிராந்திய மட்டத் தில் போராட ஆரம்பித்தன. அப் பிராந்திய அரசியல் வன்முறை களைக் காட்டிஆக்கிரமிப்பை செய்யக்கூடிய சக்திகளை முறி யடிக்ககூட்டாக ஆபிரிக்க யூனி யனின் அமைதிப்படையை செயல்படுத்துவதென தீர்மா னித்தன. குறிப்பாக நவம்பர் மாத காலத்திற்குள் 4500ற்கு மேற்பட்ட படைகளை டர்பூர் பிரதேசத்தில் குவிப்பதென ஆபிரிக்க யூனியன் தீர்மானித்துள்ளது. ஏற்கனவே நைஜீரியா, சாட், றூவாண்டாவில் 300ற்கு மேற்பட்ட இராணுவ உப கரணமற்ற சமாதானப் படையினர் நிலைகொண்டுள்ளனர். இவர் களைத்தொடர்ந்து றூவாண் டாவின் அமைதிப்படையினர் செல்லவுள்ளனர்.

அதனோடு இணைந்த வகையில் லிபிய தலைவர் கடாபியின் சூடான் நெருக்கடிக்கு தீர்வுகாணும் முயற்சியில் நைஜீரியா, சாட், எகிப்த்து என்பன திரிபோலியில் நடந்த மாநாட்டில் கலந்துகொண்டுள்ள னர். இதன் வெற்றியாக சூடான் அரசாங்கம் கிளர்ச்சியாளருடன் பேசுவதற்கு தயாராகவுள்ளதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத் தக்க விடயமாகும். இவ்வாறு படிப்படியாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை மென்போக்கான சூழலை ஏற்படுத்தி இரண்டு சக்தி களையும் ஒன்றிணைப்பதாக மாற்றுமென எகிப்திய வெளி விவகார மந்திரி தெரிவித் துள்ளார்.

எனவே ஆபிரிக்க யூனி யனின் நடவடிக்கை இந்தச்சந் தர்ப்பத்தில் வரவேற்கவேண்டிய தொன்றாகும். வெளிப்படை யாகவே சூடான் இலக்குவைக் கப்பட்ட பின்பும் ஆபிரிக்க யூனி யன் எதிர்கொள்ள தயாராவது அந்த அமைப்பின் மிகச்சிறப் பான தெரிவினையும். வளர்ச் சியையும் காட்டுவதாக உள்ளது. இத்தகைய நடவடிக்கை சூடானை மட்டுமல்ல; இப்பகுதி மீதி அமெரிக்காவின் சக்திகளின் ஊடுருவலுக்கே ஆபத்தானதாக அமையும். ஆபிரிக்க யூனியனின் சூடான் தொடர்பான தலையீட் டால் பாரிய திட்டமிடலுடன் நேர்த்தியாக மேற்கொள்ளப் பட்டதொன்றாகும்.


பிராந்திய,கண்ட அமைப் புக்களின் வளர்ச்சி ஆபிரிக்க யூனியன் போன்றதாகவே அமையவேண்டும். பொருளாதார இராணுவ வலுவில் பலவீனமான பிரதேசமாக காணப்பட்டாலும் அதன் துல்லியமான அரசியல் தூரநோக்கு மிகச்சிறப்பாகவே காணப்படுகின்றது. ஏற்கனவே பல தடவை ஆபிரிக்க யூனியன் பிராந்திய நாடுகளின் அரசியலில் ஈடுபட்டு தோற்றாலும் தற்போது அதன் அணுகுமுறை சிறப்பான பயன்பாட்டை தரக்கூடியதாகவே அமையும். பாதுகாப்பான இராணு வக்கூட்டுக்களின் கொள்கை வகுப புக்களும், நகர்வுகளும் அப்படி யானதாகவே அமையும். எனவே ஆபிரிக்க யூனியனின் முயற்சி வெற்றி பெற்றதோ தோற்றுப் போனதோ அல்ல அமெரிக்கா வினதும் அதன் கூட்டு சக்தி களின் முயற்சிக்கு ஒரு நெருக் கடி ஏற்பட்டுவிட்டது. இத்தகைய கண்காணிப்பையும் தலையீட்டை யும் நிராகரித்து அமெரிக்க சக்தி கள் செயற்படுவது கடினமான தாகவே அமையும். அத்தோடு லிபியாவின் ஈடுபாடு ஆபிரிக் காவுக்குள் தனது தனித்துவத்தை காட்டுவதாக அமைந்தாலும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுவருகின் றது. இதனால் சர்வதேச சக்தி யின் தலையீடு பெரும் அபாய மான கட்டத்தை அடைந்துவரு கின்றதெனக்கூறலாம். ஆபிரிக்க யூனியன் உலகமட்டத்தில் இயங்கும் பிராந்தியக் கூட்டுக் களுக்கு மிகச்சிறப்பான எடுத்துக் காட்டாகும்.




**ஐங்கரன்**


# ஒட்டுநர்களுடன் சில நிமிடம்









கடந்த காலயுத்தம் காரணமாக ஒரு தாசப்தத்திற்கு மேலாக A9 நெடுஞ்சாலையூடான யாழ், வன்னி போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.அதன் பின்னர் புலிகளின் ஓயாத அலைகள் சமரின் தொடர் வெற்றியும் அதனால் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் இவ்வீதியூடான பயணிகளின் போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதன் போது மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

ஆனால் இன்று மகிழ்ச்சி அடைந்த மக்கள் இவ்வீதியியை மரணப் பொறியாக நோக்கும் அளவுக்கு நிலைமையுள்ளது. காரணம் இவ்வீதியில் இடம் பெறுகின்ற மிகக் கொடூரமான வீதி விபத்துக்களே!

இவ்வீதி விபத்துகளுக்கு பல்வேறு காரணங்கள் பல தரப்பினராலும் கூறப்படுகின்றது. அதில் தொண்நூறு வீதமான குற்றச்சாட்டுக்கள் வாகன ஓட்டுநர்களின் மீதே சுமத்தப்படுகின்றது. அவ்வாறு ஓட்டுநர்கள் மீதான குற்றச்சாட்டுகளாக மதுபோதையில் வாகனத்தை செலுத்துதல், போதிய தூக்கம், ஓய்வு இன்றி தொடர்ச்சியாக வாகனம் செலுத்துதல், வீதிக்குறியீடுகளை, வேக எல்லைகளைக் கவனத்தில் கொள்ளாமை, வாகனம் செலுத்துதல் தொடர்பில் முழுமையான அறிவின்றி வாகன ஓட்டுநர்களாக செயற்படல் எனக்காரணம் கூறப்படுகின்றது

இவ்வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த காவல்துறையினரும் பகிரதப்பிரயத்தனங்களை மேற்கொள்கின்ற போதும் இவ்வீதி விபத்துக்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. விபத்துக்களுக்கு காரணமானவர்கள் வாகன ஓட்டுநர்களே என்கின்ற பொதுவான கருத்தே இப்பொழுது நிலவுகிறது. இக்கருத்தை மையமாகக் கொண்டு பல்வேறு வாகன ஓட்டுநர்களிடம் இவ்வாறான விபத்துகள் ஏற்பட்ட காரணம் என்ன என்றும் இதனைக்கட்டுப்படுத்த என்ன வழி எனவும் கேட்டோம். அவர்களின் கருத்துகள் பின்வருமாறு;

## தடைமுகாம்கள் ஒரு பிரச்சினை...?



ப.பகிரதன், தாண்டிகுளம் (12 வருடங்களுக்கு மேலாக பார ஊர்தி ஓட்டுநராக கடமை யாற்றுகின்றார்.)

"உண்மையிலேயே வீதி விபத்துகளுக்கு அதிக வேகம்தான் காரணமாக அமைகிறது. அதற்கு முக்கிய காரணம் இரண்டு தடை முகாம்களை உரிய நேரத்தில் கடக்க வேண்டியுள்ளதாகும். ஓட்டுநர்கள் வீதி களில் பொருத்தப்பட்டுள்ள வேக வரையறைகளை கடந்து அதிக வேகமாக செல்லும் போது வாகனம் கட்டுப்பாட்டை இழந்து எதிரேவரும் வாகனத்துடனோ, அல்லது வீதியில் இருந்து விலகியோ விபத்தை ஏற்ப டுத்துகின்றது. எனவே இரண்டு தடை முகாம்களை உரிய நேரத்தில் கடக்க வேண்டும் என்பதனாலேயே அதிக வேகமாக வாகனத்தை செலுத்த வேண்டி ஏற்படுகின்றது. இதனைத் தடுக்க வேண்டுமாயின் பெரும்பாலும் தடைமுகாம்களின் ஊடான போக்கு வரவு நேரத்தில் மாற்றம் ஏற்படுமாயின் இவ்விபத்துகள் குறையவாய்ப்புண்டு"

## ஓய்வின்றி வாகனத்தைச்செலுத்துவது...!




கந்தசாமி சுயேந்திரன்.
நீர்கொழும்பு.
(ஹயஸ் வாகன ஓட்டுநர் )

"சில ஓட்டுநர்கள் கொழும் பில் இரவிரவாக பயணிகளை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் வருவார்கள். அவர்கள் உரிய நேரத்துக்குள் இரண்டு தடைமுகாம்களைக் கடக்க வேண்டி ஏற்படுகின்றது. இந் நிலையில் தங்களுடைய வாகனத் தின் வேகத்தை அதிகரித்து செல் கின்றனர். இதன் போது வாகனம் விபத்துக்குள்ளாகின்றது. அத்துடன் சரியான ஓய்வின்மை காரணமாகவும் வாகனம் செலுத்தும்போது நித்திரை தூங்குவதாலும் வாகனம் விபத்தை சந்திக்கின்றது. அத்தோடு உரிய நேரத்தில் தடைமுகாமைக் கடக்க வேண்டும் என்று வேகமாகப் போகி றார்கள். சில நேரம் காற்றுப்போனால் ஒட்டி வெளிக்கிட்டுப் போகும் நேரம் தடைமுகாம் பூட்டப்பட்டு விடும் இவ் வாறான பிரச்சினைகளாலும் விபத்து ஏற்படுகின்றது."

---

அருள்


## வீதியின் அகலம் போதாது...!



சிவதாஸ், விசுவமடு பாரஊர்தி ஓட்டுநர் (டிப்பர்)

"இங்கேயுள்ள வீதிகள் அகலம் காணாமல் உள்ளது. இவ் வாறிருக்கும் போது சில வாகனங்கள் மிக வேகத்தில் வரும் போது விபத்து ஏற்படுகின்றது. அத்துடன் வீதிகளில் சில இடங்களில் சிறிய மேடுகள் (பம்மிங்) காணப்படுகின்றன இதனால் வாகனவிபத்துக்கள் ஏற்படுகின்றன. இதைக்கட்டுப்படுத்த வேண்டுமானால் வீதியை அகலமாக்க வேண்டும் அத்துடன் இப்பகுதியில் விபத்துக்கள் ஏற்படுத்துகின்ற ஓட்டுநர்கள் இராணு வக்கட்டுப்பாட்டுப்பகுதியை சேர்ந்த வர்களாக இருக்கின்றார்கள். எனவே இவர்களிடம் ஏதோவொரு பிரச்சினை இருக்கின்றது."

## அவசரத்தனமும் ஒரு காரணம்...!



ரவிசங்கர், மட்டக்களப்பு.

"பொதுவாகவே விபத் துக்களுக்கு அதிக வேகம் ஒரு காரண மாகும். குறிப்பாக என்னை எடுத்துக் கொண்டால் நான் மட்டக்களப்பில் இருந்து வருகின்றேன். எனக்கு இங்கே வந்த பிறகுதான் தெரியும் ஓமந்தை, முகமாலை எனும் இரண்டு சோதனைச் சாவடிகளைக் கடக்க வேண்டுமென்று. எனவே எனக்கு யாழ்ப்பாணத்துக்கும் ஓமந்தைக்கும் எத்தனை கிலோ மீற்றர் உள்ள தென்று தெரியாது. அத்துடன் மீளவும் இன்றே மட்டக்களப்பு திரும்ப வேண் டியும் ஏற்படுகின்றபோது வேகமாக வாகனத்தை செலுத்த வேண்டி யுள்ளது. இவ்வாறான நிலை என் போன்ற ஓட்டுநர்களுக்கும் ஏற்படு கின்றபோது வேகமாக வாகனத்தை செலுத்தி விபத்தில் சிக்குகின்றனர். இதனைத் தவிர்க்க வேண்டுமாயின் ஓட்டுநர்கள் நிதானமாக வாகனத்தை செலுத்துவதோடு தடைமுகா மினூடான போக்குவரத்து நேரம் கூட் டப்படும் போது ஓரளவு தவிர்க்கலாம் என நினைக்கிறேன்.


---

## வாகனம் செலுத்தல் தொடர்பான அறிவின்மை

குணவர்ராஜா-விசுவமடு.

(20 வருடமாக வாகன ஓட்டநராக கடமையாற்றிய அனுபவ முடையவர். பயணிகள் பேரூந்து ஓட்டுநர்)

வீதி விபத்துக்களுக்கு முக்கிய காரணம் அதிக வேகமாக வாக னத்தை செலுத்துவதுதான். அவ்வாறு செலுத்துகின்றவர்களுக்கு வாகன ஓட்டத்தின் முழுமையான விதியினை அறிந்திருக்க மாட்டார்கள். அதாவது முறையாக வாகன ஓட்டுநர்பயிற்சி



இன்றி குறுக்கு வழியில் அனு மதிப்பத்திரம் பெற்றவர்களாலும் இவ் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அத் துடன் ஓட்டுநர்கள் நித்திரை தூக் கத்தில் வாகனத்தை செலுத்தி விபத் தில் சிக்குகின்றனர். என்னைப் பொறுத்தவரை விபத்தை தடுக்க வேண்டுமாயின் ஓட்டுநர்கள் நிதா னத்தை கடைப்பிடிக்க வேண்டும். அத்துடன் இந்த A9 சாலையின் அகலமும் காணாமலுள்ளது. இத னையும் சீர் செய்யும் போது விபத்தை தடுக்கலாம்"

## ஓட்டுநர்களின் ஒற்றுமை...?



சதா-கிளிநொச்சி முச்சக்கரவண்டி ஓட்டுநர்.

விபத்துக்கு காரணம் அதிக வேகம் தான். காவல்துறை இதனைக் கட்டுப்படத்தும் நடவடிக்கையில் ஈடு பட்டாலும் காவல்துறை நிற்கின்ற இடத்தினில் மட்டும் வேகம் குறைந்து செல்கின்றனர். பின்னர் அதிவேகமாக செலுத்துகின்றனர். அத்துடன் ஒருவர் வேகமாக ஓடி காவல்துறையினரிடம் தண்டம் கட்டிவிட்டு செல்லும் போது, அல்லது காவல்துறை கண்காணிக் கின்றார்கள் எனும்போது எதிரே வரும் வாகனஓட்டுநர்களுக்கு சமிக்ஞை மூலம் உணர்த்திவிட்டு செல் கின்றனர். இதுவாகன ஓட்டுநர்களிடம் உள்ள ஒரு ஒற்றுமை. இதனால் ஓட் டுநர்கள் காவல்துறையினர் கண் காணிக்கின்ற இடங்களுக்கு சமீ பமான இடங்களில் மட்டுப்படுத்தப் பட்ட வேகத்துடனும் ஏனைய இடங்க ளில் அதிக வேகமாகவும் செல் கின்றனர் இதனாலும் விபத்து ஏற்ப டுகின்றது."

மேற்படி ஓட்டுநர்கள் வீதி விபத் துக்களுக்கு காரணங்களாக அதிக வேகத்தை கூறுகின்றனர். அதிக வேகமாக செல்வதற்கு தடை முகா மினூடான போக்குவரத்து நேரம் மட்டுப்படுத்தப்பட்டு உள்ளமையை கூறு கின்றதுடன் வீதியின் அகலம் காணாது உள்ளதும் வீதி விபத்துக்கு காரணமாக அமைகின்றது என் கின்றனர்.

ஆனாலும் நாம் இன்றைய நிலையிலிருந்து நான்காண்டுகள் முன்பிருந்து நிலையை சற்று சிந்தித் துப்பார்ப்போம். குன்றும் குழியுமான வீதிகள், வவுனியா செல்வதாயின் பலநாட்கள் தடைமுகாமில் தவங் கிடக்க வேண்டும். யாழ்ப்பாணம் செல்வதாயின் பலநாட்கள் திரு கோணமலையில் காத்துக்கிடக்க வேண்டும். இக்காலப்பகுதியில் எம் மவர்கள் இந்தநேர,நாள் மீதப் படுத்தல் பற்றி சிந்திக்கவில்லையே!

ஆனால் இன்று ஒரு புரியாத பரபரப்பு தொற்றிக் கொண்டுள்ளது இந்த வாகன ஓட்டுநர்களுக்கு. ஒரு நாளின் ஒரு மணித்தியாலத்தை அல் லது அரை மணித்தியாலத்தை மீதப் படத்தப்போய் தங்கள் உயிரையும், ஏனைய பயணிகளின் உயிரையும் காவு கொள்வதுடன் சிலரை ஊன முற்றவர்களாகவும் ஆக்கிவிடுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இவர்களின் கவலையீனத்தால் எத்தனை இன் னல்களுக்கு பயணிகள் ஆளாகின் றனர். இதை இவர்கள் எப்போது உணர்ந்து கொள்வார்கள். இவர்க ளின் மனநிலையில் மாற்றம் ஏற்படுமா?

**யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் அவர்களுடன் யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்துவரும் மக்களுள் பெண்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக நாம் கேட்டோம்.**

**அதற்கு அவர் நலன்புரி நிலையங்களில் வாழும் பெண்கள் சமூக, கலாசார ரீதியாக எத்தகைய சிக்கல்களை எதிர் நோக்குகிறார்கள், அவர்களுடைய ஆளுமையும், சக்தியும் எப்படி வீணடிக்கப்படுகிறதென் பதையும் தெளிவாகவிளக்கினார். அவருடனான நேர்காணலை இங்கு தருகிறோம்.**



யாழ்.மாவட்டத்தில் இன்றைக்கு கிட்டத்தட்ட 33 ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்து பெரும் அவலங்களுடன் வாழ்ந்து வருகின்றனர். இந்த இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை என்பது உண்மையில் நிலம் சம்பந்தமான பிரச்சினை என்றுதான் கூறமுடியும்.

சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப் பட்ட நிலப்பறிப்பு பல்வேறு காலங்களில் ஒவ்வொருவகையில் இடம்பெற்றுள்ளன. முதற்தரமாக நிலப்பறிப்பு வந்து கரையோரப் பிரதேசங்களை அண்டிய கிராமங்களில் சிங்கள குடியேற்றங்களை அமைத்து நிலப்பறிப்பினைச் செய்தனர். அடுத்தகட்டமாக எங்களுடைய பிரதேச நடுப்பகுதிகளில் தமிழ்மக்கள் அதிக மாக வாழ்கின்ற பகுதிகளில் சிங்கள, இன வெறியூட்டப்பட்ட, சண்டியர்கள் என்று சொல்லப் படுகின்றவர்களையும் சிறைக்கைதிகளையும் கொண்டு வந்து குடியமர்த்தினர்.

இதன் பின்னான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் மூலம் மக்கள் வாழ்விடங்களைவிட்டு விரட்டி யடித்து அவர்களின் வாழ்விடங்களை அபகரித்து நிலப்பறிப்பினை செய்துள்ளனர். அவை இன்னும் இந்த சமாதான காலத்தில் உயர்பாது காப்பு வலயங்கள் என்ற போர்வையில் இருந்து வருகின்றன. அந்தவகையில் இன்று 23 ஆயிரம் குடும்பங்கள் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பேரில் அவர்களுடைய சொந்த இடங் களில் இருந்து அகற்றப்பட்டுள்ளனர். அந்த மக்கள் நாளும் நாளும் ஏங்கிக்கொண்டு இருக்கின்றார்கள். தங்களுடைய

திருமணமும் நடக்கும். திருமணத்தின் பின் அந்த குடிசைக்குள்தான் மகப்பேறும் நடக்கும். அத்தோடு பருவமடைந்த பெண்ணும் அதற் குள்தான். இவ்வாறு எல்லா சம்பிர தாய நிகழ்வுகளும் அந்தப் பத் தடி சிறிய குடிசைக்குள் தான் நடக்கும். இவ்வாறு தமிழ் மக்கள் ஒரு கலாசார செழுமை மிக்கவர்களாக இருந்தவர்கள் இன்று கலாசார சீரழிவுகள் நிறைந்த ஒரு சூழலில் வாழ்ந்துகொண்டு இருக்கின்றனர். இதற் காகத்தான் விடு தலைப்புலிகள் அமை ப்பு ஒரு இடைக்கால நிர்வாக வரைவை, முக் கிய கோரிக்கையாகக்

தங்களுடைய தாய்மார்கள் தந்தைமார் என்ன சொல்லுவார்கள் என்று சொன்னால் எங்கட இடத்திற்கு எங்களை விடுங்கோ. நாங்கள் பச்சத்தண்ணி எண்டாலும் குடிச்சுக்கொண்டு நிம்மதியாகக் கிடப்பம் என்று. அந்தவகையில்

குள்ளேயே அடக்கிவைத்திருக்கின்றனர். ஏனெனில் வெளியில் அவர்களை விடமுடியாது. அவர்கள் முற்றத்தில் இறங்கினாலே! அவர்களின் நிலை சீரழிந்துபோகக்கூடிய நிலை காணப்படுகின்றது. அதனால் காலையில் எழுந்தவுடன் அதற்குள்ளே சிறுசிறு, வேலை களை செய்துவிட்டு அவர்கள் திரும்பப்படுத்து நித்திரைதான் கொள்கின்றனர். பின்னர் மதியம் சாப்பிட்டபின்னும் அந்தக் குடிசைக்குள்ளேயே படுத்து உறங்கவேண்டியதுதான். இப்படியே அவர்களுடைய சக்தி, அவர்களுடைய ஆளுமை, திறமை என்பன அவர்களிடம் இருந்து பறித்தெடுக்கப்பட்டு அவர்கள் ஒரு சடம் போல வாழ[illegible]நாக முகாம்களில் உள்ள தாய்மார் எல்லே[illegible]ம் [illegible]ழுதனர். இது மிகவும் ஒரு பாதகமா[illegible]மை. இந்த நிலையில் இருந்து பெண்களை விடுவிக்க வேண்டும் இன்னும் ஒரு தாய் குறிப்பிட்டார் தண்ணீர்ப் பிரச்சினை எல்லாம் பெரிய பிரச்சினையாம். தன்னுடைய குழந்தை மலம் கழித்து விட்டதால் தன்னுடைய குழந்தையை கழுவுவதற்கு இன்னுமொருதாயிடம் தண்ணீர் கடன் வாங்கி கழுவி இருக்கின்றார்.

ஆகவே, எங்களுடைய தமிழ்ப்பிர தேசத்தில் அதுவும் இவ்வளவு வளம்நிறைந்த பிரதேசத்தில் ஒரு கொஞ்சதண்ணீர் கடன் வாங்கிற நிலைமைக்கு நாங்கள் தள்ளப்பட்டு விட்டோம். அந்த நிலைக்கு சிறிலங்கா அரசு ஆளாக்கி [illegible]நக்கின்றது. இது மிகவும் ஒரு பாரதூரம[illegible] நிலை. அந்தந்த இடங்களில் சென்றுபார்த்தபோது சின்னச்சின்னப் பிள்ளைகள் அதாவது பதினைந்து பதினாறு வயதுடைய பிள்ளைகள் வாழவேண்டிய வயதில் திருமணங்களைச் செய்து இந்த சிறுவயதினரே ஒரு வயது குழந்தையுடன் வயிற்றில் ஆறுமாத குழந்தையைச் சுமந்தபடி நிற்கின்றார்கள். [illegible]ப்படிப் பலபெண்கள் இவர்களுடைய கணவன்மார் இவர்களைவிட்டு விட்டு வேறு திருமணம் செய்துள்ளனர். இப்படி இரண்டாவது மூன்றாவது திருமணங்கள் என்றுசெய்துகொண்டு இருக்

# நலன்புரி நிலையங்களில் வாழும் பெண்கள் ஒரு சடம் போல வாழ்ந்து வருகிறார்கள்

**- நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பர நாதன் -**

சொந்த இடத்திற்கு எப்போது போவோம் என்ற. தாகத்தோடு இருந்துவருகின்றனர். அதுவும் இந்த சமாதானப்பேச்சுக்கள் தொடங்கிய பின்னர் மிகவிரைவில் நாங்கள் சொந்த இடத்திற்குப் போவோம் என்ற ஒரு மிக, நீண்ட அவாவுடன் இருந்துவருகின்றனர். அதிலும் குறிப்பாக, முதியோர்கள், தாய் தந்தைமாரின் தவிப்பு இப்பொழுது கட்டுக்கடங்காத நிலையில் இருக்கின்றது. ஏனெனில் தாங்கள் தமது சொந்த இடத்திற்கு, எப்பொழுது போகமுடியும்

**நேர்காணல்**
**சு.பிரபா**

அல்லது நாங்கள் எமது சொந்த இடத்தைப் பார்க்காமலே, இறந்துவிடுவோமோ? தங் களுடைய பிள்ளைகளுக்கு தங்களுடைய இடத்தை காட்டமுடியாமல்போய் விடுமோ. என்ற ஒரு பெரிய ஏக்கத்தோடு அவர்கள் வாழ்ந்துகொண்டு இருக்கின்றனர். இந்த குழந்தைகளும் கூட எங்கட இடம் எங்கே இருக் கின்றது. நாங்கள் அதை எப்பொழுது பார்ப்பது. என்ற குமுறல்களோடு இருக்கின்றார்கள்.

எங்களுடைய விடுதலைப்புலிகளும் கூட, பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்லும்போது முக்கியமான கோரிக்கையாக வைத்தது இடைக்கால நிர்வாகம். அது ஏன் என்று சொன்னால் ஒரு இயல்புவாழ்க்கை எல்லா மக்களுக்கும் கிடைக்கவேண்டும் என்ப தற்காக இவ்வாறு இடம்பெயர்ந்து மிகவும் வசதிகுறைந்த ஒரு சிறிய பத்து அடி குடிசைக்குள் தங்களுடைய குடும்பங்களையும் அடக்கிக்கொண்டு அந்த ஒரு வீட்டிற்குள்ளேயே

கொண்டு மக்களின் இயல்புவாழ்க்கையை ஏற்படுத்துவதில் தீவிரமாகக்கொண்டு செயற் பட்டு பேச்சுக்களுக்கு இவ்இடைக்கால வரைவை தமிழ்மக்களின் கோரிக்கையாக வைத்துள்ளனர்.

ஒவ்வொரு மக்களும் இயல்பு வாழ்க் கையை வாழ்ந்துகொண்டு இருக்கும்பொழுது தான் அவர்கள் சமாதானத்தில் நம்பிக்கை வைத்திருக்கமுடியும். எல்லாமக்களும் சமா தானத்தை நம்பிக்கொள்வதாயின் தமது சொந்த வாழ்விடங்களில் இயல்பு வாழ்க்கையை வாழ வேண்டும். இதன்மூலம்தான் சர்வதேச நாடுகளும் சமாதானத்தில் பங்களிக்கமுடியும் என எதிர்பார்க்கின்றோம்.

எங்களுடைய எல்லாமக்களும் சமா தானத்தில் பங்களிப்பதாயின் அவர்கள் தங் களுடைய இடங்களில் காலம்காலமாக இருந்து அடிப்படை வசதியுடன் வாழ வேண்டும். ஒரு மனிதனுக்கு அடிப்படை வசதி கிடைக்க வில்லை என்றால் அவன் எவ்வளவு தூரம் மனரீதியாக பாதிக்கப்பட்டிருப்பான். அதுமிகவும் பயங்கரமான ஒன்றாகும். தன்னுடைய அதாவது ‘எலிவளை என்றாலும் தனிவளை வேண்டும்’ என்று சொல்வார்கள் அப்படி தன்னுடைய இடத்தில் ஒரு சின்ன இடம் என்றாலும் பரவாயில்லை தன்னுடைய இடத்தில் இருக்கும் பொழுதுதான் அவனுக்கு நிம்மதியாக இருக்கும் என்று சொல்லமுடியும்.

**நலன்புரிநிலையங்களில் வாழும் மக்கள் தொடர்பாக**

இடம்பெயர்ந்து முகாம்களில் இன்னும் வாழ்ந்துவரும் மக்கள் தொடர்பாக, அவர்கள்

எமது மக்களுக்கு அடிப்படை வசதிஒன்று இல்லாவிட்டால் ஒருமனப்பாதிப்பைத்தான் உருவாக்கும். இன்று ஒரு மன அழுத்தத்திற்கு உட்பட்டவர்களாகவும் அந்த மக்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இதனால் இந்தப் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்படவேண்டும்.

நாங்கள் பெண்களுடன் கதைக்கின்ற பொழுது அவர்கள் சில பிரச்சினைகளை எடுத்துச்சொன்னார்கள். அதுவும் ஆண்களுக் குத் கூறமுடியாத அந்தரங்கமான பிரச்சினை களையெல்லாம் மனம் வெதும்பி கூறினார்கள். அவர்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் அதாவது பெண்கள் மிகமோசமாகப்பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாங்கள் எங்களுடைய வீடுகளில் குளிக்கின்ற இடத்தை மறைத்து வைத்துத்தான் குளிப்பம். ஆனால் அந்தமுகாம் களில் அவர்கள் ஒரு பகிரங்கமான இடங்களில் தான் ஆண்களும் அந்த இடத்தில் குளிப்பார் கள். அந்த இடத்தில் பெண்களும் குளிக்க வேண்டிய நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளனர்.

மலசல கூடங்கள்கூட பெண்களுக்கு பாதுகாப்பானமுறையில் இல்லை என்று கூறி மிகவும் மனவருத்தப்பட்டார்கள் அங்கே. குழைகள் போடப்பட்டுக் கிடக்கின்றன. மலம் கழிக்கும் போதுகூட பாதுகாப்பாக இருக்க முடியாத ஒரு அவல நிலைக்கு எமது சமூகம் உள்ளாகி இருக்கின்றது.

மற்றது தங்களுடைய பருவமடைந்த பெண்களை, தங்களுடைய சிறிய குடிசைக்

கின்றார்கள். இவ்வாறு மிகவும் சீரழிந்த நிலையில்தான் இந்த இடம்பெயர்ந்த முகாம்கள் காணப்படுகின்றன. இது வந்து எமது இனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சதி என்றுதான் பார்க்கின்றோம். எமது கலாசாரத்தை எமது பண்பாட்டை எல்லாம் அழித்து எமது நிலத்தை பறிக்கின்ற ஒரு சதி நடவடிக்கை யாகவே, இதைநாம் பார்க்கின்றோம். யுத்தத் தினால் பெரிதும் பெண்களும் குழந்தைகளுமே, மிக மோசமாகப்பாதிக்கப்பட்டுள்ளனர்.

**பெண்களுக்கான உரிமைகள் எவ்வாறு மறுக்கப்படுகின்றன.**

பெண்கள் நாங்கள் எவ்வளவுபேர் இந்த உரிமைகளை பெற்று வாழ்வதற்கு தயாராக இருக்கின்றோம் என எங்களுடைய மனங்களைத் தொட்டுக்கேட்டுப்பார்க்கவேண்டும். ஏனெனில் இன்றைக்கு பாரம்பரிய வளர்ப்பு முறை எப்பொழுதுமே பெண்களைத் தங்கித் தான் வாழப்பழக்கியுள்ளன. அதாவது தாயில், தந்தையில், பின்னர் கணவனில் அதன்பின் பிள்ளைகளில் தங்கிவாழத்தான் சமூகம் பழக்கியுள்ளது. அந்தப்பழக்கத்தினால், இன்றும் பெண்கள் சாதுவான பெண்களாகப்போகத்தான் விருப்பமாக உள்ளனர். கூர் உணர்திறன் உள்ளவர்களது ஒரு விழிப்புணர்வு உள்ளவர் களாக அல்லாமல் எங்களுடைய பாரம்பரிய

(18 ஆம் பக்கம் பார்க்க)

அனலைதீவுக்கு அருகாமையில் வடசிறிலங்கா கடற்படை தளபதியை அவலத்துக்குட்படுத்திய கடல் கண்ணிவெடித்தாக்குதலுக்கு அடுத்து - இதே கடற்பகுதியில் சிறிலங்கா கடற்படையை தாக்கும் இலக்கு தேடப்பட்டது. இதன்படி இலக்காக மற்றொரு சிறிலங்கா கடற்படை வேகப்படகுதெரிவானது 1991 ஒக்டோபர் 2ஆம் திகதி காரைநகா தளத்துக்கும் எழுவைதீவுக்கும் இடையே சிறிலங்காக்கடற்படைப் படகு ஒன்று சுற்றுக்காவலில் ஈடுபட்டது. இந்த கடற்படைப்படகை கடற்புலிகள் நேர்எதிராக எதிர்கொண்டு தாக்கினர். கடற்படை உயர்பாதுகாப்பு வியூகங்களிடையில் கடற்புலிகள் நேர் எதிர்கொண்டு இந்தத்தாக்குதலை வெற்றிகரமாக நடத்தினர். இந்தத் தாக்குதலில் கடற்படைப் படகு மூழ்கடிக்கப்பட்டது. அதில்சென்ற கடற்படையினரில் 5பேர் கொல்லப்பட்டனர். கடற்படைப்படகிலிருந்த AK LMG உட்பட்ட ஆயுதங்கள் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டு தளத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

இதேபோன்றதொரு தாக்குதல் இதேபகுதியில் 1992 சனவரியில் கடற்புலிகளால் மேற்கொள்ளப்பட்டு - கடற்படை வேகப்படகு மூழ்கடிக்கப் பட்டது.




## 19

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

இப்பொழுது நாங்கள் 18 ஆண்டுகளுக்குப் பின் செல்வோம். இதே தீவுகளின் கடற்பரப்புக்கு - அப்போது இந்தக்கடற்பரப்பில் ராசாக்களாக உலாவியவர்கள் சிறிலங்காக்கடற்படையினர் - குறிப்பாகச் சொல்லப்போனால் அச்சமின்றிய கடலரசன்களாக தங்களை சிறிலங்காக் கடற்படையினர் அங்கு காட்டிக்கொண்டனர். அப்பொழுது யாழ்ப்பாணத்திலேயே அவர்களின் கடற்படைத்தளங்கள் காரைநகர் எலராவும் - நயினாதீவுமாகவே இருந்தன. இந்தக் கடற்படையின் திமிர்த்தனத்தின் - துணிந்த வெளிப்பாடுதான் 1985 மே 15 இல் நெடுந்தீவு பயணிகள் படகான குமுதினிப்படகு நடுக்கடலில் சிறிலங்காக்கடற்படையால் மறிக்கப்பட்டு 6மாதக்குழந்தை உட்பட 36 அப்பாவிமக்கள் வெட்டிச் சரிக்கப்பட்டதாகும். 1986இல் மண்டைதீவு கடற்பரப்பில் 30 குருநகர் மீனவர்கள் கடற்படையினரால் வெறித்தனமாக வெட்டிக் கொல்லப்பட்டதாகும். இவைபற்றி பின்னர் விளக்கமாகப்பார்ப்போம்.

குமுதினி கொலைமூலம் தீவுகளின் கடற்பயணிகளுக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்திய காட்டுமிராண்டிகளாக சிங்களக்கடற்படை உண்மைத் தோற்றத்தை காட்டியது. மக்களை கொல்லும் கடற்படைத்திமிர்த்தனத்துக்கு பலத்த அடியொன்று விடுதலைப் புலிகளால் கடற்படைக்கு 1986இல் கொடுக்கப்பட்டது.

அப்போது தீவுக்கடலில் சிறிலங்கா கடற்படையினர் வெளியிணைப்பு இயந்திரம் பொருத்திய அதிவேகப்படகுகளையே பயன்படுத்தினர். இவர்களின் இராச்சியம் கச்சதீவுவரை இருந்தது. விடுதலைப்புலிகள் தீவகத்தில் முனைப்பான செயற்பாட்டை ஆரம்பித்தபின் கடற்படையினரை தாக்காது (1986 மார்ச் 3வரை) - கடற்படையினரே அறியாதவகையில் விடுதலைப்புலிகள் ஒரு தந்திரோபாயத்தை பயன்படுத்தினர். இந்த தந்திரோபாயத்தால் சிறிலங்கா கடற்படையினரின் சுற்றுக்காவல் புங்குடுதீவுடன் மட்டுப்படுத்தப்பட்டது. புங்குடுதீவு உள் கடற்படை சுற்றுக்காவலை மட்டுப்படுத்தி - விடுதலைப் புலிகள் கச்சதீவு - இரணைதீவு, நெடுந்தீவு ஆகிய தொலைதூர தீவுகளை மார்சீகமாக தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்து செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

தமது தந்திரோபாயத்தால் கடற்படையினரின் கடலாதிக்கத்தை தீவுக்கடலில் மட்டுப்படுத்திய விடுதலைப்புலிகள் - அடுத்தகட்டமாக கடற்படையினரை கடலில் வைத்து தாக்கத் திட்டமிட்டனர். அதுவரை சிறிலங்கா கடற்படையின் மீது கடலில் வைத்து தாக்கப்படவில்லை என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

தீவுக்கடலில் கடற்படையினர் தமது வேகப்படகில் 14 - 15 பேரே செல்வதை வழமையாகக்கொண்டிருந்தனர். முதலில் இவர்களை கைக்குண்டுகள் வீசி, துப்பாக்கியால் சுட்டுத் தாக்கத்திட்டமிடப்பட்டது.

அவ்வாறே நடத்த மேற்கொண்ட நடவடிக்கை இறுதிக்கணத்தில் தந்திரோபாயம் கருதி கைவிடப்பட்டது. எதுவித இழப்புமின்றி கடற்படைக்கு பலமாக அடிகொடுக்க வேண்டும் என திட்டமிடப்பட்டது. அதற்கான வேவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஒரு கண்ணிவெடி அல்லது குண்டுத்தாக்குதலை கடற்படைப்படகு மீது மேற்கொள்வது என்ற அடிப்படைநோக்கிலேயே இலக்குக்கான தேடல் நடந்தது. நீண்டதேடலின் பின்-வேவுகளின் பின் ஒரேதடவையில் கடற்படை படகையும் அதில்வரும் 14 கடற்படையினரையும் கொல்வதற்கான இலக்கு தெரிவானது.


குமுதினியில் கொல்லப்பட்ட 36 மக்களின் குருதியை நிறைத்த சிங்கள கடற்படைக்கு ஒரு பதிலடியாகவும் இதை கொள்ளலாம். சிங்கள கடற்படைக்கு முதல்பெரும் அடியாகவும் அது அமைந்தது.

**துருவன்**

## தொல்லியல்


# சாட்டியில் எழுத்துப் பொறிப்புகளுடன் 2000 வருடங்களுக்கு முற்பட்ட மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிப்பு

தீவகத்தில் சாட்டி என்னும் இடத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ப.புஷ்ப ரட்ணம் தலைமையில் முதலாம், இரண்டாம் வருடத்தொல்லியல் கற்கை நெறி மாணவர்கள் இணைந்து "D" எனப்பெயரிடப்பட்ட தொல்லியல் மையத்தில் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் அகழாய்வில் 2000 வருடங்களுக்கு முற்பட்ட மனித எலும்புகளைக் கண்டுபிடித்துள்ளனர். இதுபற்றி கலாநிதி புஷ்ப ரட்ணம் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வெலும்புகளுடன் 2000 வருடங்களுக்கு முன்னர் புழக்கத்தில் இருந்த பிராமி எழுத்துப் பொறித்த மனித எலும்பு, சங்கு, மட்பாண்டங்கள் போன்ற பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் இவ்வெலும்புக்கு உரிய மனிதன் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்தவர் என்பது உறுதியாகத் தெரிகிறது. இதுபற்றி அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், இதுவரை நாம் அடையாளம் கண்டுள்ள பத்துக்கு மேற்பட்ட ஈமச்சின்னத்தில் நான்கு



இடத்தில் இருந்த ஈமச்சின்னங்களுக்குரிய தொல்லியல் மையங்களை முழுமையாக அகழ்வுசெய்து பார்த்துள்ளோம். அவற்றுள் "B" எனப் பெயரிடப்பட்ட தொல்லியல் மையத்தைத் தவிர ஏனைய மூன்று மையங்களும் தீவகத்தில் வாழ்ந்த பூர்வீக மக்களின் பல்வேறுபட்ட பண்பாட்டு விழுமியங்களைப் புலப்படுத்தி நிற்கின்றன. இதுவரை தென் தமிழகத்தை ஒத்த குழியடக்கம், அல்லது தாழியடக்க ஈமச்சின்ன மரபே இலங்கையில் அதிலும் குறிப்பாக வடஇலங்கையில் இருந்திருக்கலாம் என்ற கருத்து ஆனைக்கோட்டை, மாந்தை போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பின்னர் முன்வைக்கப்பட்டது. ஆனால் சாட்டியில் கண்டுபிடிக்கப்பட்ட ஈமச் சின்னங்கள் இக்கருத்தை முற்றாக மாற்றி 2000 வருடங்களுக்கு முன்னரே இலங்கைத் தமிழரிடையே தனித்துவமான கலைமரபுடன் கூடிய ஈமச்சின்னத்தை அமைக்கும் கட்டடக்கலை மரபு தோன்றி வளர்ந்ததென்பதை தெளிவாகக் கோடிட்டுக்காட்டுகின்றன. இதற்கு உதாரணமாக "D" எனப் பெயரிடப்பட்ட தொல்லியல் மையத்தில் நாம் கண்டுபிடிக்கப்பட்ட ஈமச் சின்னத்தின் கட்டட அமைப்பையும், அவற்றில் இருந்து கண்டுபிடிக்கப் பட்ட தொன்மைச் சான்றுகளையும் சுட்டிக்காட்டலாம்.

இவ்ஈமச்சின்னம் இயற்கையாக அமைந்த பாறையில் ஏறத்தாழ 20x20 அடி நீள அகலம் கொண்ட இரு தட்டுடைய மேடையொன்று அமைக்கப்பட்டு அதன் மத்தியில் 2அடி ஆழம்கொண்ட வட்டமான குழி வெட்டப்பட்டு அதற்கு மேலே கூடிய தொழில்நுட்பத்துடன் ஏறத்தாழ 6அடி உயரமான வட்டமான கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இவ் ஈமச்சினனக்கட்டடத்தின் மேற்பகுதியை அப்பிரதேசத்தில் காணப்பட்ட சுண்ணாம்புக்கற்களையும், மண்ணையும் கொண்டு மூடிக் கட்டியுள்ளனர். இவ்விடத்தை நாம் முதலில் பார்த்தபோது அந்த இடம் மண், மணல், கல்பற்றைகள் நிறைந்த



ஒரு மேடாகவே காட்சியளித்தது. பின்னர் அவ்விடத்தைச் சுற்றிவர அகழ்ந்து பார்த்தபோதுதான் அதற்குள் 2000 வருடங்களுக்கு முன்னர் சாட்டியில் வாழ்ந்த மக்களின் கலை நுணுக்கம், வாழ்க்கை முறையை, பண்பாடு, மறுபிறப்புப் பற்றிய எண்ணக்கருத்துக்கள் போன்ற அம்சங் களை அறிய முடிந்தது. இந்த ஈமச்சின்னக் கட்டடத்திற்குள் நான்கு வகையான கலாசார மண் அடுக்குகள் காணப்பட்டிருந்த போதும் அவற்றுள் மனித எலும்புகள் காணப்பட்ட இரண்டாவது கலாசாரப்படை அதிக முக்கியத்துவம் உடையது. இது பாறையின் மத்தியில் தோண்டப்பட்ட 2அடி ஆழமுமுடைய குழிக்குள் அடக்கம்செய்யப்பட்டநிலையில் காணப்பட்டது. இந்த எலும்புகள் குழியின் மையத்தில் சுதை, கல் போன்ற பொருட்களால் அமைக்கப்பட்ட மிகச் சிறிய தட்டையான மேடையில் வைக்கப்பட்டு அதற்கு மேலே வட்டமான மூன்று கற்களால் மூடப்பட்ட நிலையில் அடக்கம் செய்யப்பட்டிருந்தது. இதற்கு அருகில் இறந்தவருக்குப் படைக்கப்பட்ட நிவேதனப் பொருட்களாக மட்பாண்டங்களுடன் பிராமி எழுத்து பொறித்த சங்கு மற்றும் சிப்பி, எலும்புக் கருவிகள், இரும்புக் கருவிகள், கடல் உணவின் எச்சங்கள், பறவைகளின் சிறிய கால்களுடன் கூடிய எலும்புகள் என்பவற்றுடன் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களுக்கே சிறப்பாக உள்ள கறுப்புச் சிவப்பு நிற மட்பாண்ட ஓடு ஒன்றில் மீன் போன்ற வடிவமும், அதற்கு அருகில் தூண்டில் போன்ற சித்திரமும், இவ்விரு வடிவங்களுக்குக் கீழே "ராசா" என வாசிக்கக் கூடிய இரு.பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்ட ஓடு ஒன்றும் காணப்பட்டன. இது இங்கு கிடைத்த சான்றுகளில் மிகச் சிறப்பாக குறிப்பிடத்தக்கது. அத்துடன் அடக்கம் செய்யப்பட்ட எலும்புகளில் ஒன்று மனித வடிவில் வெட்டப்பட்டு அதன் ஒரு பக்கம் தட்டையாக வடிவமைக்கப்பட்டு அதன் மேல் ஒன்பது பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது இங்கு கிடைத்த இன்னொரு அரிய சான்று எனக்குறிப்பிடலாம். இதில் பொறிக்கப்பட்டுள்ள அனைத்து எழுத்துக்களும் தற்போது சரிவர வாசிக்கக்கூடிய நிலையில் காணப்படாவிட்டாலும் இரண்டாவது வரியில் உள்ள மூன்று எழுத்துக்களையும் "பாகன்" என வாசிக்கக் கூடியதாக இருக்கிறது. இதன் பின்னொட்டு சொல் தமிழில் ஆண் மகனைக் குறிக்கும் "அன்" என்ற விகுதியுடன் முடிவதால் இது ஒரு தமிழ்ப்பெயர் என்பது உறுதியாகின்றது. இந்த எழுத்துப் பொறித்த சாசனத்தைப் பார்வையிட்ட பேராசிரியர் சிவசாமி இவை இறந்தவரின் பெயரையும், தொழிலையும் குறிப்பதாக இருக்கலாம் எனக் கருத்துத் தெரிவித்துள்ளார். ஆகவே ஈமச்சின்னத்துள் கிடைத்த பலதரப்பட்ட சான்றுகளுடன் எழுத்துப்பொறித்த எலும்பு, சங்கு, மட்பாண்டங்கள் போன்ற வற்றை ஒப்பிட்டுப்பார்க்கும் போது இங்கு அடக்கம்செய்யப்பட்டுள்ள மனிதனது எலும்புகள் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னர் சாட்டியில் வாழ்ந்த பூர்வீக குடிமகனுக்கு உரியதென்பது உறுதியாகத் தெரிகிறது. இவ்வெலும்பும் அவற்றுடன் கிடைத்த சாம்பலும் பம்பாயில் உள்ள ஆய்வு மையத்தில் காபன் காலக்கணிப்பிற்கு உட்படுத்தப்பட இருப்பதால் இவ் ஈமச்சின்னத்தின் காலம் பற்றிய கருத்து மேலும் தெளிவுபெறலாம்.



**குரலோன்**

# ஓயாத அலைகள் இரண்டில் எங்கள் கிளிநகர் மீட்டோம்

க.மிரேசு



மின்னி எழுந்திட்ட ஓரிரு நெருப்பு பொறிகளின் சிதறல் தூரத்தே எங்கோ கேட்டிடும் ஓரிரு வேட்டுச் சத்தங்கள் இவை எமக்கு பழக்கப்பட்டு போன நினைவுகள், சாட்சிகள் என்றாலும் இன்றைய இரவில் அது புதிதானதொன்றேயாகும். வானத்தில் மெலிதாய் தெரிந்த விண் மீன்கள் சிலவற்றின் ஒளியைத் தவிர எதுவுமே அங்கு தெரியாதளவு காரிருள் சூழ்ந்திருந்தது. மிக மிக அருகாய் கேட்டிடும் எதிரியின் வறட்டு இருமல் கொக்... கொக்..... என கேட்டுக் கொண்டே இருந்தது. அந்த ஒலியைத் தவிர வேறெதுவுமே அந்தச் சூழலில் எமக்கு கேட்கவில்லை.

அந்த அமைதியான இருள் படர்ந்த சூழலில் இதமாய் வீசிய சோளக்காற்றின் வருடல் உடலுக்கு சுகமாயிருந்தாலும் சுவாசிக்க கடினமாய் இருந்தது. காரணம் எதிரியின் காவலரணிலிருந்து வந்த புகைத்தல் நெடி ஏதோ செய்வதாக இருந்தது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக அணிகள் அனைத்தும் எதிரியின் பாசறையை நோக்கி நகர்ந்து கொண்டே இருந்தன. அணிகள் மிகமிக நெருங்குதலை செய்துகொண்டே இருந்தது.

சாதாரணமாக ஒரு கல் தூரத்தை கடப்பதற்கு 30 நிமிடங்கள் போதுமானது. ஆனால் போராட்ட களங்களிலோ எல்லாம் வித்தியாசமாகவே அமையும். வேகமாக முன்னேற வேண்டுமானால் ஒரு கல் தூரத்தை ஒரு சில நிமிடங்களில் முன்னேறலாம். ஆனால் விவேகமுடன் எதிரியின் பாசறைநோக்கி நகரும் நேரங்களில் ஒரு அடி தூரத்தை கடக்க ஓரிரு மணி நேரம் எடுக்கலாம். அங்கேதான் வெற்றி தீர்மானிக்கப்படுகிறது. இது போன்ற போரியல் அடிப்படை நியதிகளை தன்னகத்தே கொண்ட அனைத்து தாக்குதல் அணிகளும் மிக நிதானமாக, மிக கவனமாக மிக அவதானிப்புடன் நகர்வை செய்து கொண்டிருந்தன.

இதன்போது எதிரியின் முகாம் பகுதி ஒரு சுடுகாட்டை ஒத்ததாக இருந்தது. எங்கோ இடை இடையே பார்க்கும் ஊர்ச் சுடலையை நினைவு படுத்தியது. இது சில வேளை நாளை உண்மையாகலாம் என்ற எண்ணத்துடன் நகர்ந்து கொண்டிருந்தோம். அன்றைய நாள் இன்றும் எம் நினைவை விட்டு நீங்கவே இல்லை. அன்று 1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் நாள் இரவு 11.00 மணி ஆகியிருந்தது.

அணிகள் தங்கள் களவேலைகளின் இறுதிக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தன. மச்சான் றோபிறோ சரியா... கட்டர் சரியா... குறடு சரியா என்ற குசு குசுத்த குரல்கள் தங்களின் தடை உடைப்பைப் பற்றிய சரி பார்த் தலை மீண்டும் மீண்டும் உறுதிப் படுத்தினர். தடையணிகள் அக்கா நெருங்கி விட்டோம். தடைக்கு கிட்டப் போக இன்னும் சில அடி தூரமே இருக்கிறது. உதவி அணியை தயார் படுத்துங்கோ. என்று குசு குசுக்கும் பெண் போராளிகளின் குரல்கள் நடைபேசியில் கேட்டவாறே இருந்தது.

நேரம் நெருங்க நெருங்க தாக்குதலுக்கான நேரமும் நெருங்கிக் கொண்டே இருந்தது. எங்குமே ஒரே நிசப்தம் நிலவியதால் ஏதோ ஒரு புதிய உலகத்தில் இருப்பது போன்ற உணர்வு மேலிட செய்தது. ஒவ்வொரு நிமிடமும் இப்போது ஒரு யுகமாய் தெரிந்தது. ஒவ்வொருவரும் அவர் அவரை நன்கு தயார்படுத்திக் கொண்டனர். அந்தச் சண்டையில் எந்தப் பிழை வந்தாலும் அது ஒட்டு மொத்தமாக எல்லோரையும் பாதித்து விடும். எனவே ஒவ்வொருவரும் தங்களது களப்பணிகளை மிக மிக அவதானமாக செய்து கொண்டிருந்னர். தாக்குதலுக்கு சில நிமிடங்களே இருந்தபோதும் போராளிகள் தங்களது தயார்படுத்தலை விடாமல் செய்து கொண்டும் தயார் நிலையை மேலும் உசார்படுத்திக் கொண்டும் இருந்தனர். காப்புச் சூட்டு அணிகள் மிக நிதானமாக தங்களுக்கு ஏதுவான இடத்தை தெரிவுசெய்து நிலைப் படுத்திக்கொண்டிருந்தனர். அணிகள் உடைப்பை ஏற்படுத்தப் போகின்ற இடத்திற்கு வலம் இடமாக காப்புச் சூடுகள் (Cover Fairing) சரியாக நிலைப்படுத்தப்பட்டன.

கனரக ஆயுத அணித் தலைவர்கள் தங்களது இயந்திரத் துப்பாக்கியை மீண்டும் மீண்டும் சரி பார்த்தனர். தடை அணிகள் தங்களது அடுத்த அடுத்த றோபிற்ரோ காரர்களையும் கட்டர்காரர் களையும் சரி பார்த்து உறுதிப்படுத்திவிட்டனர். போராளிகள் தங்களது துப்பாக்கி களையும், உந்து கணை செலுத்திகளையும், கைக் குண்டுகளையும் முத்தமிட மறக்கவில்லை. காரணம் போராளிகளின் ஆயுதங்களே இந்தத் தாக்குதலையும் நிர்ணயிக்கப் போகின்றன. ஏனைய அணிகளும் தங்களது நகர்வையும் தங்களது காப்பையும் உறுதி செய்தனர். அணித் தலைவர்கள் மேலதிகாரிகளின் தொடங்கு நிலை கட்டளைக்காக காத்திருந்தனர். அனைத்து அதிகாரிகளும், பொறுப்பாளர்களும் களத்தினுள் புகப்போகும் தளபதிகளும் கட்டளைத் தளபதிகளின் கட்டளைக்காக தங்களது தொலைத் தொடர்பு கருவிகளில் வரும் சமிக்ஞைக்காக காத்திருந்தனர். கிளிநொச்சியை ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் படை முகாம் அழிவை நோக்கி நெருங்கிக் கொண்டிருந்தபோது நேரம் இரவு 12.25 ஆகியிருந்தது. தாக்குதல் தொடங்க இன்னும் இரண்டு மூன்று நிமிடங்களே இருந்தது.

கிளிநொச்சி முன்னரங்க பகுதியில் நகர்ந்து கொண்டிருந்த சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணியின் பகுதியான பால்விற்பனைச் சாலை பக்கமாக காவலரண் தொடரில் இருந்து வெளியில் 100 மீற்றர் தூரத்தில் இருந்த எதிரியின் காப்பிடும் அணி திடீரென எதிர்பாராத தாக்குதல் ஒன்றை தொடுத்தது. சடுதியாய் எழுந்த ரவைத்தொடரை எவரும் எதிர் பார்க்கவில்லை 20-30ஒளிர் ரவைகள் எதிரி பக்கமாகவே மேல் நோக்கி எழுநதது. வெடிச்சத்தம் கேட்ட எதிரியின் திரையிடும் அணிக்கும் எமது காப்புச் சூட்டணிக்கும் இடையே 60-70 மீற்றர் இருக்கும். ஆனால் நகர்ந்து கொண்டிருந்த அணி களோ வேவுக்காரரோ அந்த எதிரி அணியை காணவில்லை என்பது யதார்த்தமாகிவிட அணிகள் தொடந்து நகர்ந்தது.

எதிரியின் அணி ஒன்று திடீரென தொடுத்த தாக்குதல் எல்லோருக்கும் ஒரு அதிர்ச்சியை தந்தது. எதிரி உசார் அடைந்து விட்டால் தாக்குதலின் முழு போக்குமே மாறிவிடும். அப்படி மாறினால் உள்ளே தாக்குதலுக்கு சென்றிருந்த விசேட அணிகளினது நிலைமை மிக மிக மோசமாகிவிடும் என்ற அச்சம் எல்லோர் மனதிலும் எழுந்தாலும் எவருமே பதற்றப்படவில்லை. தற்செயலாக எதிரி எம்மில் ஓரிருவரை கண்டிருக்கலாம் அல்லது சந்தேகத்தில் அடித்திருக்கலாம் என்றே எல்லோரும் சிந்திக்க அதன் பின் எதிரியின் எந்த வித அசைவோ காணப்படவில்லை. தாக்குதலின் நேரம் நெருங்கிவிட்டிருந்தது. தொலைத்தொடர்பு கருவிகள் சங்கேத மொழியை வெளியிட்டன. இப்போது நேரம் சரியாக 1.30 ஆகிவிட்டது. எல்லா இருளையும் கிழித்துக் கொண்டு பல இடங்களில் மின்னல் போல் ஒளிக் கீற்றுக்கள் தோன்றி மறைவதற்குள் நிசபதத்தை களைத்து டொம் டொம் என்ற சத்தங்கள் காதைக் கிழித்தன காப்புச் சூட்டாளர்களின் இயந்திரத் துப்பாக்கிகள் உயிர் பெற்று சன்னங்களை கக்கி நெருப்பை உமிழ்ந்தன.

எங்குமே ஒரே வெடியோசை அத்தோடு அணிகளின் சண்டையின் ஆரவாரங்கள் எதிரியின் தடையை உடைப்பதற்கான இடைவிடாத முயற்சியில் தடை அணிகள் ஈடுபட்டுக்கொண்டிருந்தன. இயந்திரத்துப்பாக்கிகளும் உந்துகணை செலுத்திகளும். கனரக துப்பாக்கிகளும் எதிரியின் காவலரண் தொடர்களை நாசம் செய்து கொண்டிருந்தன. சில நிமிடங்களுக்கு முன் கடும் இருளில் மூழ்கியிருந்த கிளிநொச்சி நகரமும் அதன் சூழலும் பலவிதமான வர்ண ஒளிக்கீற்றுக்களால் ஒளிர்ந்தன. நூறுக்கும் குறையாத தேடொளிகள் வானில் ஒளிரிக் கொண்டிருந்தன. இப்போது இருள் சூழ்ந்த நடு நிசியானபோதும் பகலா இரவா என இனம் காணமுடியாமல் அன்றைய இரவு வெளிச்சமாக இருந்தது. எப்படியும் இம் முறை எதிரி தோற்கடிக்கப் படுவான் என்ற நம்பிக்கை எல்லோரிடத்திலும் மேலிட்டது.

கிளிநொச்சியில் முகாமிட்டிருந்த எதிரிப்படை எங்கிலும் மிக துல்லியமாக கிட்டு ஏவுகருவிப் படையணி எறிகணைகளை ஏவிக் கொண்டிருந்தது. அதே நேரத்தில் எதிரியின் முன்னரங்கு நிலைகளையும் கனரக ஆட்லறி பீரங்கிப் படையணியின் எறிகணைகள் துவம்சம் செய்து கொண்டிருந்தன. மொத்தத்தில் கிளிநொச்சி நகரம் பெரும் விடிவுக்கான போர் ஒன்றையும் ஆக்கிரமிப்பாளர்கள் அழிவதற்கான போரொன்றையும் எதிர் நோக்கிக் கொண்டிருந்தது. வெடிச் சத்தங்களும் எறிகணைச் சத்தங்களும் வானைப் பிளந்தன. கண்ணுக்கு எட்டிய தூரம்வரை ஒளிர் ரவைகள் வானை வட்டமிட்டன.போராளிகளினதும் எதிரியின் சத்தமும் பேரிரச்சலை இனங்காண முடியாமல் போய் விட்டிருந்தது.

எதிரியின் காவலரண்களும் வேலியும் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. சண்டையின் போக்கு இப்போது மாறியிருந்தது. ஆரம்பத்தில் எதிரி உசார் அடையாவிட்டாலும் இப்போது உசார்படுத்தப்பட்டுவிட்டான். எதிரியின் பக்கம் இருந்து எதிர்த்தாக்குதல் உக்கிரமடைந்தது. அப்போது எமது பக்கம் சண்டையின் போக்கு மாறத் தொடங்கியது.

டேய் விடாதே அடி அடிபரா வெளிச்சத்தில் நிற்கிறது தெரியுது அடிடா அடி.

அடியே குண்டை கழற்றி எறியடி வேகமா எறி.

அந்தா பார் அந்த வேலிக்கரையால கொஞ்சப்பேர் வாறன். டொங்கானை அடி அடி.

கிளிநொச்சியின் பூகோல அமைப்பை கருத்தில் கொண்டுதலைவர் அவர்களால் மிக நன்கு தீட்டப்பட்ட திட்டம் தான் கிளிநொச்சியைப் பிடிக்கும் ஓயாத அலைகள்-02 நடவடிக்கை ஆகும். எதிரியால் சத்ஜெய நடவடிக்கை மூலம் கட்டம் கட்டமாக கைப்பற்றப்பட்ட கிளிநொச்சி நகரமும் அதன் அயல்பிரதேசங்களும் பெரும் விவசாய நிலங்கள் மட்டுமல்ல: பொருண்மிய வளம் நிறைந்த மண் என்பதை எதிரி உணர்ந்தே 1996ஆம் ஆண்டு இதனைக் கைப்பற்றினான். ஏற்கனவே தம்வசமிருந்த ஆனையிறவு, கட்டைக்காடு முகாம்களை உள்ளடக்கிய ஊரியான் தொடக்கம் டிப்போச்சந்தி ஊடாக சுட்டதீவு வரையுமான நீண்டதொரு பிரதேசத்தை ஆக்கிரமித்த சிங்கள அரசபடைகளாகனது நீண்டதொரு இராணுவ மேலாண்மைநோக்குடனே இந்த முகாமை கைப்பற்றி பலமான முன்னணி அரண்களையும் பலமான சிறிய, பெரிய முகாம்களையும் அமைத்து பாரியதொரு இராணுவ வலயமாக தன்னகத்தே வைத்திருந்தது.

இதற்கு புவியியல் சார்ந்த பலகாரணங்கள் இருந்தாலும் இராணுவம் சார்ந்த காரணங்ளே முதலிடத்தை வகித்தது.

யாழ் குடா நாட்டில் நிலை கொண்டிருந்த 30.000க்கு மேற்பட்ட சூரியக் கதிர்படைகளின் பாதுகாப்பும்.

முல்லைத்தள வீழ்ச்சியின் பின் தனக்கு ஏற்பட்டிருந்த இராணுவ வளங்கள் விநியோக மார்க்க அச்சுறுத்தலை ஓரளவு பாதுகாப்பதற்கும்.

புலிகளின் அடுத்தகட்ட யாழ்நகர் மீதான தாக்குதலை சீர்குலைக்கவும் தான் எதிர்காலத்தில் திட்டமிருந்த தரைவழி இராணுவ விநியோகத்திற்கான இராணுவ நடவடிக்கையின் சாதக நிலையை கருத்தில் கொண்டே திட்டமிட்டு இந்தப்பிர தேசங்களை ஆக்கிரமிப்பு செய்து தனது இராணுவ பலத்தை பெருக்கிட நினைத்தது சிங்கள அரசு.

இவை அனைத்துக்கும் முற்றுப் புள்ளி வைக்கும் முகமரகவே தலைவர் அவர்கள் கிளிநொச்சி தாக்குதலில் கவனம் செலுத்தினார் என்பது உண்மை. ஓயாதஅலைகள் -02 சண்டையை செய்வதற்காக தலை வரும், தளபதிகளும், பொறுப்பாளர், போராளிகளும் மிக,மிக கஷ்டங்களைஅனுபவித்தனர்.

இந்த நடவடிக்கைக் கென்று வேவு அணிகள் உள்சென்று அனுபவித்த துன்பங்கள் ஏராளம். இதற்கான வேவு நடவடிக்கையின் போதும் அதன்பின்பும் உள்வெளி வேவுக்கென வந்த போராளிகள் பட்ட துன்பம் ஏராளம்.

எதிரியின் கோட்டைக்குள்ளேயே சென்று அவன் இராணுவ பாதைகளை பார்த்தவாறு படுத் திருந்ததும் எதிரி தன்னை அடையாளம் கண்டு தேடி திரிந்த போது ஓடி, ஓடி களைத்து உடைகள் கிழிந்து பத்து நாட்கள் உணவில்லாமல் பனம்பழம் சூப்பி கிளிநொச்சியிலிருந்து



# எதிரியின் கனவுகளை சிதைத்த தாக்குதல்



வெற்றிலைக்கேணி வரை சென்று கடலால் தப்பி வந்ததும் ஒரு வரலாறே ஆகும். வேவு அணியின் நகர்வை கண்டு எதிரி தாக்கிய போது அவன் அருகே இருந்த பற்றையில் படுத்திருந்து விட்டு பின் உள்ளே சென்று வந்த புலி வீரனும் உண்டு. என்னதான் எதிரி இரும்பாலல்ல காப்பிட்டிருந்தாலும் புலிகளால் அந்தக் கோட்டைகளுக்குள் துவாரமிட்டு செல்ல முடியும் என்பது செயலில் நிருபிக்கப்பட்டது.

கிளிநொச்சியும் அதனைச் சுற்றியுள்ள இராணுவ முகாம்களும் பல மாதங்களாக வேவு பார்க்கப்பட்டது. அந்த வேவு நடவடிக்கையின் போது எத்தனையோ ஒப்பற்ற தியாகிகள் இந்த மண்ணை முத்தமிட்டுள்ளார்கள். இயக்க மரபுக்கு ஏற்ப பல சாதனைகளையும் தியாகங்களையும் செய்தே வீரகாவியமானார்கள். அவர்களின் தியாகத்தின் சாட்சியாக நிச்சயமாக கிளிநொச்சி மீட்கப் படும் என்ற நம்பிக்கையுடனே ஓயாத அலைகள்-02களம் இறக்கினர்புலிகள்.

எதிரி வன்னிமண்ணை ஆக்கிரமிக்கவென தொடர்ந்த போரில் ஜெயசிக் குறுக்காய் எதிர்ச்சமர் நடத்த அனைத்து தாக்குதல் படையணிகளும் தொடர்ந்து களத்திலேயே நின்றனர். எதிரி புலிகளை அழித்து விடலாம் என கற்பனை செய்யும் போதே அவன் கோட்டையில் நாம் நுழைய வேண்டும் என்ற தலைவரின் எண்ணத்தை செயல் வடிவமாக்கி ஜெயசிக்குறு எதிர்ப்படை நடவடிக்கையிலிருந்து விலகி 1997ஆம் ஆண்டு 12ஆம் மாதம் கிளிநொச்சி நோக்கி புறப்பட்டோம். கிளிநொச்சியின் முன்னரங்கு நிலைகளிற்கு செல்லவென நாம் இறங்கிய இரணைமடுச்சந்தி எமக்கு ஒரு வித்தியாசமான அனுபவத்தையே தந்தது. எங்குமே ஒரே பற்றைகளும் இடிந்த கட்டடங்களும் நிறைந்த பிரதேசத்தில் இறங்கினோம்.

முன்னணி நோக்கிய எமது பயணம் தொடர்ந்தபோது எதிரியின் நாசகாரப் படைகளைப்பற்றி எண்ணம் மேலிட்டது. இவர்களை கொன்றொழிக்காவிட்டால் நாம் சந்தோஷமாகவாழமுடியாது என்று தீர்மானித்தவர்களாய் அன்பரசி படையணி நிலை கொண்டிருந்த காவலரண்களை நோக்கி நகர்ந்தோம். அன்பரசி படையணியை காவலரணிலிருந்து மாற்றிவிட்டு முன்னரங்கு நிலைகளை நாம் பொறுப்பேற்றபோது இன்னும் சில நாட்கள் எதிரியின் முகாமை முற்றுகையிட பயிற்சிகளை ஆரம்பித்து செவ்வனேசெய்து முடித்தோம். அனைத்துப் படையணிகளும் சண்டைக்கென தயாராகிவிட்டன. 1998 ஆம் ஆண்டு 02ஆம் மாதம் 04ஆம் திகதி சிங்கள தேசம் தனது சுதந்திர தினபொன் விழாவை கொண்டாட தீர்மானித்திருந்தது. இதற்கென கொழும்பிலும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. 1948ஆம் ஆண்டு இலங்கை தேசத்திற்கான சுதந்திரத்தை பிரித்தானியாவிடமிருந்து பெற்ற சிங்களம் தமிழ் மக்களுக்கான சுதந்திரத்தை பறித்து கொண்டதன் விளைவாக எழுந்த இனமுறுகல் நாளுக்கு நாள் விசுவரூபமெடுத்து இறுதியில் தமிழ்மக்களின் விடுதலைப் போராக மாறியிருந்த அதே காலகட்டத்தில் சுதந்திரதினபொன் விழா நடத்த தீர்மானித்தது சிங்களம். இந்த விழாவுக்கு தமிழர்களின் உரிமையை சிறிதும் கவனத்தில் கொள்ளாது சென்ற பிரித்தானிய பிரதிநிதி இளவரசர் சாள்சும் வரத் தீர்மானித்திருந்தார்.

இது போன்ற அனைத்து விடயங்களையும் கவனத்தில் கொண்டு தாக்குதல் தலைவரால் திட்டமிடப்பட்டது. 1998ஆம் ஆண்டு 02 ஆம் மாதம் 01ஆம் திகதி இரவு புலிகளின் அனைத்துப் படையணிகளும் நகர்ந்து கொண்டிருந்தனர். இருள் சூழ்ந்த அந்த இரவில் முரசுமோட்டை, ஊரியான் கிளிநொச்சிகுளம், டிப்போசந்தி, மீனாட்சி அம்மன் கோவிலடி உருத்திரபுரம், சுட்டதீவு என எல்லாப்பக்கங்களிலும் அணிகள் நடந்து இலக்கை நெருங்கி விட்டன. தாக்குதலுக்கான பிரதான கட்டளை தளபதியின் கட்டளைக்காக காத்திருந்தனர். எதிரி என்ன நடக்குமென்பதே அறியாதவனாய் காவலரண்களில் குசு குசுத்துக் கொண்டிருந்தனர். சிலர் இடைஇடையே தங்களை சுதாகரித்துக் கொள்ள "அடமச்சான் கொட்டி ஆவத" என்று இன்னும் விளங்காத ஏதோ பேசிக் கொண்டிருந்தான் சிங்கள, எதிரிக்கு எந்நேரமும் எங்கள் நினைவுதான் என்ற பெருமிதத்தில் நாம் அவனது முதலாவது தடையோடு ஒட்டிபடுத்திருக்க தளபதியின் சமிக்ஞை தொலைத்தொடர்பில் ஒலித்தது கிளிநொச்சியின்மயான அமைதி . ஒரு விநாடியில் கலைக்கப்பட்டது. எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் சண்டை ஆரம்பமானது. வேட்டோசைகளும் எறிகணை வெடிப்புக்களும் குண்டுச்சத்தங்களும் வானைப் பிளந்தன. சண்டை உக்கிரமாக தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தது. ரவைகளினதும் எறிகணைகளினதும் பரிமாறலுடனேயே காலை விடிந்தது. .

எமது அணிகள் சென்று உடைத்த பாதைகளை கிளிநொச்சி டிப்போச்சந்தி பாதையும் சேவியர் கடை சந்திப்பாதையும் முற்று முழுதாக பிடிக்கப்பட்டிருந்தது. இதன் போது மறுநாள் மாலையளவில் கிளிநொச்சியின் டிப்போச்சந்தி உட்பட குறிப்பிட்டளவு பிரதேசம் புலிகள் வசம இருந்தது. இந்தத் தாக்குதலின் சாதக பாதக நிலையைவைத்தே ஓயாத அலைகள்-02 திட்டமிடப்பட்டது. அதன் திட்டத்திற்கேற்ப மட்டக்களப்பு அம்பாறையின் பெரியதொரு படையணியையும் நேரடியாக களமிறங்கியது.

தாக்குதலின் பிரதான திட்டமான உள்நுழைந்து தாக்கும் விசேட அணிகளுக்கு தளபதி.கேணல் பால்ராஜ் கட்டளையதிகாரியாக சென்றார். இதைவிட மாலதி படையணிக்கு அதன் தளபதி கேணல் விதுஷாவும் சோதியா படையணிக்கு தளபதி கேணல் துர்க்காவும் சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணிக்கு தளபதி லெப் கேணல் சேகர் தலைமை தாங்கினார்கள். தளபதி அறிவு தலைமையில் புலனாய்வு படையணியும் களமிறங்கியது இந்தப் படையணிகளைவிட விசேடமாக கேணல் பானு தலைமையிலான கிட்டு ஏவுகருவி படையணியும் கேணல் ராஜி தலைமையிலான ஆட்லறி ஏவுகருவி படையணியும் கேணல் ஜெயம் தலைமையிலான இம்ரான் பாண்டியன் தாக்குதல் கனரக படையணியும் முதலில் களமிறங்கியது. இவற்றுக்கு உதவியாக கண்ணிவெடிப்பிரிவு சந்தோஷம் படையணி சிறுத்தைப் படையணிகள் வாகனப் பிரிவும் களமருத்துவம் என களம் இறங்கிய போது சண்டை மிகவும் உக்கிரமடைந்திருந்தது.

சண்டையின் மிகவும் முக்கியம் வாய்ந்த பகுதியான கிளிநகரப்பகுதிக்கான தாக்குதலை தளபதி கேணல் தீபன் ஓய்வின்றி வழி நடத்திக்கொண்டிருந்தார். நீண்ட கால எதிரியின் திட்டத்தால் அமைக்கப்பெற்ற 30மீற்றருக்கு ஒரு காவலரணும் சுவரை போன்று மண்ணால் கட்டப்பட்டிருந்த அணையும் நாம் உள்நுழைய மிகவும் கடினமாக இருந்தது. சில நேரங்களில் அந்த மண் அணையை உடைப்பதற்கு பல மணித்தியாலங்கள் சென்றன. என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மிக நீண்ட நேரமாய் பல துன்பங்களை அனுபவித்து வியர்வையை சிந்தி இரத்தத்தை பாய்ச்சி உயிரைக் கொடுத்து சுமார் 6-8 மணித்தியாலங்களின் பின்னே உள் நுழைய முடிந்தது. இது முன்னரண்களில் இடம்பெற்றது. ஆனால் பரந்தனுக்கும் கரடிப்போக்கிற்கும் இடையில் ஊடறுத்த அணிகள் உக்கிரமான வேகமான தாக்குதலை தொடுத்து உள்நுழைந்து விட்டனர். அவர்கள் கிளிநொச்சி படைத்தள எதிரியை ஊடறுத்து இரண்டு கூறாக்கி வைத்ததனால் மறுநாள் சண்டையின் கடுமை ஓரளவு ஏனைய பக்கங்களில்குறைந்திருந்தாலும்.

கிளிநொச்சி நகரை அண்டிய பிரதேசத்தில் மிகவும் மோசமாகவே இருந்தது. தடை உடைத்து முற்று முழுதாக உள்நுழைய 18 மணித்தியாலங்கள் எமக்கு தேவைப்பட்டது. சில இடங்களில் தொடர்ச்சியான எமது தாக்குதலிலும் எதிரி பெரியளவில் அமைக்கப்பட்டிருந்த பதுங்கு அகழியிலிருந்து சண்டை செய்து கொண்டே இருந்தான். 27ஆம் திகதி மாலை அளவில் எதிரியின் தாக்குதல் கடுமையாக இருந்தது. அதைவிட எறிகணைகளும் விமானக் குண்டு வீச்சுக்களும் ஓயாது தொடர்ந்து கொண்டே இருக்க கிளிநொச்சி படைமுகாம் தகர்ப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போராளிகள் அனைவரும் ஒரு உறுதியான நிலைப்பாட்டை எடுத்திருந்தனர். இன்று எப்படியாவது இதைக் கைப்பற்றுவது என உறுதி பூண்டனர்.தளபதிகள் கடுமையான கட்டளைகளை வழங்கினர். இன்று எப்படியும் கிளிநொச்சியை பிடிக்க வேண்டுமென்று எனவே காயம், வீரச்சாவு, பசி தாகம் களைப்பு நித்திரையின்மை எல்லாவற்றையும் மறந்து எல்லோரும் உக்கிரமாக சண்டையை செய்த போது எதிரி நிலை குலைந்தான். ஊடறுப்பு அணிகளைத் தவிர ஏனைய அணிகள் கட்டம் கட்டமாக உள்நுழைய ஆரம்பித்தனர். 07ஆம் வாய்க்கால் ஊடாக முன்னேறிய அணி கரடிப்போக்கை நோக்கி கடுமையான தாக்குதல்களுடன் சண்டை செய்து செய்து சிறிது சிறிதாக பிடித்துச் சென்றனர். தற்போது காவல்துறை நடுவப்பணியகம் அமைந்துள்ள இடம் வரை பிடிக்க மிகவும் கடினமான எதிர்ப்பை சமாளிக்கவும் வேண்டியதாயிற்று முழு இராணுவமும் கூடி நின்று பாரிய தாக்குதலை தொடுத்ததானால் ஒரு இக்கட்டான நிலையை தோற்று வித்தது. ஆனால் எல்லோரும் எதிர்த்து எதிரியை ஒருமித்து தாங்கியதால் எதிரிநிலை குலைந்தான். இதேவேளை கிளிநொச்சி இராணுவ முகாம் பொறுப்பதிகாரியாக இருந்த பிரிகேடியர் உப்பாலி கெட்டியராச்சி எமது ஊடுருவிய அணிகள் உள்ள பரந்தன் பக்கமாக மிக மோசமான எதிர்த்தாக்குதலை தனது எல்லா இராணுவ வளங்களையும் பயன்படுத்தி மேற்கொண்டார். இந்தத்தாக்குதலுக்காக ஜெயந்தன் படையணி போராளிகளும் சோதியா மாலதி படையணி போராளிகளும் வீராவேசத்துடன் போரிட்டு எதிர்ச்சமராடி எதிரியை கொன்று குவித்தனர்.

தப்பி போவதற்கு ஓர் இடமில்லாமல் கூட்டம் கூட்டமாக எதிரி பரந்தனை நோக்கி பின்வாங்கினான். இடைமறிப்புச்சமரில் ஈடுபட்ட போராளிகள் சிலரிடம் ரவைகள் தீர்ந்திருந்தது. எனவே பெண் போராளிகளும் தங்களது துப்பாக்கி அடியினால் எதிரியை தாக்கினர். துப்பாக்கியில் பொருத்தப்பட்டுள்ள கத்தியால் குத்தி எதிரியை துவம்சம் செய்தனர். சிங்கள ஆக்கிரமிப்பாளரினால் ஆக்கிரமிக்கப்பட்ட கிளிநொச்சி பல்லாயிரக்கணக்கான எம் மக்களின் இடப்பெயர்விற்கும் அவர்களின் பொருண்மிய சிதை விற்கும் சொத்தழிவுக்கும் காரணமாய் இருந்தது. எத்தனையோ உயிர்கள் பலியாவதற்கும் இந்தக் கொடியவரே காரணமாயிருந்தனர். எங்கள் மக்களிற்கும் எங்கள் மண்ணிற்கும் அவமானத்தை தந்தவர்களுக்கே பேரவலம் நடந்தேறியது. பரந்தன் தொடக்கம் கிளி நகரம்வரை கிடந்த அவர்களின் பிணங்கள் எங்கள் மக்களிற்கும் எம் தாயக மண்ணிற்கும் செய்த கொடுமையை எதிரி ஒப்புக் கொள்வதாய் இருந்தது.

"அவலத்தைதந்தவனுக்கே அவலத்தைத் திருப்பிக்கொடு" என்றார் எங்கள் தலைவர். எங்கள் தாய் நிலம் பிடிக்க வந்து எம் இனத்திற்கும் எம்தாய் நாட்டிற்கும் அவலத்தைத்தந்தவர்க்கு வெறும் இராணுவ அழிவாக சொத்தழிவாக அவலத்தைத் தந்திருக்கிறோம். இதைவிட எதிரி எங்கள் மக்களிற்கு செய்த அவலத்தை விட அவனே அவனுக்கு செய்து கொண்டது பெரும் அவலமாகியது. காயமடைந்திருந்த தனது சகாக்களை கைவிட்டுச் சென்றதும் இறந்த உடல்களை கைவிட்டு சென்றதாகும். ஓயாத அலைகள்-02இல் வெற்றி பெற்றது எங்கள் தேசத்திற்கு சந்தோஷமான நாளாகும். ஆக்கிரமிப்பு எங்குமே வெற்றி பெற்றதாய் வரலாறு இல்லை அதைவிட உண்மையான எங்கள் தியாகமும் அர்ப்பணிப்பும் சத்தியமும் உண்மையும் என்றும் அழிந்து போனதாய் வரலாறு இல்லை. எனவே மாவீரர் பெயர் சொல்லி எமது அடுத்தகட்ட நகர்வை ஆரம்பிக்க பரந்தன் எதிரிப்படை முகாம் நோக்கி காலடி எடுத்து வைத்து எமது துப்பாக்கியால் குறி பார்கலானோம். கிளிநொச்சி மீட்பு சமருக்காய் நகரத்தொடங்கிய நேரம் நடந்த ஒரு சம்பவத்தையும் இதனுடன் எழுத வேண்டிய அவசியமாகிறது. எமது பயிற்சி முடிந்து கடைசியாக திட்டங்கள் விளங்கப்படுத்தப்பட்டு முதல் நகர்வை ஆரம்பித்து விட்டபோது திருவையாற்றில் உள்ள மைதானத்தில் தளபதி தீபன் அவர்களின் கருத்தோடு அணிகள் நகரத் தொடங்கின. கடுமையான பொருளாதார நெருக்கடிகாரணமாக பொருட்களுக்கு தட்டுபாடு இருந்தது. எனவே நாலும் மாவீரன் மேஜர் பிரியக்கோனும் கடைசியாக எம்மிடமிருந்த விக்ஸ் டொபியை அணிவகுத்து வரிசையாக ஒன்று கூடியிருந்த போராளிகளுக்கு கொடுத்து கொண்டிருந்தோம்.

ஒருவருக்கு ஒன்று ஒன்று கொடுக்கவே அது போதுமானதாக இருந்தது. சில போராளிகள் மேஜர் பிரியக்கோனிடம் டொக்ரர் இன்னும் ஒன்று எனும் கெஞ்சியதனால் அவன் கொடுத்து விட்டதனால் எதுவுமே மிஞ்சவில்லை. நான் பிரியக்கோனின் முகத்தை பார்க்க அவனிடம் நிறைய டொபி இருக்கும் தானே கடைசியாக எடுத்து சாப்பிடலாம் தானே என்று சொல்லி விட்டு நகர்ந்தான். அதனால் சண்டை முடிந்து வெற்றி பெற்ற போது எவ்வளவோ இனிப்புகள் கிடந்தும் அதில் ஒன்றேயேனும் சாப்பிட அவன் உயிரோடு இருக்க வில்லை மாறாக 24மணித்தியால கடுமையான சண்டையின் போது குடிக்க நீர் கூட இல்லாமலேயே சண்டை செய்து வீரச்சாவு அடைந்திருந்தான்.





சிறுகதை

# ஒட்டாத கடிதம்



மதன் அந்த தென்னைமரத்தில் அப்படி என்ன பார்க்கிறான். வைத்த கண் வாங்காமல் என்று எண்ணியவாறு அவனருகில் சென்றேன். அவன் நான் வந்ததையே உணராத வனாய் அண்ணார்ந்து பார்த்தபடியே இருந்தான். நானும் அண்ணார்ந்து பார்த்தபோது தூக்கனான் குருவி ஒன்று நீண்ட வால் போல் ஒரு நானல் புல்லை தனது சிறிய வாயால் கௌவியபடி பறந்து வந்துகொண்டிருந்தது. பட்டம் ஒன்று கயிறறுந்து பறப்பதுபோல் தெரிந்தது. தென்னை மட்டையின் ஒரு ஓலையில் முழுவதுமாய் கட்டி முடிக்கப்படாத கூட்டில் வந்தமர்ந்தபோது அவ்வோலை அங்குமிங்குமாக ஆடியது. குருவி அவ்வசைவால் நிலை கொள்ள முடியாமல் மீண்டும் ஒருமுறை பறந்து மீண்டும் அமர்ந்துகொள்ள முயற்சித்த போது அந்த நானல்புல் தவறிவிழுந்தது.

சற்றும் எதிர்பாராத எனக்கு மிகவும் ஏமாற்றமாக இருந்தது. அந்த சிறுகுருவி தோல்வி என்று நினைத்ததாகவோ களைத்ததாகவோ என்னால் உணரமுடியவில்லை. மீண்டும் குருவி எங்கோ பறந்துசெல்ல நான் மதனின் தோளில் தட்டிய போது அவன் உயிர்பெற்றவனாய்த் திரும்பினான். கண்கள் கசிந்திருந்தன.ஏன் கண்கலங்கியுள்ளது என்றபோது ஒன்... என்று இழுத்தபடி ஒன்றுமில்லை என்று கூறியபடியே சற்று தூரத்தில் கிடந்த நான்கு நானல் புற்களை எடுத்து வந்து குருவி என்றபோது அதை நான் புரிந்து கொண்டு நானும் அதை பார்த்துக்கொண்டுதான் இருந்தேன் என்றேன். அவன் அவசரமாய் கைக்கடிகாரத்தை பார்த்தான். அது காலை 7.10 என்று காட்டிற்று அவன் என்னுடன் எதுவும் பேசவில்லை. வேகமாகச்சென்று முகம் கழுவி ரீசேட் ஒன்றை போட்டபடி வருகிறேன் என்றான். தலையசைத்தேன். எங்கோ சென்றுவிட்டான். நானும் எனது கடமைகளுக்கு சென்றுவிட்டேன். இரவு ஒன்பதுமணிக்கு நான் வந்து பார்த்தபோது மதன் முன்கோலில் படுத்திருந்தான். விளக்கு மங்கலாய் எரிந்துகொண்டிருந்தது. மதன் ஆழ்ந்து உறங்கவில்லை. எதையோ ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருந்தான். நான் அவனுடன் கதைக்கவில்லை. நான் எனதறையில் போய் படுத்துறங்கிவிட்டேன். காலையில் எழுந்தபோது மதன் அதே தென்னமரத்தடியில் மரத்தையே பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். நானும் அம்மரத்தடிக்குச் சென்றேன். மதனின் முகத்தில் சந்தோசம் பிரகாசித்தது. குருவி கூடுகட்டி முடித்துவிட்டது என்றவன் சிதறிக்கிடந்த நானற்புற்களை பொறுக்கி கட்டாக எடுத்தான். ஒரு கூடு கட்டுவதற்கு எவ்வளவு நானற்புற்கள் தேவையோ அதே அளவு புற்கள் தவறி விழுந்திருக்கின்றது. தவறவிடாமல் கட்டியிருந்தால் இரண்டு கூடுகள் கட்டியிருக்கும் என்றான்.

இயற்கையின் சிரிஸ்டிப்பில் தவறுவிடாமல் எதுவும் செய்யமுடியாதோ என்றான். முயற்சி செய்யவேண்டும் என்றேன்.. ஒரு சிறு குருவி தனக்கு ஒரு கூடுகட்ட எடுத்த முயற்சி முற்றிலும் வெற்றியில் முடிந்திருக்கிறதென்றால் அது தவறிவிழுந்த புற்கள் சம்பந்தமாக கவலைப் படாததால் தான். அது தவறி விழுந்த புற்கள் சம்பந்தமாக ஆய்வு செய்திருந்தால் அதில் சில நாட்கள் வீணாகியிருக்கும். இழப்புகளிற்காக வருந்தி நாட்களை நகர்த்தாமல் தொடர்ந்து முயற்சிசெய்ததால்தான் வெற்றி என்பதை நாம் இச்சிறுகுருவியின் செயலின் ஊடாக கற்றுக் கொள்ளவேண்டியுள்ளது. என்றான்.

உனது கருத்து எனக்கு விளங்கவில்லை என்றேன். இழப்புகள் ஆய்வுசெய்வதற்குமட்டுமல்ல என்றான். பாடங்களாகவும் எடு துக்கொள்ளலாம் படி ளாகவும் அமைத்துக் கொள்ளலாம் என்றேன்.

இழப்புகளை சகித்துக்கொண்டு முன்னேற வேண்டும். முடிவில் வெற்றிபெறலாம் என்பதுதான் எனது நிலைப்பாடு என்றான். எப்படி இழப்பு நிகழ்ந்தது எப்படித்தடுக்கலாம் என்பது பாடம். தொடர்ந்து முன்னேறுவது படி என்றேன். இலக்கை அடையும்வரை படிகளை மட்டுமே அமைக்கவேண்டும். பாடங்களில் எனக்கு உடன்பாடில்லை என்றான். ஒரேகருத்தைத்தான் நாம் இரண்டுபேரும் இரண்டுவிதமாக பார்க்கின்றோம் என்றேன். இல்லை நீங்கள் பிழையாகப்பார்க்கிறீர்கள். அந்தக்குருவி பத்துத்தரம் புற்களை எடுத்து வந்தபோது நான்கு புற்கள் தவறி விழுந்தன. ஆனால் அந்தக்குருவி ஒரு மணித்துளிகூட அந்த இழப்புக்களிற்காக சிந்திக்கவில்லை. அதனுடைய இலக்கை மட்டுமே சிந்தித்தது. அதனால் இன்று ஒரு சுதந்திரமான சொந்தக் கூட்டில் வாழ்கின்றது. அது புல் விழுந்ததற்கான காரணம் தடுப்பதற்கான வழிமுறை என்பனவற்றை தேடியிருந்தால்... என்று முடிக்காமலே என்னைப்பார்த்தான். விடைகூறுவது கடினமாக இருந்தாலும் விடை கூறியே ஆக வேண்டும். இதற்காக சில உதாரணங்களை கூறினேன். சூரியக்கதிர்கள் எல்லாம் பாடம், ஓயாதஅலைகள் எல்லாம் படிகள் என்றேன். அவன் பதில் கூறவில்லை.

ஆனால் திருப்தியடையவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. அவன் கைக்கடிகாரத்தை பார்த்தான் நேரம் 6.50 ஏதோ மீண்டும் புத்துயிர் பெற்றவனாய் மரத்தில் தொங்கிக்கொண்டிருந்த குருவிக்கூட்டை, பார்த்தான். நான் நேற்று நினைத்தேன் நீண்ட நாள் செல்லும் இந்தக் கூடு கட்டிமுடிய என்று. இன்று காலையில் பார்த்தபோது எனக்கு நம்பமுடியாமல் போய் விட்டது. என்றவன் வெளிவராத சொற்களாய் ஏதோ முணுமுணுத்துக் கொண்டான். விளங்கவில்லை என்றேன். நான் இன்றைக்கு புறப்படுகின்றேன் என்றான். ஊருக்கோ என்றேன். சிரித்துவிட்டு கைக்கடிகாரத்தைப் பார்த்தான். அதேவேகம் கோளிற்குள் சென்றவன் ஏதோ எழுதினான் நான் முகம் கழுவிவிட்டு வந்தபோது கோவிக்காமல் வெளியில் போனால், இக்கடிதத்தை பெட்டியில் போட்டுவிடுங்கள் என்றான். ஓம்..ஓம்.. என்றேன். போட்டு வாறன் என்றான் ஓம்... ஓம்... என்றேன். நான் வெளியில் போக வந்தபோது ஒட்டிய கடிதம் இரண்டும் ஒட்டாத கடிதம் ஒன்றும் இருந்தது. ஒட்டாத கடிதத்தைப்பார்த்தேன். (அன்புடன் அண்ணா நான் மன்னாரில் இருந்து படிப்பதற்காக யாழ்ப்பாணம் வந்தேன். சூரியக்கதிர் இடப்பெயர்வில் வந்து எங்கள் வீட்டிற்குப் பக்கத்தில் உங்கள் சகோதரி மாலா அன்ரி குடும்பம் வசித்தது. அந்தப் பழக்கத்தில் இவ்வீட்டில் தங்கிப் படித்தேன் அவர்கள் திருமண வீடொன்றிற்காக இந்தியா போக நீங்கள் வீட்டுக்காவலுக்காக வன்னியில் இருந்து வந்தீர்கள். உங்களோடு பழகிய சில நாட்களை மறக்கமுடியாது. நான் காலையில் உங்களோடு ஏதாவது பிழையாக கதைத்திருந்தால் மன்னித்துக்கொள்ளவும்) யாரும் துன்பப்படுவதை பொறுத்துக்கொள்ள என்னால் முடியாது ஆனால் பொறுத்துக்கொள்ள முடியாத சில மட்டும் எல்லாத்துன்பங்களையும் துடைத்துவிட முடியாது. குருவியைப்போல் எல்லோரும் முயற்சி செய்தால் சொந்த நிலத்தில் சுதந்திரக்கூடு அமைக்கமுடியும். மணித்துளிகளில் வரலாறுகள் பதிவுசெய்யக்கூடிய சம்பவங்கள் நிகழும். நன்றி, இவ்வண்ணம், தம்பி மதன் ஏனைய இரண்டு கடிதங்களுடன் மின்னலாகச்சென்றேன். தபால் பெட்டியில் இடுவதற்கு முன் மேலுறையைப் பார்த்தேன். ஒன்று மட்டக்களப்பிற்கும் மற்றையது திருகோணமலைக்கும் போய்ச் சேரவேண்டியது என்று தெரிந்தது. பெட்டியில் போட்டுவிட்டு திரும்பியபோது கூட்டம் கூட்டமாக குருவிகள் நானற்புல்லுகளுடன் போவது போல் உணர்ந்தேன். வீட்டுக்கு வந்தபோது தென்னை மரத்தில் பல கூடுகள் கட்டப்பட்டுக்கொண்டிருந்தன. மதனின் கடிதத்தையும் குருவிகள் கட்டிக்கொண்டிருக்கும் கூட்டையும் மாறிமாறி பார்க்கிறேன். எதுவும் எனக்குபுரியவில்லை புரியும்வரை காத்திருக்கப்போவதும் இல்லை நானும்... நானும்... என்றபோது போட்டுவரட்டே... போட்டுவரட்டே... என்று மதனின் குரல் எனது காதருகே ஒலிப்பது போலிருந்தது. அத்தோடு தூரத்தில் ஒரு பெரும் வெடியதிர்வு கேட்பது போலவும் இருந்தது....

க. மணி




## யாருக்காகவோ எழுதிய கவிதை

என்றோ உதித்த சூரியனின்
மங்காத இளங்காலை
மஞ்சள் வெயில்
என்னில் படிகிறது.
ஒரு வண்ணத்துப்பூச்சியின்
வர்ணங்கள் திருடி
மஞ்சள் வெயில் காதலிக்க வரும்
காற்றின் நிழலில்
உன் ஞாபகத்தின் வாசங்கள்
உயிர்க்கின்றன.

நானறியாமலே என் கனவுகளிடம்
கடன் வாங்குகின்றன இரண்டு சிறகுகள்.
சிறகுகளில் உட்கார்ந்து
தொடுவானம்வரை நீந்திப்போய்
சிறகடித்துச்சிரித்தபடி
சாய்ந்து உட்கார்ந்து கொள்கின்றன.
அன்றுதித்த சூரியனின்
வருடங்கள் சுருங்கிச்சிறுவனாகி
சப்திக்கும் கொலுசு தொட
(கூடவே கனவுகள் கொடுத்த
சிறகுகளையும் மீட்க)
முடிவுற்று நடக்கத்தொடங்க
நொடியில் சூரியனுள்புகுந்து
ஞாபகங்கள் மறதியாகின்றன.

நினைவுப் பரணில்
தூசி படர்ந்திருக்கும்
பால்யங்களை மீட்க எத்தனிக்கையில
வருடமொரு அடி
தள்ளி வைக்கிறது தும்மல்.
தும்மல்...
பால்யங்களில் படர்ந்த தூசியா
எது தந்ததிந்தத் தும்மல்?
ஞாபகமும் மறதியுமாகி
என்னுள் தரும் அவஸ்தை போக்க
ஒரு துளி மை தந்தன
கவிதை வரிகளினுள் புதைத்து
தொலைத்து விடு என்று.
புதைக்கும் வெறியில்
முடிவற்ற நீண்ட கவிதையொன்று
காற்றில் எழுதி நிமிர
இடைவெளிகளினூடே பல்கிப் பலவாகும்
ஞாபகத்தின் குஞ்சுகள்
மேனியெங்கும் ஊர்ந்து
தழுவிக் கொள்கின்றன உன்னைப் போலவே.


பால்யங்கள் மீட்க முடியா
இயலாமையும்
கவிதைக்குள் புதைக்க முடியா
உன் ஞாபகத் தழுவலின் தவிப்பும்
தும்மலும் தீருமுன்
ஞாபகத்தின் வாசங்கள் பரிசளித்த
ஒரு துளி மை தீர்ந்து போயின்
என் செய்ய?
தவிரவும்.
என் கனவெழுதிச் செல்லும் உன் காலடிகளும்
உருவமற்றிருக்கும் வேடிக்கையை
யாருடன் பகிர்ந்து சிரிப்பது?
காற்றுப் போல...சப்தம் போல
தழுவிப் பிரிகையிலேனும்
உனக்கென்றோர் பெயரேனுமுண்டா...

**யோ.கர்ணன்.**

## இலக்கியப் பகிர்வு

# தேவன் - யாழ்ப்பாணம்

## — சிறுகதைகள்



ஈழத்தின் மூத்த படைப்பாளிகளில் தேவன்- யாழ்ப்பாணம் அவர்கள் முதன்மையானவர். தான் வாழ்ந்த காலத்தில் "தேவன்" என்றால் சகலரையும் தலை நிமிர்ந்து பார்க்க வைத்த பெருமைக்குரிய அவர் மறைந்த பின்னரும்கூட தன் தனித் தன்மையை இழக்காதவர்.

தேவன் அவர்களின் ஆற்றல் பன்முகத்தன்மை கொண்டதை சகலரும் அறிவர். அவர் ஒரு நாவலாசிரியர், சிறுகதையாளர், கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர், நாடக ஆசிரியர், இயக்குநர், மேடைப் பேச்சாளர், அதிலும் பேச்சுக்களை மொழிபெயர்ப்பதில் வல்லவர், எல்லாவற்றையும்விட சிறந்த வர்ணனையாளர், நிகழ்ச்சியினை ஒழுங்கமைப்பதில்-தயாரிப்பதில் வல்லவர். இத்தனைக்கும் அவர் ஒரு விஞ்ஞானத் துறை ஆசிரியராக சாதனை படைத்தவர்.

"வாடிய மலர்கள்,கேட்டதும் நடந்ததும்" என்பன அவருடைய நாவல்கள். அவன் சுற்றவாளி என்பது அவர் எழுதிய குறுநாவல். "மணி பல்லவம்" என்பது அவரால் மொழியாக்கம் செய்யப்பட்டது. "தென்னவன் பிரமராஜன்" என்பது அவருக்கு புகழ் சேர்த்துத் தந்த நாடகப் பிரதி நூலாக வெளிவந்து பரிசும் பெற்றது. "புட்ட பர்த்தியில் நான்" என்பது அவரது ஆத்மீக ஈடுபாட்டை வெளிப் படுத்திய நூல், கற்புக்கனல், நளதமயந்தி, விதி, பத்தினியா பாவையா? கூடப்பிறந்த குற்றம், வீரபத்தினி, இருசகோதரர்கள் என்பன போன்ற பல நாடகங்கள் தேவன் அவர்களால் எழுதப்பட்டு மேடையேற்றப்பட்டு பலரதும் பாராட்டுகளைப் பெற்ற நாடகங்கள் ஆகும்.

இத்துணை சிறப்புமிக்க தேவன் சிறுகதைகளும் எழுதியுள்ளார். ஏனைய அவரது படைப்பிலக்கியங்கள்போல சிறுகதைகள் இதுவரை நூலாகவில்லை. இப்போதுதான் யாழ் இலக்கிய வட்டத்தின் முயற்சியினால் தேவனின் எட்டுச் சிறுகதைகள் தொகுக்கப்பட்டு தேவன் சிறுகதைகள் என்ற நூலாக வெளிவந்துள்ளது.

யாழ் இலக்கிய வட்டம் இந்த நூலை வெளியிட்டாலும் இந்த நூல் வெளிவர பிரதான காரணகர்த்தாவாக இருந்தவர் ஆறுதிருமுகன் அவர்கள் ஆகும்.

சமயப் பணிகளில் ஈடுபாடு கொண்ட ஆறு திருமுருகன் சமூகப் பணிகளில் அதிகம் அக்கறைகொண்டு செயற்பட்டுவருவதால் பலருக்கும் முன் மாதிரியாக உள்ளவர்.

அதற்கு மேலதிகமாக தேவன் யாழ்ப்பாணம் அவர்களின் நூலாக்கப் பணியில் அவர் இறங்கியிருப்பது மற்றுமொரு விசேட அம்சமாகக் கொள்ளக்கூடியது.

"என்னை உருவாக்கிய ஆசிரியப் பெருந்தகைகளில் முதன்மையானவராகக் கருதும் அமரர் இ.மகாதேவா (தேவன் யாழ்ப்பாணம்) அவர்களை நீள நினைந்து வணங்குகிறேன். அறிஞர்கள் கூடும்சபையில் என்னைச் சரியாசனமிருக்க வைத்த சான்றோன் இவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இயற்துறைசார் நிகழ்ச்சிகளில் என்னை நெறிப்படுத்தி வாழவைத்த தெய்வம். ஆசிரிய மாணவன் உறவு மட்டுமன்றி அவர்களது குடும்பமே எமது குடும்பத்துடன் நெருங்கிய தொடர்புடன் இன்றுவரை இருப்பது குறிப்பிடத்தக்கது."

என ஆறு திருமுருகன் அவர்கள் குறிப்பிடுவதில் இருந்து தேவன் அவர்களின் மற்றொரு முகமும் தெரிகின்றது. பல பெரிய மனிதர்களுக்கு இருக்கும் பழக்கம் அதாவது தங்கள் கீழ் உள்ளவர்களை வளர்த்து விடாத தன்மை. எப்படியும் மட்டம் தட்டி கருக்கி மழுங்கடித்து விடுவார்கள். ஆனால் தேவன் அவ்வாறு இல்லை என்பதை ஆறுதிருமுருகன் அவர்கள் அறுதி இட்டுக்கூறுகின்றார்.

27.09.1924ஆம் ஆண்டு பிறந்த இளையப்பா மகாதேவா என்ற தேவன் அவர்கள் முப்பத்தெட்டு வருடங்கள் ஆசிரியப் பணி புரிந்தவர்.

"என்வாழ்க்கையில் எழுத்துலக வாழ்க்கையில் 1944ஆம் ஆண்டு மிக முக்கிய வருடம். நான் ஆசிரியத் தொழிலில் புகுந்ததும் ஒரு நாவலையும் ஒரு மொழி பெயர்ப்பு நாவலையும் எழுதி முடித்ததும் எனது முதலாவது நாடகம் மேடையேறியதும் அந்த ஆண்டில்தான். தமிழுக்கு வினை பிடித்தது. அன்று என்று சிரிக்கிறீர்களா? அதன் பின்னால் தமிழ்த்தாய்க்கு நேர்ந்த விபத்துக்களை எண்ணிப்பாருங்கள். சிரிப்புத் தானாகவே ஓய்ந்து விடும்.

எனக்குத் தெரியாதது எனக்குப் பிடிக்காதது எனச்சில விசயங்கள் உண்டு. வேறு சிலவற்றைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருக்கின்றேன். இன்னுஞ் சிலவற்றைப் பற்றி அறிய ஆவலுள்ளேன். தெரியாததைப் பற்றி படிக்கவும் தெரிந்தவர்களிடம் கேட்டறியவும் நான் பின் நிற்பதில்லை.

ஆகவே பிறருக்குச் சொல்வதற்கென்று என்னிடம் விசயங்கள் நிறைய இருந்தன. அவற்றைப் பற்றிய அறிவு விசாலமாகிக்கொண்டு வந்ததுடன் அவற்றின் எண்ணிக்கையும் வரவர அதிகரிக்கலாயிற்று. பல தரப்பட்ட மனிதர்களுடைய சகவாசத்திலும் அவர்களுக்கு கந்த விஷயங்களில் ஈடுபட்டு பகிர்ந்து உறவை வலுப்படுத்துவது எனக்குச் சிரமமாக இருக்கவில்லை. எனக்குத் தெரிந்ததை பிறருக்குச் சொல்வது எதையும் என் ஞாபகத்தில் நன்கு பதித்துக்கொள்ள இலகுவான முறை என்பது எனது அனுபவம்.எனத் தேவன் அவர்கள்தான் ஏன் எழுத ஆரம்பித்தேன் என்ற காரணத்தைக் கூறுகின்றார்.

''இலக்கியம் பற்றிய தேவனின் கருத்துக்கள் எவையென பார்க்கில் அவரின் படைப்புக்கள் எவ்வளவு தூரம் அவற்றினை பிரதி பலிக்கின்றனவெனப் புரிந்துகொள்ளலாம். "கருவைப்படைப்பாளி கையாளும்போது உருவ அமைப்பின் பொருத்தம் பற்றி நன்கு சிந்திக்க வேண்டு மெனத்தேவன் கருதினார். அதனால்தான் உருவ அமைப்பின் பொருத்தம் பற்றிய பரிசோதனைகள் தான் தன் ஆரம்ப எழுத்துக்கள் என்றால் மனிதனால் ஏற்றுக்கொள்ளப் பட்ட நியதிகளை கோட்பாடுகளை மனிதமேம்பாட்டிற்கான சிந்தனைகளை தன் படைப்புக்களில் படைப்பாளி பெய்தெழுதவேண்டுமெனத் தேவன் அலாவுறுகிறார். வெறும் படப்பிடிப்பு வேலையல்லவே எழுத்தாளனின் தொழில் என்பது தேவனின் கருத்து. மக்களின் பேச்சு மொழியை அவ்வாறே பயன்படுத்த தேவன் விரும்பவில்லை. கேட்கிறபேச்சை வடிகட்டித் துப்பிரவாக்கிய பின்னர் தான் அதனைச் சம்பாசனையாக்கத் தேவன் விரும்பினார் என முன்னுரை எழுதிய செங்கை ஆழியன் அவர்கள் குறிப்பிடுவது முக்கியமானது.

"கேட்கிறபேச்சை வடிகட்டித் துப்புரவு செய்துதான் சம்பாஷனையாக்க விரும்புகின்றேன். ஆனால் ஆகாய எல்லையைத்தொட விரும்பவில்லை. விளங்காத புதிராக்குமளவுக்கு நீட்டவும் விரும்பேன். சம்பாசனையில் எப்படிப்பட்ட தன்மையையும் பிரதிபலிக்கமுடியும். சிரிப்பு முட்டவும் உருக்கத்தை விளக்கவும், நிதானத்தை வெளிப்படுத்தவும் ஆழத்தை காட்டவும் தூங்கி வடியவும் அமைதியை வருவிக்கவும் சம்பாஷனையால் முடியும்" என்றார் தேவன்.

தேவன் அவர்களிடம் காணப்பட்ட முக்கியமான தன்னை அக்காலத்திலேயே அவர் "தமிழ்த் தேசியம்" என்ற எண்ணக்கருத்தில் வலுவாக இருந்தவர். அந்த அடிப் படையிலேயே அவர்தன் கருத்துக் களை வெளிப்படுத்தினார். தேவன்-யாழ்ப்பாணம் சிறுகதைகளில் மொத்தமாக எட்டுச் சிறுகதைகள் உள்ளன. ஆனால் முதல் நாற்பது பக்கங்களும் அந்தக் கதைகளை படிப்பதற்கான அல்லது தேவனைப் புரிந்துகொள்வதற்கான தன்மைகளைக்கொண்ட விடயங்களை அடக்குகின்றது.

எட்டுச் சிறுகதைகள் அக்காலச் சூழலுக்கு ஏற்ப மிகச் சிறிய கதைகளாக உள்ளன. என்பதோடு அவை பற்றிய மதிப்பீடும் விமர்சனமும் அக்கால கட்டத்தை அடிப் படையாக வைத்தே செய்யப்பட வேண்டும்.




"அறிமுகம்" என்ற சிறுகதையில் தேவன் அவர்கள் அந்தக் காலத்தில் கூறிய கருத்து சற்று யோசிக்க வைக்கிறது.

"என் கதைகளுக்கும் கட்டுரைகளுக்கும் நாவல்களுக்கும் பத்திரிகைக்காரர்களுடைய விமர்சனத்துக்காக நான் தவம் கிடப்பதில்லை. என்னுடைய மொழி பெயர்ப்பு நாவல் ஒன்று வெளிவந்ததிலிருந்து எனக்கு விமர்சகர்களைப் பற்றி ஓர் அபிப்பிராயம் வேரூன்றிவிட்டது. அதாவது இரண்டொரு பத்திரிகைகளின் விமர்சகர்களைத் தவிர மற்றவர்கள் நூலையே படிக்காமல் மதிப்புரை எழுது கிறார்கள் என்பதுதான்.


முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்னர் தேவன் அவர்களால் வைக்கப்பட்ட கருத்து அல்லது குற்றச்சாட்டு இன்றுவரை தொடர்வதை என்னவென்று சொல்வது.


"இருதாரமணம்" என்ற கதையில் தேவன் அவர்கள் குறிப்பிடும் இன்னுமொரு விடயம் சுவையானது. 04.04.1959 இல் ஈழநாடு பத்திரிகையில் வெளியாகியது. அதாவது கிட்டத்தட்ட நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர்.

"அந்த இரண்டு பெண் குழந்தைகளுக்கும், கண்மணி, சிந்தாமணியெனப் பெயரிட்டு வளர்த்தாள். இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு இம்மாதிரிப் பெயர்கள் பாஷணாயிருந்தன. இப்போது இரண்டெழுத்துப் பெயர்கள் நாகரிகமாயில்லை" என்றார்.

ஆனால் இன்றைக்கு எப்படியான பெயர்கள் வந்துவிட்டன. ஜெர்மன், டச்சு, சுவிஸ், ஆங்கிலம் என எல்லாமே சேர்ந்து அர்த்தமில்லாத எத்தகைய பெயர்கள் உருவாக்கப் பட்டுவிட்டன.

**இணுவையூர்**
**சிதம்பரதிருச்செந்திநாதன்**




நமது மரபுரிமை விலங்குகளான எலிகளில் சிறிய எலிகளைப் பற்றி அறிந்த நாங்கள் பெரிய எலி. வகைகளை இங்கை பார்ப்பம்.

வீட்டெலி, வெள்ளெலி, பெருச்சாளி என்றவை பெரிய எலிகள். இதில ஆகப் பெரிய எலி பெருச்சாளி.

இதன் முழுநீளம் ஒரு அடிவரையாகும். அதிகம் வயல் பயிர்செய் நிலங்களுக்கு அண்மையாகவே இதன் நடமாட்டம் இருக்கும். வயல்களில் புத்து வைத்து அதனுள் இருக்கும். அதிகம் வயலில் நெற்பயிர்களை அழிப்பது பெருச்சாளிகளே அதோடு தோட்டங்களில் மரவள்ளி, உருளை உள்ளிட்ட கிழங்கு வகைகளை நிலத்துக்குக் கீழாக வளை தோண்டி வந்து தின்றுவிட்டுப் போகிற உபாயம் இதனுடையது. இதால பெருச்சாளி ஒரு அழிவு உயிரினமாக இருக்கிறது.

பெருச்சாளியின் மொத்த நீளத்தில அரைவாசி நீளம் வால். பெருச்சாளியில் பெண்ணைவிட ஆண் பெரியதாக இருக்கும். பெருச்சாளிகளை வெளியில் பார்க்கிறது குறைவு. இது அநேகம் நிலக்கீழ் வளைகளில்தான் வாழும். உணவு தேடலையும் நிலக்கீழ் சுரங்கம் தோண்டியே மேற்கொள்ளும். இதன் நிலக்கீழ் வளை மிக வசதியாக பெரிதாக இருக்கும். ஒரு பெரிய கட்டடத்தின் பரப்பளவில்கூட இது நிலக்கீழ் வளைகளை அமைக்கும். அதேவேளை பெருச்சாளி தண்ணியில் மிகத்திறமாக நீச்சலடிக்கும். எலிகளில திறமையான நீச்சல்காரன்




பெருச்சாளிதான். குறிப்பாக சொல்லப்போனால் எலிகளில் அதிபுத்திசாலி பெருச்சாளிதான். இதன் உடலை போர்த்திய முடி கடும் பழுப்புநிறம்கொண்டதாக தடித்ததாக ஒவ்வொரு முடியும் தனித்து சிலிர்த்து நிற்பதாக இருக்கும். களிமண்ணின் நிறத்தில்தான் பெருச்சாளிகள் இருக்கும்.

ஒரு தடவை புதுக்குடியிருப்பு சந்தையில் ஒரு இடத்தில் மக்கள் அதிகளவில் பரபரப்பாக கூடியிருந்தனர். என்ன பரபரப்பு என கிட்டச் சென்று பார்த்தோம். அங்கு ஒரு விலங்கு நன்றாக கொழுத்து கழுத்தில் நூல் கட்டப்பட்டிருந்தது. பலர் நூறு இருநூறு என விலைபேசிக்கொண்டிருந்தனர். விலைபேசப்பட்டவர் பெருச்சாளி. நல்ல கொழுத்த அதன் நிறை ஒரு கிலோவுக்கு மேல்வரும். ஒரு அபூர்வ விலங்காகவே அதனை எல்லோரும் பார்த்தார்கள்.

தானியங்கள், கிழங்குகளை உண்பதால் அதன் இறைச்சி நல்ல ருசியாக இருக்கும் என்று அங்கு விலை பேசியவர்கள் பேசிக்கொண்டார்கள்.

இந்த பெருச்சாளி ஆங்கிலத்தில் பண்டிக்கூட் எனப் படுகிறது. உயிரியல் பெயர் **Bandicota mdica indica** ஆண்டு களுக்கு ஒரு தடவை கருத்தரிக்கும் பெருச்சாளி ஒரு தடவையில் இரு குட்டிகள் போடும்.

## சொற்சிலம்பம் - 58

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ன் | தோ | ம | பி | ற | ட் | ர |
| அ | ஸ் | ல் | வி | ர | கா | ல் |
| நீ | பொ | கி | நோ | ன் | ப | ம் |
| டோ | அ | க் | ய | ச | ங் | மா |
| கை | ர | த | தா | ரா | வ | ஜா |
| உ | ல | க | இ | ன | ம் | தே |
| சி | பூ | வ | ஓ | ச | வி | னை |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -56 இன் விடைகள்

01. பொன்விழா.

02. சிலப்பதிகாரம்.

### சொற்சிலம்பம் - 56 இன் பரிசுக்குரியவர்

வை.கோகுலதரன்,
தரம் 6D யா/ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை.

### சொற்சிலம்பம் - 56 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. அ.றஜீன், மருதங்கேணி இந்து தமிழ் வித்தியாலயம்.
02. கெ.நிறோஜன், தரம்-09, முத்துஜயன்கட்டு வலதுகரை அ.த.க. பாடசாலை.
03. ந.நிதுஷன், 85, ஜெயந்திநகர், கிளிநொச்சி.
04. அ.றோஜிதா, நட்டாங்கண்டல் அ.த.க.பா பாண்டியன்குளம்.
05. சு.மாதவி, ஆண்டு -4, றோ.க. பாடசாலை, புதுக்குடியிருப்பு.
06. க.சமேஸ்சிகா, பு/ஸ்ரீ சுப்பிரமணிய, வித்தியாசாலை
07. கி.சரிதா, கொக்கிளாய் அ.த.க.பா, புதுக்குடியிருப்பு.
08. வ.கிசோபன் ஆண்டு-02, வ/இறம்பைக்குளம் ம.வி, வவுனியா.

01. இலங்கையில் முதன் முதலாகவெளிவந்த பத்திரிகையின் பெயர்
01) ..................................

சொற்சிலம்பம்-58
ஈழநாதம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.

02. நோபல் பரிசு திட்டத்தை அறிமுகம் செய்தவர்.
01) ..................................


பெயர் :- ..................................

முகவரி :- ..................................

..................................

## எலியாரின் வண்டில்

பகுதி-08







# ஒரு ஆபரணக்கல் ஆவணப் பெட்டகமாகிறது

புவியின் வரலாற்றை அறிந்துகொள்ள எரிமலைக் கண்ணாடிகளையும் பயன்படுத்தலாம் என புவியியல் நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

பாறைக்குழம்பு, எரிமலை வழியாக புவியின் மேற்பரப்புக்கு வரும்போது வெப்பநிலை மாறுபாடு ஏற்படுகின்றது. அதிகமான வெப்பநிலையில் இருந்து குறைவான வெப்பநிலைக்கு வருவதால் குளிர் அடைகின்றது. இந்தக் குளிர்ச்சியினால் திரவ, தூள், கூழ் நிலையிலுள்ள எரிமலைக்குழம்பு எரிமலைக்கண்ணாடியாக உறைகின்றது. இதை 'வல்கனிக்கிளாஸ்' என்று அழைப்பர். இது தோற்றத்தில் கண்ணாடியை போன்று இருக்கின்றது. ஒளி பிரதிபலிப்புத் தன்மையைக்கொண்டுள்ளது. வழவழப்பும், ஒளி ஊடுருவும் தன்மையும் இதனில் உள்ளன. எனவே, இயற்பியல் அறிஞர்கள் இதை எரிமலைக்கண்ணாடி என்றே அழைக்கின்றனர். எரிமலைக் கண்ணாடியில் ஒட்சிசன் அதிக அளவில் உள்ளது. சிலிக்கா இதில் 35 முதல் 75 சதவீதம்வரை உள்ளது. அலுமினியம் ஒட்சைட் 12 முதல் 18 சதவீதம்வரை உள்ளது. வெள்ளிஒட்சைட், மங்னிஸ் ஒட்சைட், சோடியம் ஒட்சைட், பொட்டாசியம் ஒட்சைட், கல்சியம் ஒட்சைட், ஆகியவை மிகக்குறைந்த அளவிலும் உள்ளது. எரிமலைக் கண்ணாடியை பழங்காலத்தில் ஆபரணக் கற்களாகப் பயன்படுத்தினர். ஆனால், தற்போது ஆய்வாளர்கள் எரிமலைக்கண்ணாடியை தகவல் பெட்டகமாக கருதுகின்றனர். எரிமலைக்கண்ணாடி அதன் மூல பாறைக் குழம்பின் இயற்பியல் தன்மைகளை விளக்குகின்றது. மேலும், அருகில் உள்ள புவிப்பாறைகளின் வரலாறுகளையும் வயதையும் குறிப்பிடுகின்ற குறிப்புப் பாறைகளாகவும் பயன்படுகின்றது. எரிமலைக் கண்ணாடியைப் பயன்படுத்தி அருகிலுள்ள பாறைகள், அவற்றின் மூல பாறைக்குழம்பின் வெப்ப வரலாறு போன்றவற்றை நுட்பமாக அறியலாம். புவியை விட சந்திரன், செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய கிரகங்களில் எரிமலைகளும், எரிமலைக் கண்ணாடிகளும் மிகுதியான அளவில் உள்ளன. விண்வெளி ஆய்வுகளுக்கும் எரிமலைக் கண்ணாடியை பயன்படுத்தலாம் என விண்வெளி ஆய்வு நிபுணர்கள் கருதுகின்றனர்.

# அலைகளை அவதானிக்கும் செயற்கை கோள்கள்

மிகப் பெரிய கப்பல்களைக்கூட கடல் அலைகள் காணாமல் போக செய்துவிடும் ஆபத்தான நிகழ்வுகள் உலகில் நடந்து கொண்டே இருக்கின்றன. எனவே, மிகப்பெரிய அலைகள் எந்தக் கடலில்தோன்றும்? எப்பொழுது தோன்றும்? உலகில் மிகவும் ஆபத்தான கடல் எது? என விஞ்ஞானிகள் ஆய்வுசெய்கின்றனர். காற்று, கடல் அலைகளை உண்டாக்குவதில் பெரும் பங்கேற்கின்றது. கடல் பரப்பின் மேல் காற்று வீசும்போது கடல் நீரில் ஏற்படும் அசைவுகள் அலைகள் எனப்படும். சிற்றலைகள் பெரு அலைகள், மூழ்கும் அலைகள், காற்றால் உண்டாகும் காற்றலைகள், இயல்பான பெருங்காற்றால் அல்லது புயலால் தோன்றும் புயல்கள், கடல் அடியில் புவி அதிர்ச்சியால் தோன்றும் புவி அதிர்ச்சி அலைகள், புவியீர்ப்பு விசையால் எழும் ஓத அலைகள் என அலைகள் பலவகைப்படுகின்றன. இதுவரை கடல் அலைகளினால் 200 மீற்றர் நீளமுள்ள பெரிய சரக்கு கப்பல்கள் 200க்கும் மேற்பட்டவை காணாமல் போய்யிருக்கின்றன. கடலில் ஏற்படும் மிகப்பெரிய அலைகளைக் குறித்து ஐரோப்பிய செயற்கைக்கோள் கண்காணித்துவருகின்றது. 1000ஆண்டுகளுக்கு ஒருமுறை மிகப்பெரிய மலைபோன்ற அளவு அலை தோன்றும் என்ற கணிப்பினை சமீபகால நிகழ்வுகள் பொய்யாக்கி விட்டன. செயற்கைக்கோள்கள், அலைகளைக் குறித்து அனுப்பும் படங்கள்



'வேவ் அட்லஸ்' எனப்படுகின்றது. இது உலகில் அனைத்துக் கடல்களில் ஏற்படும் அலைகளை படங்களாக அனுப்பிவருகின்றது. இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் உலகின் எல்லாப்பக்கமும் இருந்து எழும் அலைகள் ஆராயப்பட்டு எந்தக்கடல் மிகவும் ஆபத்தான கடல்? என்பது அறிவிக்கப்பட்டுவிடும்.

# ஆய்வு செய்யப்படும் கடல்நீர்



உலகில் 75 சதவீதம் கடல் நீரால் சூழப்பட்டுள்ளது. கடல் அலைகளில் இருந்து ஆற்றல், கடல் நீரில் இருந்து மூலகங்களைப் பிரித்தெடுத்தல், கடல் நீரைக் குடிநீராக்கும் முறை ஆகியவற்றின் ஆய்வுகள் நடைபெறுகின்றன.

ஆழ்கடலின் தன்மையை ஆய்வதன்மூலமும், ஆழ்கடலில் படிந்துள்ள வண்டல் மண்ணை பகுப்பாய்வு செய்வதன் மூலமும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த தட்பவெப்ப நிலை, வானிலை மாற்றம், பருவமழை ஆகியவற்றை அறிய முடியும் என தற்போது விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த தட்பவெப்ப நிலையை அளவிடுவது எதிர்கால வானிலை மாற்றங்களைக் கணிப்பதற்கு உதவியாக இருக்கும் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர். அரபிக் கடலில் கிழக்குப் பகுதியில் இத்தகைய ஆய்வுகள் நடைபெறுகின்றன. வானிலையைப் பொறுத்தவரை கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றுக்கு நெருங்கிய தொடர்பு உள்ளது. என்பது விஞ்ஞானிகளின் கணிப்பாகும். எனவேதான், அரபிக்கடலின் ஆழத்தில் நடைபெற்றுவரும் கடந்த கால வானிலையை அறிந்துகொள்ள நடைபெறும் ஆய்வுகள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. 2ஆயிரம் முதல் 2ஆயிரத்து 400 மீற்றர் ஆழத்தில் உள்ள வண்டல் படிவுகளைக்கொண்டு 2லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வானிலையை அறிந்துகொள்ளமுடியும். வண்டல் படிவுகளில் உள்ள ஒட்சிசன் சமதானிகளைக் (சம அணு எண் கொண்ட - வேறு வேறு அணுத்திணிவுடைய மூலகங்கள் சமதானிகள்) கொண்டு கடல் நீரின் மேற்பரப்பில் உள்ள வெப்ப நிலையையும், கடல் நீரில் உள்ள உப்புத்தன்மையையும் அளவிட முடியும். ஆழ்கடலில் உள்ள வண்டல் மண்படிவுகள் சாதாரணமானவை அல்ல. அவை கடந்த கால வானிலை குறித்த தகவல் சுரங்கங்கள் என தற்போது தெரியவந்துள்ளது. வண்டல் மண்ணின் வேதியியல் குணங்களும் தற்போது ஆராயப்பட்டுவருகின்றன.

த.அருவி




**நெஞ்சுவலி:**

தேங்காய் எண்ணையில் கற்பூரம் சேர்த்து நன்கு சுடவைத்து ஆரவைத்து நெஞ்சில் தடவ சளி குணமாகும்.

**தொடர்விக்கல்:**

நெல்லிக்காய் இடித்து சாறு பிழிந்து, தேன் சேர்த்து சாப்பிட்டால் தொடர்விக்கல் தீரும்.

**உதட்டு வெடிப்பு:**

கரும்புச்சக்கையை எடுத்து எரித்து சாம்பலாக்கி, அதனுடன் வெண்ணெய் கலந்து உதட்டில் தடவிவர உதட்டு வெடிப்புக்குணமாகும்.

**அஜீரணம்:**

ஒரு டம்ளர் தண்ணீரில் கறிவேப்பிலை, இஞ்சி, சீரகம், மூன்றையும் கொதிக்க வைத்து ஆறவைத்து வடிகட்டி குடிக்க அஜீரணம் குணமாகும்.

# வீட்டு வைத்தியக் குறிப்பு

**குடல்புண்:**

மஞ்சளை தணலில் இட்டு சாம்பல் ஆகும் வரை எரிக்கவேண்டும். மஞ்சள் கரி சாம்பலை தேன் கலந்து சாப்பிட குடல்புண் ஆறும்.

**வாயுத்தொல்லை:**

வேப்பம் பூவை உலர்த்தி தூளாக வெந்நீரில் உட்கொள்வதினால் வாயுத்தொல்லை நீங்கும். ஆறாத வயிற்றுப்புண்நீங்கும்.

**வயிற்றுவலி:**

வெந்தையத்தை நெய்யில் வறுத்து பொடி செய்து மோரில் குடிக்க வயிற்று வலி நீங்கும்.

**தேமல்.**

வெள்ளைப்பூண்டையும் வெற்றிலையும் சேர்த்து மசிய அரைத்து தினமும் தோலில் தேய்த்து குளித்து வர தேமல் குணமாகும்.

**தீப்புண்:**

வாழைத் தண்டைச் சுட்டு அதன் சாம்பலை தேங்காய் எண்ணையில் கலந்து தடவி வர தீப்புண் சீழ்வடிதல் மற்றும் காயங்கள் விரைவில் குணமாகும்.

**மூக்கடைப்பு:**

ஒரு துண்டு சுக்கை தோல் நீக்கி அரை லீட்டர் நீரில் போட்டு சுண்டக்காய்ச்சி, பால், சீனி சேர்த்துக்காலை, மாலை சாப்பிட்டு வர மூக்கடைப்பு விரைவில் நீங்கும்.

**வரட்டு இருமல்:**

எலுமிச்சம்பழச்சாறு, தேன் கலந்து குடிக்க வரட்டு இருமல் குணமாகும்.

# நெருப்புக் காய்ச்சலை நெருங்க விடாதீர்கள்

மருத்துவ வசதிகளும், புதிய புதிய மருந்துகளும் கண்டுபிடிக்கப்பட்டுவிட்ட இந்த நவீன யுகத்தில் கூட, பல மரணங்களுக்கு நெருப்புக் காய்ச்சல் காரணமாயிருக்கிறது. எனவே, சுகாதார முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் சுலபமாகத் தடுக்கக்கூடிய இந்நோய் தொற்றாமல் பாதுகாப்பதே புத்திசாலித்தனமாகும்.

நோயாளிகளதும், நோய் காவிகளினதும் மலத்துடன் வெளியேறும் இந்நோய்க் கிருமிகள் (Salmonella Typhi - சல்மனெலா ரைபி) குடிநீர், உணவு, சுத்தம் செய்யப்படாத கைவிரல்கள் மூலம் சுகதேகிகளின் குடலை அடைந்து நோயைப் பரப்புகின்றன. கிருமி தொற்றுவதற்கும், நோயின் அறிகுறிகள் வெளிப்படுவதற்கும் இடையேயான நோயரும்புக் காலம் 7-21 நாட்களாகும்.

இந்நோயின் ஆரம்ப அறிகுறிகள் மிகவும் சாதாரணமானவை, தலையிடி, உடல் உழைவு, மெல்லிய காய்ச்சல், வயிற்றில் லேசான நோ போன்ற ஆரம்ப அறிகுறிகள் எவரது கவனத்தையும் ஈர்க்கமாட்டா. காய்ச்சல் சிறிது சிறிதாக அதிகரித்துக்கொண்டுபோகும், வயிற்றோட்டம் அல்லது மலச்சிக்கல் இருக்கலாம்.

இவை யாவும் சாதாரண அறிகுறிகள், ஏனைய பல காய்ச்சல்களுக்கும் பொதுவானவை. எனவே நீங்கள் ஆரம்பத்திலேயே நெருப்புக் காய்ச்சல் என்று சந்தேகப்பட முடியாதிருக்கும். எனவே அறிகுறிகள் எவ்வாறு இருந்தாலும் காய்ச்சல் 4,5 நாட்களுக்கு மேல் நீடித்தால் வைத்தியரை அணுகுங்கள். உடலைப் பரிசோதித்துப் பார்த்து, இரத்தப் பரிசோதனைகளையும் செய்து, நெருப்புக் காய்ச்சல்தான் எனத்திடமாக முடிவெடுப்பதற்கு, திறமையான வைத்தியர்களுக்குக்கூட காய்ச்சல் தொடங்கி ஒரு வாரத்திற்கு மேல் செல்லும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

# ஏற்புவலித் தடை ஊசியை ஒழுங்காகப் போடுங்கள்

மருத்துவ விஞ்ஞானம் வியக்கத்தக்கமுறையில் முன்னேறியுள்ள இன்றைய காலகட்டத்தில் கூட ஏற்புவலிநோய் மரணத்தை விளைவிக்கக்கூடிய அளவு பாரதூரமானதே!

இந்நோயின் ஆரம்ப கட்டத்தில், முகத்தசைகளின் விறைப்பால் வாய் திறப்பதும், உணவு விழுங்குவதும் சிரமமாக இருக்கும். பின் தசைவிறைப்பு உடம்பின் ஏனைய பாகங்களுக்கும் பரவும்: வலிப்பு ஏற்படும்: மரணம் சம்பவிக்கலாம்.

ஏற்புவலி நோய் நிச்சயம் தடுக்கக்கூடியது: அடியோடு ஒழிக்கப் படக்கூடியது. எனவே அநாவசியமாகவும், கவலையீனத்தினாலும் இந்நோய் இன்னமும் ஏற்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்நோய் குளோஸ்ரிடியம் ரெட்டணி (Clostridium Tetani)என்ற கிருமியிலிருந்து உண்டாகும், மனிதனின் நரம்புத்தொகுதியைத் தாக்கும் ஒரு நச்சுப்பொருளால் ஏற்படுகிறது.

இக்கிருமி மனிதனின் மலத்திலும், வீட்டு மிருகங்களின் சாணியிலும் இயல்பாகவே காணப்படுகிறது. எனவே இவற்றால் அசுத்தப்படும் மண் காயங்களில் படுவதால் அல்லது ஆணி, முள் போன்றவை குற்றும்போது அவற்றில் படிந்திருக்கும் கிருமி மனிதனின் உடலுக்குள் செல்வதாலும் இந்நோய் ஏற்படுகிறது.

இந்நோய்க்கிருமிகள் காயத்தினூடாக உடலுக்குள் சென்றுவிட்டாலும், நோய் ஏற்படாமல் தடுக்கவே ஏற்புவலித்தடுப்பூசி போடப்படுகிறது.

# பெருங்குளங்களை மட்டுமல்ல; சிறு குளங்கள் தொடர்பாகவும் சிந்திக்கலாம்

குளங்கள்கட்டப்படுவதை பற்றியதொரு பத்தி கடந்த சில வாரங்களுக்கு முதல் இந்தப் பகுதியில் வெளியாகியிருந்தது. அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைப் பற்றிப் பலர் நேரிலும் கடித மூலமாகவும் தங்களுடைய அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் கேள்விகளையும் முன் வைத்திருந்தார்கள். அவற்றை தொகுத்து நோக்கும்போது விவசாயத்துறையை குளங்கள்தான் அடிப்படையாக நின்று ஊக்குவித்துக் கொண்டிருக்கின்றன என்றும் குளங்கள் கட்டப் படுவது தவறானதா எனவும் பொது வான அடையாளம் காட்டின.

இங்கே இப்போது, இந்தப் பத்தியில் முன்பு வெளியான பத்தியில் விவாதிக்காமல் விடப்பட்டவையும் பலராலும் முன்வைக்கப்பட்ட கேள்விகள் அபிப்பிராயங்கள், விமர்சனங்கள் சார்ந்தும் சிலவிடயங்கள் எழுதப்படுகின்றன.

எங்களுடைய தொழிற்துறையிலும் பொருளாதாரத்திலும் விவசாயமும் மீன்பிடியும் முக்கியமானவை. ஆனால் இந்த இரண்டு துறைகளைப்பற்றியும் புதிய கண்ணோட்டமோ, புதிய அறிதலோ கிடையாது. அதைப்பற்றிய அக்கறையும் பெரிய அளவில் இல்லை.

எவரும் தங்களுடைய பிள்ளை விவசாயத்துறையில் படித்து ஆளாக வேண்டுமென்று சிந்திப்பதாயில்லை. இதேபோலவே மீன்பிடித்துறையிலும் தங்களுடைய பிள்ளைகள் படித்து அத்துறையில் தொழில்புரியவேண்டுமென்றும் யாரும் விரும்புவதில்லை. அந்தத் தொழிலில் ஈடுபட்டுவருகிறவர்களிடம் கூட இந்த விருப்பமோ ஆர்வமோ, இல்லை.

சரி அப்படி இருந்தாலும் அந்தத் துறையை சரியாகப் படித்து அதில் புதிய அடையாளத்தைத் தரக் கூடியதாக வருவதற்கு உரிய வழிகளும் முழுதாக இல்லை. ஏதோ சாட்டுக்கு விவசாயப் பாடத்திட்டத்தில் இப்போது மிக அண்மைக்காலத்தில் மீன்பிடித்துறையும் பாடத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஆனால், பாடத்திட்டத்தில் இந்த இரண்டு துறைகளும் சேர்க்கப்பட்டிருந்தாலும் அவற்றைப் பள்ளிகளில் படிப்பிப்பதற்கு ஆசிரியர்கள் பல இடங்களிலும் இல்லை. அத்துடன் பல பாடசாலைகள் இந்தப் பாடங்களைப் படிப்பிக்க விரும்புவதும் இல்லை.

இந்தப்பாடங்களைப் படிப்பதைவிட கணிதம், விஞ்ஞானம், வணிகம், கலைத்துறைகளில் படியுங்கள் என்றே வழிகாட்டுகிறார்கள். சில இடங்களில் வற்புறுத்துகிறார்கள். பெற்றோரும் பிள்ளைகளை இந்தவகையில்தான் வழிநடத்துகிறார்கள். பாடசாலைகளில் அதிபர்கள் ஆசிரியர்களும் கூட இவ்வாறுதான் மாணவர்களுக்கு வழிகாட்டுகிறார்கள்.

இருக்கின்ற பாடமும் ஏதோ சாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதைப் போலவேயிருக்கிறது. நடைமுறைசார்ந்து அதில் கவனம் வைக்கப்படவில்லை

இதனால், பாடங்களைப் படிப்போரின் தொகை மிககுறைவு. இந்த நிலைமைகளினூடே ஆர்வத்தோடு படிக்க வருகிற ஓிரண்டு மாணவர்களுக்கும் வழிகாட்டிகள், ஒத்துழைப்போர், ஆதரவளிப்போர், உதவுவோர், மதிப்பளிப்போர் எல்லாம் குறைவு. சுயமாகவே அவர்கள் உருவாகவேண்டும் என்பதே நிலைமை.

இப்போது கடற்றொழில் துறைக்கு யாழ்ப்பாணப்பல்கலைகழகத்திலேயே கற்கக் கூடிய வசதியுண்டுஎன்று யாரும் வாதிடலாம். இதே போல விவசாயத் துறையில் படித்து வருவோர் இருக்கிறார்கள். இந்தத் துறையில் படிக்கக்கூடிய இடங்களும் இருக்கின்றனவே என்றும் அவர்கள் கூறக்கூடும். இதில் ஓரளவு உண்மையும் இருக்கலாம். ஆனால் அந்த உண்மை 'தமிழர்கள்' இலங்கையில் சமத்துவமாக நடத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு உரிமைகள் உண்டு என்று கூறுவதைப்போல இருக்கிறது.

விவசாயத்துறையை உயர் தரத்தில் படிக்க விரும்புகிற மாணவர்களுக்கு எத்தனை பள்ளிகளில் ஏற்பாடுகளும் வசதிகளுமிருக்கின்றன?

எத்தனை அதிபர்களும் ஆசிரியர்களும் பெற்றோரும் அந்தத் துறையில் படிப்பதற்கு உதவுகிறார்கள்? ஊக்கப்படுத்துகிறார்கள்?

தவிர அந்தத் துறைகளிலும் பல்கலைக்கழக மட்டத்தில் எவ்வளவு வசதிகள் உண்டு? எத்தனை பேரை அவை உள்வாங்கத் தயாராக இருக்கின்றன? எந்த அடிப்படையில் அவை உள்வாங்குவதற்கான அளவு கோளை வைத்திருக்கின்றன? என்ன முறையில் அவற்றின் கற்பித்தல் முறைகள் அமைந்திருக்கின்றன?

இது தோல்விக்குரியதாக இருப்பதாற்தானே இந்தத்துறையில் பயில்வோரும் ஈடுபடுவோரும் குறைவாக இருக்கின்றனர்? ஆர்வங் கொள்வதும் குறைவாகவுள்ளது?


பல்கலைக்கழக கற்றல் முறைக்கு அப்பால் வெளியே இந்தத்துறைசார்ந்த பயில்நிலையங்கள் இருக்கின்றனவா? இல்லையே. அப்படியென்றால் இது எதைக்காட்டுகிறது? ஆனால் வேறு எத்தனையே தொழில்களுக்கெல்லாம் எல்லா இடங்களிலும் பயிலகங்களிருக்கின்றன. தட்டச்சு, கணனி, ஆங்கிலம், வானொலி- மணிக்கூடு திருத்துதல், மரவேலை, மின்சாரவியல் முதல் பெரும்பாலானவற்றுக்கு தொழிற்பயிலுகை உண்டு. பல இடங்களிலும் இவற்றுக்கு நிறுவனங்களே இயங்குகின்றன. பெருந்தொழில்களான விவசாயத்துக்கும் கடற்தொழிலுக்கும்தானில்லை.

இது எதைக் காட்டுகிறது?

குளங்களைக்கட்டுவது பற்றிய கேள்விகளுக்கும் இவற்றுக்கும் என்ன தொடர்பிருக்கிறது என்று கேட்கிறீர்கள்.

தொடர்பிருக்கிறது. விவசாயத்துக்கு நீர்ப்பாசனம் அவசியமானது. நீருக்கு குளங்கள் ஆதாரனமானவை. இங்கேயுள்ள பிரச்சினையென்னவென்றால், குளங்களைக் கட்டவேண்டும் என்று ஆர்வப்படுகிற அளவுக்கு விவசாயத்துறையை அதன் முழுப்பயனுடனும் மதிப்பெழுச்சியுடனும் வளர்க்கவேண்டும் என்ற விருப்பமோ, திட்டமோ எமது சூழலில் இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

விவசாயத்தில் மண்ணியல், நீரியல், பயிரியல், நோயியல் சந்தைப் படுத்துதல் என அடிப்படையிலான விடயங்களுண்டு. இவை மிக மிக அவசியமானவை. இந்தத்துறைகளில் ஆய்வுகளும் புதிய அணுகுமுறைகளும் ஏற்படவேண்டும். அப்படி ஏற்பட்டால் மட்டுமே விவசாயத்தை புதிய வளர்ச்சிக்கட்டத்துக்கு கொண்டு போக முடியும். தவிர விவசாயத்தை நவீனப் படுத்தவும் முடியும்.



இந்த அடிப்படை விடயங்களில் கவனத்தை தவற விட்டபின் புதிய இயந்திரங்களை இறக்கிப்பயன் படுத்துவதோ புதிய உரவகைகளைப் பயன் படுத்துவதோ குளங்களை மேலும் மேலும் கட்டுவதோ மட்டும் விவசாயத்தை விரிவு படுத்தி வளர்த்து விடாது.

விசாரித்துப் பார்த்ததில் இலங்கை முழுவதிலும் ஆக இருவர் மட்டுமே மண்ணியல் ஆய்வில் அறிவியல் ரீதியான தகுதியுடையோராக இருக்கிறார்கள்.

எங்களுடைய ஊடகங்களில் கூட விவசாயம் பற்றிய புதிய கண்ணோட்டமெதுவும் முன்வைக்கப்பட்டதாக இல்லை. இருக்கிற நிலைமையை கொஞ்சம் சீர்செய்கின்ற மாதிரியான காரியங்களே நடக்கின்றன. மற்றும்படி அதனை

**வெளிவாசல்பாலன்**

சமூக அளவிலான நடைமுறைத் தளத்தில் யோசிக்கும் தன்மையைக் காணமுடிவதில்லை.

அத்துடன் விவசாயிகளிடையேயும் புதிய நவீனத்துவம் குறித்த வளர்ச்சி பற்றிய பார்வைகளுக்கான வழிகாட்டல்களும் குறைவாகவேயுள்ளன.

சாதாரணமாக எங்காவது பத்துவிவசாயிகளை எடுத்து அவர்களை அவதானித்தால் அவர்களுடன் உரையாடினால் மதிப்பீடு செய்தால் பாரம்பரிய விவசாயமுறைக்குள்ளேயே அவர்கள் அதிகம் நம்பிக்கை வைத்திருப்பது தெரியும். பாரம்பரிய விவசாயமுறையில் தரமான விளை பொருட்கள் கிடைக்கும் என்பது உண்மை. பாரம்பரிய விவசாயத்தை இயற்கைத்தன்மை குலையாமல் விரிவாக்குவதன்மூலம் மேலதிகப் பயனையும் வருவாயையும் பெறலாம் என்ற அறிவும அதற்கான வழிமுறைகளும் அவர்களுக்குத்தெரிந்திருப்பதில்லை. இவையெல்லாம் எதைச் சொல்கின்றன?

குளங்கள் கட்டுவது என்பதைக்கூட பெரும் குளங்கள் கட்டுவது பற்றியே அந்தக்கட்டுரை தனது பார்வையை முன்வைத்திருந்தது.

பெருங்குளங்கள் எப்போதும் பெருமளவு காட்டைத்தின்றே உருவாகின்றன. இதனை பல சூழலியலாளர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

அத்துடன் அவை மண்ணரிப்பையும் ஏற்படுத்துகின்றன. நீரைத் தேக்குவதற்கும் தேக்கிய நீரை நீரேந்து பகுதியுடன் அண்டிய நிலத்தில் பாசனம்மூலம் பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்துவதற்கும் அதையண்டிய குடியிருப்புக்கும் என பெருமளவு காடுகள் அழிக்கப்படுகின்றன. காடுகள் அழிக்கப்படும் போது மழைவீழ்ச்சி பாதிக்கப்படுகிறது. அத்துடன் விலங்குகள் பறவைகளின் வாழிடமும் இல்லாமற்போக அவையும் அழியவேண்டியுள்ளது. இவையெல்லாம் இயற்கைச் சமநிலையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

இதேபோல மண்ணரிப்பும் நில அமைப்பின் சிதைவும் பெருமளவில் நடக்கிறது.

பெருங்குளங்களினால் பல ஏக்கர் நிலத்தில் பயிர்ச்செய்கை செய்யலாம் என்றொரு கருத்துண்டு. பெருங்குளத்துக்கான நீரைச் சேகரிக்க ஆறுகளையே மறிக்கிறோம். (ஆறுகளைப்பகிர்ந்து பல குளங்களை அமைப்பது தான் இதில் முக்கியமானது. ஆனால் இப்படிச் செய்வது குறைவு. காரணம் இது பற்றி யோசிப்பதில்லை என்பது ஒன்று. அடுத்தது, பெருங்குளங்களை அமைப்பது அரசியல் ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் இலகுவானது நீர்பங்கீடு குடியேற்றம், நிலப்பகிர்வு, போக்குவரத்து வீதிகள் பிற அமைப்புகள் நிறுவனங்கள் எல்லாவற்றுக்கும் இலகுவானது என்பது இது பற்றி வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம்) அப்படி ஆறுகள் மறிக்கப்படும் போது அந்த ஆறுகளின் கழிவிடங்கள் வரையிலான குடியிருப்புக்கள் பாதிக்கப்படுகின்றன. நீர் வசதி கெடுகிறது.

இவற்றுக்கு பதிலாக சிறு குளங்களை பரவலாக அமைக்கும் போது நிலத்தடி நீர் சேமிக்கப்படுகிறது. எல்லா இடங்களிலும் நீரும், குளிர்மையும், செழிப்பும் இருக்கிறது. மண்ணரிப்புக்கள் நிகழ்வதற்கு வாய்ப்பில்லை. கிராம மட்டத்திலோ, நகர மட்டத்திலோ கால் நடை முதல் கிணற்று நீர் மட்டம் வரைக்கும் சிறு குளங்கள் நன்றாக உதவுகின்றன. நில அமைப்பு கெடாதிருப்பது இதில் முக்கியமானது.



---

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வளர்ப்பு முறையிலேயே நாங்கள் வாழ்ந்துவிட்டுப்போவோம் என்று பெரும்பாலான பெண்கள் இன்றும் இருந்துவிடுகின்றனர். எங்களுடைய வளர்ப்புமுறை கல்வி என்று குறிப்பிடலாம். மிகவும் சக்தி வாய்ந்தது. எங்களுடைய பாடசாலைக்கல்வியைவிட, இந்தக்கல்வி மிக சக்தி வாய்ந்த ஒரு கல்வியாக உள்ளது. சின்னப்பிள்ளைகளில் இருந்தே பெண்களை வளர்க்கும் போது ஒரு குறிக்கோளுக்கு அமையத்தான் வளர்த்து வருகின்றார்கள். அதாவது பெண்கள் என்றால் பேண வேண்டும் என அந்த பேணுவதற்குரிய பண்பு அடக்கம், பொறுமை, நிதானமாகப் பேசுதல், அமைதியாக இருத்தல்போன்ற இவ் வாறான பண்புகளில் இருந்து வளர்க்கப்பட்டதனால், இன்று அவர்கள் ஒரு கேள்வி எழுப்புபவர்களாக ஒரு அநீதிக்கு எதிராக வெகுண்டு எழுகின்றவர்களாக இல்லா மல் ஒரு சாதுவானவர்களாக இருந்து வருகிறார்கள்

இந்த பாரம்பரியவளர்ப்புமுறை அந்த காலத்திற்கு. பொருத்தமானதாக இருந்தது. ஏனெனில் குறிக்கோள்களை அடைவதற்கு. ஆனால் இன்று, நாம் வாழுகின்ற சமூகம் எதிர்பார்ப்பது அதுவல்ல. இன்று நாம் எமது தேசத்தை மீட்கிற, தேசத்தை நிர்மாணிக்கிறவர்களாக, எங்களுடைய நூல், அதாவது பாத்திரம் மாற வேண்டியுள்ளது. பழைய எங்களுடைய பாத்திரத்தில் இருந்து இன்று ஒரு மாற்றுப்பாத்திரத்தை வகிக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். சாதாரண குடும்பப் பெண்களாக இருப்பது மட்டுல்லாது, இவ்வாறு ஒரு மாற்றுப் பாத்திரத்தை வகிக்கின்றபோது வளர்ப்புமுறை எமக்குக் கட்டாயம் தேவை, அந்த வகையிலே, போராளிகளை எடுத்துக்கொண்டால் இவர்களை பாரம்பரியமாக எங்களுடைய சமூகம் வளர்த்தெடுத்து இருந்தது.இவர்களிடம் பயம், வெட்கம், அச்சம் எல்லாம் இருந்தது. அதற்குள்ளிருந்துதான் ஒரு போராட்டத்திற்கு உதவக் கூடியதாக தேசியத் தலைவர் ஒரு பலமானமுறையில் வளர்த் தெடுத்து வருகின்றார் எனவும் பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்தார்.



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 03


### பகுதி -19

பல வாரங்கள் கடந்து சென்றன. டிப்ஸின் தாயிடமிருந்து ஒரு வார்த்தை கூட என்னைத் தேடி வரவில்லை. நான் பாடசாலை யோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு டிப்ஸின் பெற்றோரிடமிருந்து ஏதாவது தகவல் வந்ததா என்று தலைமையாசிரியையிடம் விசாரித்தேன். அவரும் தனக்குத் தகவலேதும் கிடைக்கவில்லை என்று தெரிவித்தார். அவரிடம் டிப்ஸ் பற்றி விசாரித்தேன். விடயங்கள் வழமை போலவே இருப்பதாக அவர் தெரிவித்தார். டிப்ஸ் ஒழுங்காக பாடசாலைக்கு வந்து போய்க் கொண்டிருந்தான். டிப்ஸ்சுக்கான விளையாட்டு-வழி சிகிச்சை விரைவில் ஆரம்பமாக வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் அவர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள்.

திடீரென ஒரு நாள் காலையிலே, சிகிச்சை அமர்வு விபரங்களை பதிவு செய்வதற்கான அனுமதிக் கடிதம் டிப்ஸின் பெற்றோரிடமிருந்து எனக்கு வந்து சேர்ந்தது. எமது ஆய்வில் ஒத்துழைப்பதான அவர்களது விருப்பத்தை தெரிவிக்கும் சிறிய குறிப்பொன்றும் இருந்தது. வாராந்த அமர்வுகளை ஒழுங்கு செய்வதற்கு தங்களுடன் தொலை பேசியில் தொடர்பு கொள்ளும் படியும் தெரிவித்திருந்தார்கள்.

அடுத்த வியாழன் பிற்பகலில் மையத்திலுள்ள விளையாட்டு அறையில் சந்திப்பதற்கான ஒழுங்கைச் செய்து கொண்டேன். இந்த நேரம் டிப்ஸின் தாயாருக்கு வசதியானதா என்று விசாரிக்கும்படி எனது உதவியாளரை கேட்டுக் கொண்டேன். இந்த நேரம் தனக்கு வசதியானதென்றும் தானே டிப்ஸை மையத்துக்கு கூட்டி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

எங்களில் பலரும் நிம்மதிப் பெருமூச்சுகளை வெளிவிட்டோம். இந்தக் குடும்பத்தினர் இலேசான முறையில் இந்த முடிவை எடுக்கவில்லை என்பது வெளிப்படை யாகவே தெரிந்தது. விளையாட்டு-வழி சிகிச்சை அமர்வுகளை தொடர்வதில் ஏற்பட்ட தாமதத்தினுடைய முக்கியத்துவம் பற்றி எவரும் ஊகக் குறிப்புகளையே கூற முடியும் என்பதோடு தாங்கள் எடுக்கக் கூடிய அடுத்த நகர்வு தொடர்பாக அந்த பெற்றோர் அடைந்திருக்கக் கூடிய குழப்பங்கள் மற்றும் அவநம்பிக்கைகள் குறித்து கற்பனை செய்தே பார்த்திருக்க வேண்டியிருக்கும். இதற்கிடையே டிப்ஸின் நிலை என்ன? அவனது இயலுமைகள் தொடர்பான மதிப்பீடு செய்யும் முயற்சிகளின் சாத்தியமான பெறுபேறுகளை சீர்தூக்கிப் பார்க்கும் முயற்சியில், அவனது திசையில் புத்திசாலித்தனமான பார்வையைச் செலுத்தியிருப்பார்களா? அநேகமாக இந்த முயற்சியில் அத்தோடு தொடர்புபட்ட அனைத்துக் கோணங்களையும் அவர்கள் அவதானமாக பரிசீலித்திருப்பார்கள் என்றே கூறலாம். டிப்ஸின் தாயாரோடு தொடர்பு கொண்டு டிப்ஸை கொண்டு வரும்படி கூற அல்லது அவர்கள் ஏதாவது முடிவை எடுத்துவிட்டார்களா என்று கேட்க உந்துதல் பலமாக எழுந்தன. (அவர்கள் ஒரு முடிவை எடுக்காமல் இருந்தால்) ஒரு முடிவை வலிந்து திணிப்பதில் பயனேதும் கிட்டப் போவதில்லை என்பதாலும் இறுதியில் தாம் என்ன செய்யப் போகிறோம் என்று அப்போதும் யோசித்துக் கொண்டிருந்தால், நாம் இழக்க வேண்டியது அதிகமாக இருக்கும் என்பதாலும் நான் அப்படிச் செய்ய வில்லை. அது விரக்தியை ஏற்படுத் தும் நீண்ட காத்திருப் பாக இருந்தது.



குறித்த நேரத்துக்கு டிப்ஸ் தாயாருடன் மையத்துக்கு வந்திருந்தான். தான் அவனை அழைத்துச் செல்ல ஒரு மணித்தியாலத்துக்குப்பின் வருவதாக வரவேற்பாளருக்குக் கூறி விட்டு, காத்திருக்கும் அறையில் அவனை விட்டுச் சென்று விட்டார். அவனை வரவேற்க அந்த அறைக்குள் சென்றேன். அவனது தாயார் அவனை விட்டுச் சென்ற இடத்திலேயே அவன் நின்று கொண்டிருந்தான். தனது கோட், தொப்பி, கையுறைகள், பூட்சுகளை அணிந்தபடி அவன் நின்று கொண்டிருந்தான்.

அவனை நோக்கி நடந்து சென்ற நான் "காலை வணக்கம் டிப்ஸ்" என்றேன். "உன்னை மீண்டும் காண்பது சந்தோசமாக இருக்கிறது. நாங்கள் மீண்டும் அந்த விளையாட்டு அறைக்குப் போவோம். அது இந்த மண்டபத்தின் முடிவில் இருக்கிறது."

எதுவுமே பேசாமல் தன் கையை நீட்டி எனது கையைப் பற்றிக் கொண்டான். மண்டபம் நெடுக நடந்து விளையாட்டு அறையை நோக்கிப் போனோம்.

"இது இன்னொரு விளையாட்டு அறை. பல வாரங்களுக்கு முன் உங்களை சந்தித்த உங்கள் பாடசாலை விளையாட்டு அறையைப் போன்றது" என்று அவனிடம் சொன்னேன்.

"அப்படித்தான் தெரிகிறது" எனத் தட்டுத்தடுமாறிச் சொன்னான்.

இந்த விளையாட்டு அறை கீழ் மாடியிலேயே இருந்தது. அந்த அறையில் சூரிய ஒளி நிறைந்திருந்தது. முன்னைய அறையை விட இது கவர்ச்சி கரமானதாக இருந்தாலும் உபகரணங்கள், அடிப்படையில், ஒரே மாதிரியானவையாகவே இருந்தன. பலகணிக்கூடாக வாகனங்கள் நிறுத்து மிடமும் அதன் முடிவில் சாம்பல் நிறக் கற்களாலான பெரிய ஆலயமும் தெரிந்தன.

(தொடரும்....)




---


# திறமையானவர்கள் பிரகாசிக்கலாம்...



அனைத்து விதமான பந்து வீச்சாளர்களுக்கும் சாதகமாக கடந்த 20 ஆண்டுகளாகத் திகழ்ந்து வருகிறது சென்னை செப்பாக்கம் ஆடுகளம் ! பிரம்மாண்டமாக எழுந்திருக்கும் செப்பாக்கத்தில் 1967 சனவரி முதல் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன. காரி சோபர்ஸ் தலைமையிலான மேற்கிந்தியத்தீவுகள் அணி, இந்தியாவுடன் ஆடிய அந்த டெஸ்ட் ட்ரோ ஆனது. என்றாலும் 3 ஆட்டங்கள் கொண்ட அத்தொடரை 2-0 என மே.இ.தீவுகளே கைப்பற்றிச் சென்றன. இவ்வாறு முடிவு தெரிந்த போட்டிகள், முடிவில்லாத (ட்ரோ) போட்டிகள் மட்டுமல்லாது,'டை' ஆன வரலாறும் (அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 1986-87-இல் நடந்த போட்டி) செப்பாக்கத்துக்கு உண்டு. ஒருதின ஆட்டம் மட்டுமல்லாது டெஸ்ட் போட்டிக்கும் ரசிகர்கள் திரளாக வரும் இந்த அரங்கு, முன்னைய காலங்களில் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக திகழ்ந்துள்ளது. 1975-களில் பெட்ஸ்மேன்களை கதிகலங்கச் செய்த மேற்கிந்தியத்தீவுகளின் ஆண்டி ராபர்ட்ஸ், ஒரே இன்னிங்ஸில் 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதும் இதே செப்பாக்கத்தில்தான். அதே ஆட்டத்தில் குண்டப்பாவிஸ்வநாத் 87 ரன்களை குவித்து இந்தியாவிற்கு வெற்றி தேடித்தந்ததும் இதே அரங்கில்தான் கிரிக்கெட் ரசிகர்கள் மனதில் இருந்து அந்த ஆட்டம் அவ்வளவு எளிதில் நீங்காது. பேட்ஸ்மேன்களின் சொர்க்க பூமி மட்டுமல்லாது, சுழல்பந்து வீச்சாளர்களின் புகலிடமாகவும் செப்பாக்கம் ஆடுகளம் திகழ்ந்துவருகிறது. இல்லையேல் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிராகத் தனது தொடக்கபோட்டியிலேயே இந்தியாவின் நரேந்திர ஹிர்வானி 16 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருக்க முடியாது! மொத்தத்தில் திறமையுள்ள வீரர்கள் பிரகாசிக்கும் களமாக செப்பாக்கம் திகழ்கிறது.



பெங்களூரில் நடைபெற்ற முதல் டெஸ்டில் தோல்வியுற்றதும், இனிவரும் ஆட்டங்கள் எப்படி வேண்டுமானாலும் மாறலாம். சென்னை பிட்ச் பெரும்பாலும் இந்தியாவுக்கே சாதகமாக இருக்கும் என இந்திய அணிக் கப்டன் கங்குலியும், 35 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் தொடரை வெல்வதற்கு சென்னைப் போட்டி எங்களுக்கு மிகவும் முக்கியமானது; ஆதலால் அதிலும் எங்களது வெற்றி வேட்கை தொடரும் என அவுஸ்திரேலிய அணிக் கப்டன் கில்கிறிஸ்ட்டும் கருத்துத்தெரிவித்துள்ளனர். இது அணி கப்படன்களின் கருத்துகள் என்றாலும் 1972 முதல் செப்பாக்கம் ஆடுகளத்தை வடிவமைத்துவரும் கே.பார்த்தசாரதி (52) என்ன சொல்கிறார்; பேட்ஸ்மேன், போலர் என எல்லோருக்கும் உகந்த ஆடுகளம் தான் செப்பாக்கம், ஒரே சிறப்பைப் பெற்றவர்களுக்கான 'பிட்ச்' கிடையாது. வேகப்பந்து வீச்சாளர்களும் விளையாடலாம்; அதேசமயம் ஸ்டிரோக் வைத்து லைனில் ஆடும் பேட்ஸ்மேன்களும் பிரகாசிக்கலாம். சுழல்பந்து விச்சாளர்களும் சோபிக்க முடியும். மொத்தத்தில் திறமையுள்ளவர்களுக்கு இம் மைதானத்தில் மதிப்பு. பெங்களூர் டெஸ்ட்டில் முதல் இன்னிங்ஸில் இந்தியா கூடுதலான ரன்களைப் பெற்றிருந்தால் நாமே வெற்றி பெற்றிருக்கமுடியும். 2-வது இன்னிங்ஸில் நமது ஸ்பின்னர்களை அவர்களால் சமாளிக்கமுடியவில்லையே. இந்தியாவைக் காட்டிலும் குறைவான ரன்களையே ஆஸ்திரேலிய வீரர்கள் பெற்றனர். பேட்ஸ்மேன்களுக்கு மட்டுமே சாதகமாகவோ, அல்லது போலர்களுக்கு மட்டும் சாதகமாகவோ களம் அமைக்கப்பட்டாலும் ஆட்டத்தில் சுவாரஸ்யம் இருக்காது. பதான், கும்ப்ளே, ஹர்




பஜன் ஆகியோர். அற்புதமாகப் பந்து வீசி வருகிறார்கள். அவர்களுடன் நமது பேட்ஸ்மேன்களும் அதிகமான ரன்களைக் குவித்தால் செப்பாக்கம் களத்தில் வெற்றி வாய்ப்பு நமக்கு சாதகமாகும் என்றார் அவர்.

**சம்பத்**

---

கடந்த செப்டெம்பர் 7ஆம் திகதி சர்வதேச கிரிக்கெட் சபை வீரர்களுக்கு விருது வழங்கிகௌரவித்தமை அறிந்ததே.

இவ்விருது வழங்களில் முதலிடத்தைப் பெற்ற வீரர் இந்தியாவின் ராகுல்ட்ராட் ஆவார். இவருக்கு சேர், காபீல்ட்சோபர்ஸ் கிண்ணம் சிறந்த துடுப்பாட்டத்துக்காக வழங்கப்பட்டது.

இந்தியாவின் இன்னும் ஒரு வீரரும் விருது பெற்றுள்ளார். அவருக்கு வளர்ந்து வரும் வீரருக்கான பரிசு வழங்கப்பட்டது. அதற்கான பரிசைப் பெற்றுக்கொண்டவர் இர்பான்கான்பதான் ஆவார்.



எனினும் இவரின் வரலாற்றை நோக்கும் போது மிகுந்த கவலை தோன்றுகிறது.

பதான் ஏழைக்குடும்பத்தைச்சேர்ந்த ஒருவராக வளர்ந்தார். அவரின் மூத்த சகோதரன் யுசுப்பதான் றஞ்சி கிண்ண அணியின் வீரராவார். தந்தை வரோதரா முஸ்லிம் பள்ளியில் பொறுப்பாளராக கடமையாற்றுகிறார் அவரின் மாத வருமானம் 1200 ரூபாவாகும்.

பதான் கிரிக்கெட் உலகில் தனது 10வது வயதில் காலடிவைத்தார். அவருக்கு கிரிக்கட்டில் மிகுந்த ஆர்வம் இருப்பினும்

# திறமைக்கு பரிசு

அதற்கான உபகரணங்களைப் பெறவசதியற்று இருந்தார்.


இக்காலகட்டத்தில் தனது சகோதரனான யுசுப்பதானுடன் ஜ உம்மா சந்தைக்கு சென்றார். அங்கு தெருவில் எறியப்பட்ட கிழிந்த கால்காப்பு துடுப்பாட்ட மட்டை, கையுறை என்பவற்றைக் கண்டார். அதனை விளையாட்டாக எடுத்து வந்து தாயிடம் கொடுத்து சீர்செய்தார்.

இவற்றைப் பிரயோசனப்படுத்தி வெளியிடங்களில் சிறு சிறு போட்டிகளில் விளையாடினார் அந்தவகையில் அவர் பரோட்டா அணியில் இணைந்து கொள்ளும் அதிஸ்டம் கிடைத்தது. எனினும் பயிற்சிகளுக்கு சென்று வர பஸ் கட்டணங்களுக்கும் வழியின்றியிருந்த நிலையில் சில நண்பர்கள் அவருக்கு உதவி செய்தனர். இதனைத் தொடர்ந்து அவர் 15 வயதுப் பிரிவு தேசிய அணியில் இடம் பிடித்தார். மற்றும் அவரின் திறமைக்காக வராதரா கழக பயிற்றுவிப்பாளர் வழங்கிய 04 ஆயிரம் ரூபா பரிசும் அவரது உறவினரும் சகோதரனும் அளித்த உபகரணங்களையும் கொண்டு வளர்ச்சி கண்டு இந்திய ஏ அணியில் இடம்பிடித்தார்.

2003 ஆம் ஆண்டு நவம்பர் நான்காம் நாள் அவரது கிரிக்கெட் வாழ்வில் முக்கிய திருப்புமுனை ஏற்பட்டது.

19 வயதுப் பிரிவினர் பங்குகொண்ட ஆசிய கிண்ணத்தில் பங்களா தேஷ்க்கு எதிரான போட்டியில் பதான் பந்து வீச்சில் ஹாட்ரிக் சாதனை படைத்தார். அத்துடன் 9 விக்கட்டுக்களையும் வீழ்த்தினார். அப்போட்டியில் இந்திய ஏ அணி 189 ஓட்டங்களைப்பெற்று பங்களாதேஷ் அணியை வென்றது. பதான் 7.5 ஓவர் பந்து வீசி 16 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 9 விக்கட்டுகளை வீழ்த்தினார். இதில் 3 ஓவர் ஓட்டமற்றவையாக இருந்தது.

இது சர்வதேச போட்டிகளில் நடக்காத ஒன்று. 19 வயது பதான் மூன்று முறை ஹாட்ரிக் சாதனை நிகழ்த்தியுள்ளார். இந்தவகையில் துடுப்பாட்ட வரிசையில் ராகுல் ராவிட் திறமை காட்டியிருக்கும் அதே வேளை இளம் புயல் இர்பான் பதானும் வளர்ந்துவரும் சிறந்த இடது கை வேகப் பந்து வீச்சாளர் என்ற பெருமையை பெறுகிறார்.




## நாவடக்கம் நன்மை பயக்கும்



ஒரு மனிதன் சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது. அதில் ஒரு சில பிரச்சினைகளை வலிந்து இழுத்துக் கொள்கின்றான். அதாவது தன்னுடைய வாயால் பிரச்சினைகளை உருவாக்கி அதனால் மனச் சஞ்சலத்திற்கு ஆளாகின்ற நிலை எமது சமூகத்தில் பல உண்டு.

இவ்வாறான தேவையற்ற வார்த்தைகள், விவாதங்கள், அபிப் பிராயங்களினால் நாமே பிரச்சினைகளை உருவாக்கிக் கொள்கிறோம். இவற்றில் இருந்து விடுபட வேண்டுமானால் நமது நாவை அடக்க வேண்டும். நாவை அடக்குவதனால் நாம் பிரச்சினைகளில் இருந்து விடுபடலாம் அல்லது பிரச்சினைகளை வலிய இழுப்பதை தவிர்த்துக் கொள்ளலாம். 'நாம் பேசிய சொற்கள் எமக்கு எஜமான்' பேசாத சொற்களுக்கு நாம் எஜமான் எவ்வாறான இக்கட்டான நிலையிலும் உணர்ச்சி வசப்பட்டு, கோபாவேசம் கொண்டு வர்த்தைகளைக் கொட்டிவிடக்கூடாது. அவசரப்பட்டு நாம் கொட்டும் வார்த்தைகள் இன்னும் பல பிரச்சினைகளுக்கு எம்மை ஆளாக்கிவிடும். எனவே, பேசவேண்டிய இடத்தில் பேச வேண்டும். இடமறிந்து, தருணமறிந்து பேசவேண்டும். பேசுகிற வார்த்தை எமது நாவின் அசைவினால் வெறும் போலியாக வரக் கூடாது. உள்ளத்திலிருந்து கருத்துக் குவியல்களாக வரவேண்டும். அதுவே ஆளுமையை, நிறைவை வெளிப்படுத்தும். இவ்வாறு தேவையற்ற வார்த்தைகளாலும், அபிப் பிராயங்களாலும் ஒரு அலுவலகத்திலோ, குடும்பத்திலோ பிரச்சினைகள் ஏற்பட்டு மனக்கஷ்டத்துக்கு ஆளாக வேண்டி ஏற்படுகின்றது. ஒருவர் உங்களுடன் கதைக்கின்ற போது பிறரைப்பற்றிக் குறை கூறுவாராயின் பிறரிடம் அவர் உங்களைப்பற்றிக் குறை கூறுவர் என்பது உண்மையே. எனவே இவ்வாறானவர்களிடம் நீங்கள் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும். பொழுதுபோகவில்லை என்பதற்காகக் கூட சிலர், சிலரின் குடும்பத்தின் பிரச்சினைகளையும், தனிப்பட்ட நபரின் பிரச்சினைகளையும் எடுத்து விரிவாக அலசி ஆராய்வார்கள். இவ்வாறு செய்பவர்களுக்கு இதனால் ஏதும் நன்மைகள் கிட்டப் போவதில்லை. எனவே இவ்வாறான விவாதங்களால் பிறருடைய மனதை புண்படுத்துவதோடு அவர்களை எமக்கு எதிரானவர்களாகவும் மாற்றிவிடுகின்றோம். எனவே இவ்வாறான பிரச்சினைகளை தவிர்த் தல் வேண்டும் அல்லவா?

நாம் ஓய்வாக வீடுகளில் இருக்கின்ற போது அயல் வீட்டாருடன் பிரயோசனமற்ற கதைகளில் ஈடுபட்டு அயலவர்களுடன் பகைத்தும் கொள்வோம். எமது வாழ்க்கையில் எமது பாதுகாப்புக்கும், துணைக்கும் உறுதுணையாக இருப்பவர்கள் அயலவர்கள். தேவையற்ற வார்த்தைப் பிரயோகத்தால் அவர்களைக்கூட நாம் பகைத்துக் கொள்கின்றோம். இந்தத் தேவையற்ற வார்த்தைகள் மகிழ்ச்சியின் எதிரி. எனவே எமது நாவை நாம் அடக்க வேண்டும். இல்லையேல் மனச் சஞ்சலங்களால் நாம் அவதியுறுவோம்.

அடுத்து எமது இளம் சமூகத்தினரான, எதிர்கால தலைவர்களான எமது பிள்ளைகளிடம் இந்த நாவடக்காமை பழக்கம் தொற்றிக் கொண்டு அவர்களின் வாழ்வையும் சீரழிக்கும். இளமையில் இருந்தே இவர்களிடம் இப்பழக்கம் வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். அது ஒவ்வொரு பெற்றோர்களின் கடமையாகும்.

எமது குழந்தைகள் கனிவான பண்பான வார்த்தைகள பேசவேண்டுமாயின் நாம் அவ்வாறு நடந்து கொள்ள வேண்டும். எமது பழக்க வழக்கங்களையே குழந்தைகளும் பின்பற்றுவார்கள். எனவே எமது பண்பான வார்த்தைகள் அவர்களின் மனதில் பசுமரத்தாணி போல் பதியபடும். இதுவே பண்பற்ற வார்த்தையானால் அவர்களின் நிலையை யோசித்துப்பாருங்கள். நாவை அடக்க முயற்சி செய்யுங்கள். "பெருமையைகாக்க விரும்பின் நா காக்க"

**அ. பிரகாஷ்**

## எதில் – என்ன ஊட்டச் சத்து?

நாம் உணவுக்கு உபயோகிக்கும் பொருட்களில் எதில் என்ன ஊட்டச்சத்து உள்ளது என்பதையும் நாம் தெரிந்துகொள்ளலாமே!

நம் உணவில் முக்கியமானவை அரிசியும் கோதுமையும், உலக மக்களில் பாதிப்பேர்களுடைய உணவு அரிசியே-பொதுவாக, ஆசியாவாசிகளுக்கு. மற்றவர்களுக்குக் கோதுமை! அரிசியில் புரதச் சத்து மிகவும் குறைவு- வெறும் ஏழு வீதம்தான். கொழுப்பும் குறைவு, உயிர்ச்சத்து ஏ இல்லவே இல்லை. சுண்ணாம்புச் சத்தும் கொஞ்சமே. பொஸ்பரஸ் சிறிது அதிகம். இரும்புச் சத்தும் குறைவு உயிர்ச் சத்து சி யும் கிடையாது. கைக்குத்தல் அரிசியில் தான் உயிர்ச் சத்துக்கள் ஏ,பி உள்ளன.

எனவே, அரிசியைப் பிரதம உணவாகக் கொண்டிருக்கிற நமக்குத் தேவையான பிற சத்துக்களை வேறு பொருட்களிடமிருந்தே பெற்றாக வேண்டும். இதற்கு எந்தப் பொருளில் எந்த ஊட்டச்சத்து உள்ளது என அறிந்து அவற்றையும் நமது அன்றாட உணவில் சேர்க்க வேண்டும்.

பால், தயிர், மோர், பாலாடை முதலியவற்றில் புரதச் சத்துக்களும், எண்ணெய் விதைகள் கொட்டைகளில் கொழுப்புச் சத்துக்களும் உள்ளன, பச்சைக் கீரைகளிலும் உடைத்த பருப்புகளிலும் உயிர்ச்சத்து 'சி' உண்டு.

பருப்பு வகைகளில் புரதச்சத்துக்கள் அதிகமாக உள்ளன. புரதச்சத்தை மாப்பொருட்களிலிருந்தும் அதிகமாகப் பெறலாம். பருப்புகளோடு பால், தயிர், கீரை வகைகளையும் சேர்த்துக் கொள்வது நல்லது. பருப்பு வகைகளில் இரும்புச் சத்தும் அதிகம், மற்றும் புரதம், சுண்ணாம்பு உயிர்ச்சத்து ஏ.பி. முதலியவைகளும் இருக்கின்றன. என்றாலும் பால், முட்டை, இறைச்சி, மீன் ஆகியவற்றிலுள்ள அளவுக்கு புரதம் பருப்பு வகைகளில் இல்லை. ஆனால் உடலை வளர்க்கும் அம்சங்கள், தானியங்களில் இருப்பதை விட பருப்புகளிலேயே அதிகமாக உள்ளன. ஆனாலும் வளரும் குழந்தைகளுக்கு போதுமான ஊட்டம் அளிக்கும் அளவுக்கு இல்லை! இதை உங்கள் குழந்தைகளுக்கு வேறு பொருட்களிலிருந்து- குறிப்பாகச் சொன்னால், பால், தயிர், முட்டை, இறைச்சி, மீன், கீரை வகைகள் பழங்கள் ஆகியவற்றிலிருந்தே- கிடைக்கச் செய்ய வேண்டும்.

உணவு வேகும்போது அழிந்துவிடுகிற உயிர்ச்சத்து 'சி' யையும் பழவகைகளைச் சாப்பிட்டு ஈடுசெய்யலாம். நெல்லிக்காயில் உயிர்ச்சத்து 'சி' அதிகம் உண்டு, கோவம் பழத்திலும், மந்தத்தோலுள்ள ஒரேஞ்சுகளிலும் அது உள்ளது. மாம் பழம், பப்பாளி, ஒரேஞ்சு, பலா முதலியவைகளில் உயிர்ச் சத்து 'ஏ'யும். மாம்பழம், அப்பிள், கோவா, பப்பாளி, கொய்யா ஆகியவைகளில் இரும்புச்சத்தும் உள்ளன.

## போண்டா




**தேவையான பொருட்கள்:-**

| | |
|---|---|
| கடலை மா | - 1/4 கிலோ |
| அரிசி மா | - 1/2 பேணி |
| வெங்காயம் | - 1 பேணி |
| பச்சைமிளகாய் | - 3 (பொடியாக நறுக்கியது) |
| கரட் | - 1/2 பேணி |
| பீன்ஸ் | - 1/2 பேணி |
| முட்டைக் கோஸ் | - 1/2 பேணி |
| கறிவேப்பிலை | - சிறிதளவு |
| கொத்தமல்லி தழை | - சிறிதளவு (பொடியாக நறுக்கியது) |
| கேசரிப்பவுடர் | - 2கரண்டி |
| சீரகம் | - 1கரண்டி |
| பெருங்காயம் | - 1/4கரண்டி |
| எண்ணெய் | - 1/2லீட்டர் |
| உப்பு | - தேவையான அளவு |

**செய்முறை:**

01. கடலை மாவையும், அரிசி மாவையும் சிறிதளவு தண்ணீர் விட்டு கெட்டியாகப் பிசைந்து கொள்ளவும்.
02. இதில் நறுக்கிய காய்கறிகள், பச்சை மிளகாய், கொத்தமல்லித் தழை, பெருங்காயம், கேசரிப் பவுடர், சீரகம், உப்பு, ஆகியவற்றை சேர்த்து நன்றாகக் கலக்கவும்.
03. தாச்சியில் எண்ணெய் விட்டு, காய்ந்ததும் மாவை உருண்டையாக எடுத்துப் போடவும்.
04. போண்டா பொன்னிறமாக வெந்ததும் எடுத்து வடிதட்டில் இட்டு எண்ணெய் வடிந்ததும் சூடாகப் பரிமாறவும்.

**குறிப்பு:-**

01. மாவைக் கலந்தவுடன் போண்டா இட வேண்டும். அப்போதுதான் போண்டா எண்ணெய் குடிக்காது.
02. எண்ணெய் சரியாகச் சூடாகாமல் போண்டா போட்டாலும் எண்ணெய் குடிக்கும்.
03. போண்டாவுக்கு தொட்டுக்கொள்ள தேங்காய் சட்னியோ, மிளகாய் சட்னியோ, வெங்காய சட்னியோ செய்தால் சுவையாக இருக்கும்.

## இப்படிச் செய்யலாம்...

*வீட்டில் எறும்புகள் கடித்துவிட்டால் உடனே அந்த இடத்தில் உப்புக் கலந்த தண்ணீரை தடவ வேண்டும். இப்படிச் செய்தால் எறும்பு கடித்த வலி உடனே போய்விடும்!*

* * *

*கூட்டோ, பொரியலோ, கறியோ, காய்கறிகளைச் சமைத்த பிறகு, அவைகளின் மேல் பழுத்த தக்காளிப் பழங்களை நறுக்கிப் போடவேண்டும். போட்டால், பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கும். நல்ல சத்தும் கிடைக்கும்.*

* * *

*பெண்கள் எதையாவது கையால் தைக்கும் போதோ பின்னும் போதோ மடியில் ஒரு சிறிய தலையணையைப் வைத்துக்கொள்ள வேண்டும். அப்போது கைகளை ஊன்றிக் கொண்டு தைக்கலாம். கை வலிக்காது.*

* * *

*கோழி முட்டைகளை அதிக நேரம் வேகவைக்கக் கூடாது. கோழி முட்டைகளை அதிக நேரம் வேகவைத்தால் தோலைச் சரியாக உரிக்க முடியாது வராது. முட்டைகளை வேக வைக்கும் போது தண்ணீரில் கொஞ்சம் உப்பைப் போட்டு விட்டால் முட்டைகள் சுலபமாக உரிக்க வரும்!*

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத் திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்—19

பெயர்:..................................................

முகவரி:...............................................

..................................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# எங்கட... ஒவ்வொரு வளர்ச்சியும் — எங்களுக்கான அடித்தளம் பாருங்கோ...!

வணக்கம் எல்லோருக்கும்! என்ன மாதிரி எல்லோரின்ர பாடுகளும் போகுது? என்ன உங்களுக்கும் என்ரை நிலைமைதானோ? இல்லாட்டி நீங்கள் பெரிசா அதுபற்றி ஒண்டும் யோசிக்கேல்லையோ? சே! வேட்டி கட்டவே வெட்கமா இருக்கிது பாருங்கோ! அதுக்காக சேலை கட்டத்தான் லாயக்கு எண்டெல்லாம் இனி மேல் காலத்தில எல்லாம் சொல்லேலாது. ஏனெண்டால் அதுக்கெல்லாம் ஒரு வீரம் வேணும் பாருங்கோ. எனக்கொரே குழப்பமாப் போயிட்டிது. ஒரு பக்கத்தால தமிழினத்தான் எண்டு யோசிச்சுப் பார்த்தால் பேய்ப் பெருமையா இருந்தாலும், ஆண்வர்க்கம் எண்டு வைச்சு யோசிச்சால்.... ஐயோ வெளியால தலை காட்டவே வெட்கமா இருக்குது. அவனவன் பெரிய கிரெய்ன் பாவிச்சுத் தூக்கிற பெரிய பெரிய அண்டா குண்டா ஆயுதங்களையெல்லாம், எங்கட பொம்பிளைப் பிள்ளையள் சும்மா அலாக்காத் தூக்கிக்கொண்டு திரியுதுகள். மனுசருக்குப் பார்க்கவே முதுகுக்குள்ளை நோகுது. பொம்பிளைப் பிள்ளையள் இப்பிடியிருக்க எங்கட ஆம்பிளைச்சிங்கங்கள் என்ன செய்யின மெண்டு நினைக்கிறீங்கள்? அவையள் அஞ்சு ரூபாவுக்கு பலூன் சுட்டுக் கொண்டிருக்கினம். ஐயோ இந்த பெடியலின்ட அவல நிலையை, என் னெண்டுதான் வெட்கத்தைவிட்டு நான் வெளியால சொல்லிறது? உங்களுக்கு நான் விலாவாரியாச் சொல்லோணும் எண்டால், "தமிழீழ மகளிர் தினம்" பற்றி முதல்லையிருந்தே தொடங்கோணும்.

அன்புத்தொல்லை எண்டு கேள்விப்பட்டிருப்பியள். அதுதான் பாருங்கோ, எங்கட காவல்துறை செய்யிறது 'அப்பு! வீதியைக்கடக்கப் போறீங்களோ?' 'சைக்கிள் விடப் போறீங்களோ? விடுங்கோ நான் விடிறன்' 'கவனமாப்பார்த்துப்போங்கோ ஏதாவது தேவையெண்டால் சொல்லுங்கோ!' எண்டு ஒரே அன்புத் தொல்லை. கொஞ்சம் விட்டிருந்தால், பல்லக்கில தூக்கிக் கொண்டு திருஞ்சிருப்பினம் என்னை. இது ஒரு சந்தோசமான தொந்தரவு பாருங்கோ! இதை வாசிக்கிற ஆக்களில ஆராவது தொலைக்காட்சி நாடகங்கள் எடுக்கக்கூடிய திறமையளோட இருந்தீங்கள் எண்டால், கட்டாயம் எங்கட காவல்துறையைப் பற்றியும் எடுக்கோணும். ஏனெண்டு சொன்னால் இஞ்சை பார்க்கக்கிடைக்கிற தமிழகப் படங்களில எல்லாம் லஞ்சத்துக்குக் காக்கா பிடிக்கிற, பொலிஸ்காரர் வருவினம். ஹீரோவாவாற ஒருத்தர் மட்டும் பொலிஸ் துறை முழுக்கலும் இருக்கக்கூடிய ஒரேயொரு நல்லவரா இருப்பர், 50,60 பேரைத்தனிய நிண்டு விளாசித்தள்ளுவார், கடமை கண்ணியத்தைப் பற்றிக் கட்டுரை வாசிப்பார்.எனக்குத் தெரிய 1935 ஆம் ஆண்டில இருந்து உந்த ஹீரோயிசம்தான் படங்களில வளர்த்தெடுக்கப்பட்டு வருகுது. ஆனால் நிஜ வாழ்க்கையில அப்படி இல்லை. சனத்தின்ர ஆதரவோட சமுதாய நல்லொழுக்கத்துக்காக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற சட்டங்களைக் காப்பாற்றிற சேவையாளர்கள் அவையள். படங்களில வ்றற மாதிரி அவையளால சாகசம் எல்லாம் செய்யேலாது. அவையளின்ர பிஸ்ரலுக்குள்ள 1450 குண்டுகள் எல்லாம் போடேலாது! காவல்துறை சொல்லிற சட்ட நடைமுறையளைப்பற்றி ஒவ்வொரு சாமானியனும் அறிஞ்சுகொண்டு ஒத்தாசையா இருந்தால்தான் முழுமையா சமுதாயக்காவல் சாத்தியப்படும். அது பெரும்பாலும் சாத்தியப் பட்டுக்கொண்டுதானிருக்கிது.




இருந்தாலும் நான் ஏன் சொல்லிறனெண்டால், சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமா காவல்துறைக்காரர் தங்கட கொட்டகைக்குள்ள விளங்கப்படுத்தியிருந்தவை. ஆனாலும் எங்கட ஆக்களுக்கிள்ளை எத்தின பேர் 'சிறுவர் மீதான பாலியல் துன்புறுத்தல்/ துஷ்பிரயோகம்' பற்றி சரியான பிரக்ஞையோட இருக்கினம்? எல்லாம் முடிஞ்சால் அதுக்கு ஏதோ இழவு மாதிரி 'கற்பழிப்பு' எண்டு சொல்லிறோம். ஆனால் அது தவிர்ந்த சீண்டல்களை எல்லாம் பெரிசா கணக்கில எடுக்கிறேல்லை. சிறிலங்கா இண்டைக்கு சிறுவர் பாலியல் வியாபாரத்தில உலகத்திலேயே இரண்டாவது இடத்தில இருக்கிது. சும்மா நாங்கள் சிங்களச் சனத்தைக் குறை சொல்லிக்கொண்டு இருக்கக்கூடாது. எங்கட கலாசாரப் பண்பாட்டுக் கட்டுக்கோப்புகள் இந்த விசயத்தில ஓரளவு காப்புத்தந்தாலும், அது ஒண்டும் மாறாத இயற்கை விதியில்லை. எங்களுக்குள்ள தொடர்ந்தும் ஒரு விழிப்புணர்வு இருக்கோணும்.

இதுகளைப் பற்றி ஏன் நான் கனக்கச் சொல்லிறன் எண்டால் உப்பிடித்தான் 12 வயசில பாதிக்கப்பட்ட பிள்ளை ஒண்டை எனக்குத் தெரியும். தனக்கு என்ன நடந்தது எண்டு தெரியாத வயசில நடந்தது களைப் பற்றி, கொஞ்சம் அறிவு வரவர யோசிச்சு சரியா உடைஞ்சு போட்டிது அந்தப் பிள்ளை. நல்லாப்படிக்கக் கூடின பிள்ளை யோசிச்சு படிப்பிலையும் வடிவாக் கவனம் செலுத்தேலாமல் போயிட்டுது. உந்தச் சனியன் பிடிச்ச தொடர் நாடகங்களைப்பார்த்திட்டு அது நினைச்சிருக்கிது, தானெல்லாம் வாழத்தகுதி இல்லாதவள் எண்டு. எனக்கு ஆளின்ர போக்கில சந்தேகம் வந்து கதைச்சுப் பார்த்த நேரம் தான் கனவிசயம் வெளிவந்திச்சு. கடைசி மட்டும் அந்த மிருகத்தை மாத்திரம் ஆரெண்டு சொல்லேல்லை. நான் போய்ப் பிரச்சினை எடுத்தால் தன்ர குடும்பமானம்தான் போகும் எண்டு மறைச்சிட்டிது பாருங்கோ. தலை குனியவேண்டியவனுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது எங்கட வரட்டுத்தனமான பார்வைதான். அந்தப் பிள்ளை பேந்து தன்ர முடிவை மாத்தி தான் வாழத் தகுதியானவள். தலை குனியத் தேவையில்லை எண்டு கலியாணம் செய்திட்டிது. ஆனா எல்லோரும் இந்த விசயத்தைப் பக்குவமா அணுகிறேலை 'அவள் ஆடாமல் இருந்திருந்தால் ஆம்பிளையள் ஏன் தவறினம்?' எண்டு சனம் ஏதாவது சொல்லும். 12 வயசில ஆட்டமெல்லாம் போடேலாது. அது அந்த வயசுக்கே உரிய 'துள்ளித் திரியும் கிள்ளைப்பருவம்!'


அடுத்ததாப்பாருங்கோ! மருத்துவப்பிரிவு. அவையின்ர சட்ட ரீதியான வளர்ச்சிப் பரிமாணங்களைப் பார்க்க, மனம் பூரிச்சுப் போச்சு. இந்த இருவது வருசகாலப் போராட்டத்தில நாங்கள் கொடுத்த விலையை ஓரளவு மட்டுப்படுத்தி வைச்சிருக்கிறோம் எண்டால், அதுக்குத் தகுந்த தருணம் பார்த்து தகுந்த நிலைக்கு இயக்கத்தை வளர்த்தெடுத்த தலைவரின்ர தீர்க்க தரிசனம்தான் காரணம். அவரைப் பற்றி எழுதிறதெண்டால் ஏரம்பு இல்லை எழுநூறு அம்பு வந்தாலும் எழுதி முடிக்கேலாது.அவர் வளர்த்தெடுத்த மருத்துவப் புலிகளின்ர சிறப்பைக் காண்ற நேரத்தில, எனக்குத் தெரிஞ்ச ஒரு சில MBBS காரரின்ர ஞாபகம் வருகுது. அந்த MBBSகள் கல்யாணம் செய்து போட்டு வீட்டோட இருந்து தங்கட பிள்ளையளுக்கு a,b,c,d சொல்லிக் குடுக்கினம். அந்தப்பிள்ளையளுக்கு ஏதாவது காய்ச்சல், தடிமன் எண்டால் அய்யோ, குய்யோ எண்டு ஓடிப்போய் காப்புக்கயிறு கட்டிப்போட்டு, வேற டொக்ரரிட்டை பனடோல் வேண்டிக் கொண்டு வருவினம். சரி அதை விடுங்கோ. அந்தப் பிள்ளையள் ஒவ்வொண்டா விளங்கப்படுத்திச்சினம். மக்களை ஆழமா நேசிச்சு சேவையாற்றிற இந்த மருத்துவப் பிரிவின்ர வளர்ச்சியில தானே எத்தினையோ காயப்பட்ட போராளியளின்ரையும் மக்களின்ரையும் உயிர் தங்கியிருக்கு! அதை நேரே பார்க்கக்கிடைச்ச சந்தர்ப்பத்தை நினைச்சு எனக்கும் சந்தோசம். அப்பதான் அந்தப்பிள்ளை ஒண்டு 'அப்பு என்ன மாதிரி 'செக்-அப்' ஒண்டு செய்வோமோ?' எண்டு கேட்டிச்சிது. விசாரிச்சுப் பார்த்தால் மலேரியா, குருதியில் சீனி அளவு, இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு, கண்திறன் எண்டெல்லாம் பரிசோதிக்கலாம் எண்டு சொல்லிச்சினம். சரிசரி....வெளியால உதுகளைச் செய்யிறதெண்டால் மணித்தியாலக் கணக்கா கியூவில நிண்டு தூங்கோணும். இஞ்ச ஒரே கல்லில 10,15 மாங்காய் எண்டு அடிச்சிடுவோம் எண்ட நினைப்பில சம்மதிச்சன். சில நிமிசத்தில எல்லாப்பெறுபேறுகளும் வந்திச்சு. உங்களுக்கு எல்லாருக்கும் ஒரு சந்தோசமான செய்தி. ஏரம்பருக்கு ஒரு வியாதியும் இல்லையாம். ஆனா உந்த நாடித்துடிப்பு மட்டும் கொஞ்சம் கூடக்காட்டிச்சிது. "அது தங்கைச்சி! எனக்குச் சின்ன வயசில இருந்தே உந்த ஊசி, குளிசை எண்டால் கொஞ்சம் பயம். நீங்கள் இஞ்சை கனவயர் எல்லாம் ஓடியிருக்கிறீங்கள். அதுதான் கொஞ்சம் பரபரப்படைஞ்சிட்டன்" "இல்ல அது உங்களுக்குக் கொஞ்சம் கூடவா இருக்கலாம். நீங்கள் கொஞ்சம் ஆள் உடம்புதானே!" எனக்குக் கெட்ட கோபம் கோபமா வந்திச்சு. எட ஒரு மனுசன் வஞ்சகம் இல்லாமல் கொஞ்சம் வளர்ந்திருக்கிறான் எண்டால், அதை நினைச்சுச் சந்தோசப்படாமல், இப்பிடி வயிறெரியிறதோ! அதே ஆள் பேந்து 'அனெஸ்தேசியா' மயக்க மருந்தைப் பற்றிச் சொல்லேக்கிள்ளையும், அது ஆக்களின்ர உடம்பைப் பொறுத்து கூடக்குறையக் குடுக்கவேணும் எண்டு சொன்னா இது திட்டமிட்டு வேணுமெண்டு எனக்கெதிராச் சொல்லப்பட்ட கருத்து இது எண்டு கண்டிப்பா நான் சொல்லிறன். நீங்கள் என்ன நினைக்கிறீயள்? அவாவை நினைக்க நினைக்க என்ர மூக்கு நுனியில தீப்பொறி பறக்கிது. வங்காளவிரிகுடாவில மையம் கொள்ளிற புயல் சும்மா ஒருக்கால் எட்டிப்பார்த்தாலே, பறந்து போய்விடக்கூடிய அவாவை ஏதாவது பாரமான கல்லோட கயிற்றால கட்டியல்லோ நாங்கள் காப்பாத்தோணும். சே! உந்தக் கண்காட்சியில எத்தினை குண்டுமாமி, குண்டு மாமாக்கள் திரியினம். அவையளை எல்லாம் விட்டிட்டு, இவா ஏன் என்ர நாடித்துடிப்பு மேல உப்பிடி அபாண்டமா பழி சுமத்தவேணும். ஆனால், என்ர ஏ9 குந்து மேல சத்தியம் பண்ணிச்சொல்லிறன். ' 'என்ன! எங்கட தியாக தீபம் திலீபன் மருத்துவமனைதானே! காணாமலே விடப்போறன். அந்த ஒல்லிக்குச்சிக்கு நான் ஓடஓட காலுக்குள்ள வெடி கொளுத்திப்போடாட்டி, உந்த 'ஏ9' ஐயே நான் விட்டிட்டுப்போய் ஏ10,ஏ11 எங்கேயாவது ஒதுங்கிறன்.

என்ர கட்டுமஸ்துவிற்கு ஏற்பட்ட களங்கத்துக்குப் பிறகு, வாய்க்குள்ள முதல் சொன்ன சத்தியத்தை முணுமுணுத்தபடி, அப்பிடியே ஆயுதக்கண்காட்சிப்பக்கம் போனன். ஒவ்வொரு ஆயுதத்தின்ர உருப்படியையும் பார்க்க, ஏதோ 10-15 மல்லன்மார் வந்தால் தான் தூக்கலாம் போலக் கிடந்திச்சு. ஆனால், உந்த எங்கட சின்னனுகளெல்லே எல்லாம் தூக்கிப் பறிச்சுக்கொண்டு போய் வைச்சு அடிச்சு வெற்றியீட்டிதுகள். சும்மா சொல்லக்கூடாது. நல்லசனம். இந்த வாய்ப்பைப்பயன்படுத்தி, அறியோணும் உதுகளைப்பற்றி எண்டு, குறையாமல் வந்துகொண்டே இருந்திச்சினம். ஒவ்வொரு பகுதியில நிண்ட பெண்போராளியளும் கத்தரிக்காய் பொரிக்கிற மாதிரி, ஒரு உத்வேகத்தோட இடைவிடாமல் நல்லமாதிரி விளக்கம் கொடுத்துக்கொண்டே இருந்திச்சினம். சின்னாக்களெல்லாம் தங்களுக்குப் பள்ளிக்கூடத்தில சொல்லப்படிற மிதிவெடியளைப் பற்றி, நேரடியாகப் பார்த்துப் பல விசயங்களையும் அறிஞ்சு கொண்டினம்.

மற்றது ஆயுத உற்பத்தி பற்றியும் தெரிஞ்சு கொள்ளக்கூடியதா இருந்திச்சு. எங்கட சுய உற்பத்தியளைப் பார்க்கப் பெருமையா இருந்திச்சு. இதுகளை நாங்கள் வெறுமனே தேவையின் நிமித்தம் உருவாக்கப்பட்ட போர்க்காலக் கட்டுமானங்கள் எண்டு நினைக்கக்கூடாது. ஐரோப்பா, யப்பான், வடஅமெரிக்கா எண்டு நீங்கள் பார்த்தால் இந்த நாடுகளின்ர கைத்தொழில் விஞ்ஞான தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிகள் எல்லாத்துக்கும் முதன்மையான காரணம் இந்த நாடுகளின்ர போர் முஸ்தீபுகள் காரணமா ஏற்பட்ட உட்கட்டுமானம் தான்! அதால தான் யப்பான், யேர்மனி எல்லாம் எவ்வளவுதான் அழிக்கப்பட்டிருந்தாலும் கொஞ்சக்காலத்திலயே எழுந்து கொள்ள முடிஞ்சிது. ஏன் உவ்வளவுக்கு? இண்டைக்கு பூமியிலையும் அதுக்கு வெளியாலயும் எத்தினை றொக்கற்கள் சுத்தித் திரியிது. அதை ஏன் கண்டு பிடிக்க வெளிக்கிட்டவை? ஒளவையார் நிலவில சுடிற தோசை இடைக்கிடை பிஞ்சு பிஞ்சு வருகிது எண்டிறதை அவாவுக்குத் தெரியப் படுத்தவே, இல்லையே! யேர்மனியில எதிரியளுக்கெதிராகத் தயாரிக்கப்பட்டு வந்த V1,V2 என்ற இரகசியத் திட்டங்கள் தான், ரொக்கற் எண்டு ஒரு சாமானைப் பறக்க வைக்க முடியும் எண்டிறதை அறிய வைச்சிது. 2 ஆம் உலகயுத்தத்தில யேர்மன் தோல்வி அடைஞ்ச உடனே மிஞ்சின தரவுகள் எல்லாத்தையும் அமெரிக்காவும், சோவியத்தும் பிச்சுப்பிடிங்கிப் பங்கு போட்டதின்ர விளைவுதான் அந்த நாடுகளின்ர தொழில் நுட்ப வளர்ச்சிக்குக் காரணம். பனிப்போர்க் காலத்தில அது இன்னும் வளர்த்தெடுக்கக்கூடியதா இருந்திச்சு. ஏன் நான் உதுகளைச் சொல்லிறனெண்டால், இந்த வளர்ச்சியளின்ர நகர்வு, விடுதலை அடையிற நேரம் சிவில் சமூகத்துக்கு சரியான ஆதரவா இருக்கும் எண்டிறதை நீங்கள் விளங்கிக் கொள்ளோணும்.

இன்னுமொரு விசயம் அடுப்பில சோத்துக்கு உலை வைச்சால் தண்ணி கொதிச்ச உடன மேல இருக்கிற மூடி எழும்பி எழும்பி நீராவி வெளியேறும் அந்தச் சின்னச் சட்டிக்குள்ள இருந்த நீராவிச் சக்தி அநியாயமா வெளியேறுதே, உதைப் பிரயோசனமாய் பயன்படுத்தலாம் எண்டு, உலகம் பூராவும் பரவலா எல்லாரும் சிந்திச்சினம். இப்பிடி வீணாப்போற நீராவிச் சக்தியைப் பாவிச்சு புட்டு, இடியப்பம், இட்லி, மோதகம் எல்லாம் அவிக்கலாம். எண்டு எங்கட ஆக்கள் கனகாலத்துக்கு முன்னமே கண்டு பிடிச்சினம். வெள்ளைக்காரரும் இதைப்பற்றி யோசிச்சு நீராவி இயந்திரம் மூலம் வாகனங்கள் ஆலைகள் எண்டு பலதையும் இயக்கிச்சினம். காலப்போக்கில வேறவேற கண்டு பிடிப்புக் கள் மூலம் அதுஅதின்ர பெறுபயனை அதிகரிக்கிற மாதிரி மாற்றங்களைச் செய்திச்சினம். நீராவியில தொடங்கின ஆக்கள் இண்டைக்கு நீர் $H_2O$ ஐப் பிரிச்சு ஐதரசன் சக்தி மூலம் அதேவாகனங் கள், ஆலைகளை இயக்கப் போயினம் நாங்களும் மோதகத்தை மாத்தி கொழுக்கட்டை செய்தோம்... இல்லை கண்டு பிடிச்சோம் அதுவும் காணாமல் கொழுக்கட்டை க்கு தேங்காய்ச் சொட்டால பல்லு வைச்சோம். மற்றையபடி அதே இடியப்பம், இட்லி, புட்டுகள் தானே! இப்ப அந்தச் சாப் பாட்டு விசயத்தையே தொடர்ந்து "மெய்ன் ரெய்ன்" பண்ண முடியாமல், சீன உணவுவகை, இத்தாலி உணவு வகை, வட இந்தியா எண்டு ஏதேதோ என்ற பெயரில கவிழ்ந்திட்டோம்.

(22-ஆம் பக்கத் தொடர்ச்சி)




தமிழீழ மாவீரர் நாள் எதிர் வரும் நவம்பர் 27 இல் எழுச்சியுடன் நினைவு கூர ஏற்படாகி வருகின்றது. இந்த மண்ணின் அரசியல், சமூக, பொருண்மிய விடுதலைக்காக தம் இன்னுயிர்களை ஈந்த எங்கள் கண்மணிகளின் நினைவு நாளில் மாவீரர்களின் நினைவுகளைப் பேணபல்வேறு நினைவு கூரல் நிகழ்வுகள் நடைபெறுவது வழக்கம்.

# எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

தமிழீழ மாவீரர் நாளை ஒட்டி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு மரநடுகைத் திட்டங்கள், கடன் உதவித் திட்டங்கள், புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பித்தல் என பல்வேறு செயல் திட்டங்களை, மேற்கொள்வது வழக்கம். அந்த வகையில் இந்த வருடமும் பனை விதை நடுகைத்திட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது.

மாவீரர் நாளை ஒட்டி ஆரம்பிக்கப்படவுள்ள ஏனையதிட்டங்களில் பனைவிதை நடுகைத் திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் துணுக்காய் பிரதேச கமக்கார அமைப்புக்களின் துணையுடன் 10000 பனைவிதைகளை நாட்ட ஏற்பாடு செய்துள்ளது.

கோட்டை கட்டிய குளம், அம்பலப் பெருமாள் கிராமங்களை மையப்படுத்தி கோட்டை கட்டிய குளத்தில் 50 ஏக்கர் திட்டத்தில் இந்த நடுகை மேற்கொள்ளப்படவுள்ளது.

முதற் கட்டமாக சுமார் 5000 பனை விதைகள் கடந்த 6ஆம் திகதி நாட்டப்பட்டன.

சமீபகாலமாக தமிழ் பிரதேசத்தின் பனை அபிவிருத்திக்கு என இயங்கும் பனை அபிவிருத்திசபையானது பனை அபிவிருத்திக்கென போதிய செயற்பாடுகளை மேற் கொள்வதில்லை என்ற குற்றச்சாட்டுக்களின் மத்தியில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் இச் செயற்பாடு முக்கியத்துவம் பெறுகின்றது.

(சி-10552)

# பயிர் வளர்ச்சிக்கு ஏற்ற முக்கிய மூலகங்களின் பயன்பாடு -பொசுபரசு

**பொசுபரசு (P)**

நைதரசனுக்கடுத்த முக்கியம் வாய்ந்த பயிர்ப் போசணி பொசுபரசு ஆகும். பயிரிலுள்ள நைதரசனுள் ஏறக்குறைய பத்தில் ஒரு பங்கு பொசுபரசு உண்டு. நைதரசனைப் போலவே தனி மூலகமாக அதுவும் பயிருக்கு பயன்படுவதில்லை.

நிலத்தின் அமிலத்தாக்கத் திற்கேற்ப po4, Hpo4,H2,po4 அயன்களாகவே அது கிரகிக்கப்படும். கலங்களின் கருப்பொருளின் ஒரு கூறாகவே பொசுபரசு உள்ளது. இது இழைய விருத்தியாகும். மட்டம் வெடிப்பதற்கும், இது மிக அவசிய மானது. வேர்ப்பெருக்கத்தை தூண்டும் பயிரின் விளைவு காலத்தைச் சுருக்கும். நிலத்தில் அதிகமாக இருந்தாலும் நைதரசனைப் போல் கேடு விளைவிப்பதில்லை. (பொசுபரசு குறையுமானால் பயிர் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படும். வேர் விரிவு குன்றுவதோடு இலைத்தண்டின் விருத்தியும் மட்டங் கட்டுதலும் பாதிக்கப்படும். இலைகளும் சிறிது நரைநிற மாவதோடு இலைகளின் தாழ்களும் செஞ்நிற மடையும். ஒளித்தொகுப்பு நடைபெறுவதற்கு பொசுபரசு முக்கிய மாகும்.

**மண்ணின் பொசுபரசின் செயற்பாடு:-**

பொசுபரசு அப்பற்றைற் என்றும் ஒரே ஒரு கனிப்பொருளில் மாத்திர முண்டு. அதனாலேயே உலகெங்கனும் பொசுபரசு மண்ணிற் குறைவாகக் காணப்படுகிறது. மேலும் மண்ணிற்கிடப்படும் பொசுப்பேற்றிற் பெரும் பாலும் பயிருக்குப் பயன்படா வகையில் மண்ணில் மாறியிருக்கிறது.

மற்றைய மூலகங்களைப் போலல்லாது மண்ணிற் காணப்படுவதிலும் மிகக் குறைந்த அளவிலேயே பயிர் கிரகிக்க முடியும். நிலத்திற்கிடப்படும் பொசுப்பேற்றிற் பெரும்பாகம் பயிருக்கு பயன்படாவகையில் மண்ணில் மாறிவிடுகிறது. மற்றைய மூலகங்களைப் போலல்லாது மண்ணிற் காணப்படுவதிலும் மிகக்குறைந்த அளவையே பயிர் கிரகிக்க முடியும். நிலத்திற்கிடப்படும் நைதரசனில் 80 சதவீதத்திற்கும் அதிகமாக பயிர் கிரகிக்கும். 20 சதவீதத்திற்கு குறைவாகவே பொசுபரசு எடுக்கப்படுகிறது.

**பொற்றாசியம் (K)**

பொற்றாசியம் பயிரில் 0.5-2.5 சதவீதம் வரையுண்டு, பயிர்ப் போசணிகளுள் பொற்றாசியம் ஒரு தனித்தன்மை வாய்ந்தது. மற்றைய மூலகங்களைப்போல் கலன்களின் முதலுரு,கரு, கலச்சுவர் ஆகியவற்றின் அமைப்பிலும் அது பங்கு பற்றுவதாகத் தெரியவில்லை. ஆகவே பயிரின் எந்த உறுப்பின் சேர்வையிலும் அது காணப்படுவதில்லை.

இருந்தாலும் பயிரின் வளர்ச்சிக்கும், விருத்திக்கும் அத்தியாவசியமானதாகும். பொற்றாசியம் இல்லாவிட்டால் கலன் பிரிவு நடைபெற மாட்டாது. மேலும் வேர் விருத்தியை அதாவது பக்க வேர் விருத்தியைத் தூண்டுகிறது. பொற்றாசியக் குறைபாட்டிற்கேற்ப இலைகளின் நிறத்தில் மாறுபாடு ஏற்படும். இலையின் நிறம் நீலக்கலப்பு அடையும். பொற்றாசியக் குறைபாடு அதிகரிக்க அதிகரிக்க நிறமும் செங்கமிலம் கபிலமாக மாறி மஞ்சள் புள்ளிகள் தோன்றி முடிவில் இலையின் நுனியில் இருந்து கருகல் உண்டாகும். நைதரசுக் குறைவால் கருகல் இலையின் நடு நரம்பை அடுத்து உண்டாக பொற்றாசியக் குறைவால் கருகல் நுனியில் இருந்து இலையின் விளிம்போரமாக உண்டாகிறது. என்பதை கவனத்தில் கொள்ளுதல் அவசியமாகும்.

பொற்றாசியம் குறையும் போது ஒளித் தொகுப்பு பாதிக்கப்பட்டு காபோவைதரரோற்றின்அளவு குறைவதால் புரதச் சேர்க்கை குறைவுறும். சூரிய வெளிச்சம் பிரகாசமாய் உள்ள இடங்களில் நைதரசன் கூடிய அளவு தேவைப்படும். அதற்கு மாறாக மப்பு மந்தாரமாய் உள்ள இடங்களில் பொற்றாசியம் கூடுதலாக இருக்க வேண்டும்.

**மண்ணில் பொற்றாசியத்தின் செயற்பாடு:-**

மண் வகைகளிற் பொற்றாசியத்தின் செயற்பாடு பெரிதும் வித்தியாசப்படும். மணல் சார்ந்த இடங்களில் குறைந்தும் களி சார்ந்த இடங்களில் கூடியும் காணப்படும்.

எனவே இந்த மூன்று முக்கிய மூலகங்களும் பயிருக்கு முக்கிய மானவையாகும்.

**சிவகமலா**

(21 பக்கத் தொடர்ச்சி)

ஆனாலும் உந்த ஆயுத உற்பத்தி எண்டிறது சுய சார்பு பொருளாதாரத்திற்கான ஒரு மகிழ்ச்சி தரக்கூடிய உட்கட்டுமானம் எ்ண்டிறதை நீங்கள் கட்டாயம் விளங்கிக் கொள்ளோணும். இதேமாதிரி ஆயுதப் போராட்டத்தோட நேரடியாக சம்பந்தப்படாத அத்திவாரங்களையும் ஒவ்வொரு தமிழ் குடிமகனும்/ மகளும் இனங்கண்டு வளர்த் தெடுக்கோணும். இண்டைக்கு போராட்ட வெற்றியளுக்குக் காரணமாக இருக்கிற இதுகளெல்லாம் நாடெண்டு நாளைக்கு வந்தவுடன சரியா பிரயோசனப்படும்.

மற்றது தாக்குதல் வியூகங்களைப் பற்றி விளங்கப்படுத்தின இடத்தில பார்வையாளர்களுக்கு மத்தியில ஒரு யப்பான் முகமும் தெரிஞ்சுது. கணநேரமா ஆவலாப் பார்த்துக்கொண்டுநிண்ட அவா "எங்கே? கிளிநொச்சி...?' எண்டு தனக்கு தெரிஞ்ச தமிழிழ கேட்டா "No இத்தாலி! These Tow Major Battles Were Carried Out by a Very Small Amount of our women -fighters" எண்டு பெருமையோட சொன்னன். "Wow! How morvellous!!" எண்டு தன்ற முக குறிப்பாலேயே பாராட்டுக்களை தெரிவிச்ச அவா, விளக்கம் முடிய எனக்கும் அந்த போராளிப் பிள்ளைகளுக்கும் "நன்றி!" எண்டு தமிழிழ அழகாகச் சொன்னா. அந்தப் பிள்ளையும் நிண்டு கேட்ட அந்த அந்திய நாட்டுப் பெண்ணோட ஆர்வத்துக்கு நன்றி சொன்னா. ஒரு விசயம் எனக்கு விளங்கிச்சு பெரிய சயிசில ஏதாவது பொருள் கைக்கு வந்தாலேயொலிய மற்றம்படி எங்கட சனம் "நன்றி" சொல்லிறேயில்ல. ஆனால் உலகத்திலேயே பெரிய பழக்கவழக்க கொம்புகள் எண்டு உள்ளூர நினைக்கிறோம்.

சரி பிள்ளையல் பலூன் சுட்டுத்திரியிர பெடியலின்ற அவல நிலையாள ஏற்பட்ட வெக்க கேடால குந்துப் பக்கத்துக்கு கொஞ்ச நாள் போகமாட்டன்.


# 13ஆம் ஆண்டு நினைவலை



வீரச்சாவு 28-10-1991

வீரவேங்கை மாமன்னன்
துரை–சிறிசங்கர்

தலைவனின் பாதையிலே தளராது வீரமுடன்
போராடி வீரகாவியம் ஆனாய் - மாமன்னா
நீ என்றும் எமது மனங்களுக்குள் நிலைத்து இருப்பாய்

தகவல்
தந்தை – தாய், துரை – சோதி
ஜீவரட்ணம் குடும்பம்.
சிவலிங்கம் குடும்பம்.
சூரியகலா குடும்பம்.
மனோகரன் குடும்பம்.
த.முகவரி
நாச்சிக்குடா, முழங்காவில்.

சாதா குடும்பம்.
சிறிதரன் குடும்பம்.
பிரபாகரன் குடும்பம்.
சிறிகுமார் குடும்பம்.
லெனின் தம்பி.
நி.முகவரி
6/1 மீனாட்சியம்மன் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்

(சி-10269)

# 2000ஆம் ஆண்டு மிலேனிய யுகத்தில் இறபர் சீலில் ஜப்பான் அதிஉயர் மாற்றத்தை ஏற்படுத்தியது.

ஒரே தடவையில் இறபர் ஸ்டாமில் சிவப்பு,நீலம், கறுப்பு, ஊதா, பச்சை எனப் பல வர்ணங்களில் விரும்பிய வடிவங்களை அச்சாக்கிப் பெற அறிமுகப்படுத்தியது.

**இத்தரம் வாய்ந்த இறபர்சீல்களை இப்போது யாழ்ப்பாணத்திலும் செய்யலாம்!**

ஆச்சரியமா?

யாழ்நகரில்

- 10000 தடவைகளுக்கு மேல் பயன்படுத்தலாம்.
- பின் மை விட்டுப் பயன்படுத்தலாம்.
- தெளிவானது கவர்ச்சியானது சிக்கனமானது.
- நீரில் பாதிப்பு இல்லை.
- விரைவாக உலரக் கூடியது.
- எடுத்துச் செல்வது இலகுவானது.
- விரும்பிய வடிவங்களில் உங்கள் விடயத்தைப் பதிக்கமுடியும்.
- சோதிட முறைப்படி உங்களுக்குரிய வர்ணத்தில் பெற

இத் தரம் வாய்ந்த இறபர் சீல்களை கிளிநொச்சி பிள்ளையார் புத்தகசாலையிலும் ஓடர் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

## யசோ ஆட் கிறபிக்ஸ்


35, A, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-10269)

**பிறீ இங் இறபர் ஸ்டாம்**
**உலகத்தரம் வாய்ந்த ஜப்பானிய தயாரிப்பு**

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*



# பாவலன் பதில்கள்

*பாவலரே!*

*விடுதலைப் புலிகளின் மேற்குலக பயணம் சர்வதேச ரீதியில் திருப்பத்தை ஏற்படுத்துமா?*

*கோபிகா,*
*யாழ்ப்பாணம்.*

மேற்குலகம் நியாயபூர்வமாகச் சிந்திக்குமேயானால் திருப்பம் ஏற்படலாம். எல்லாம் அவரவர் விருப்பத்தைப் பொறுத்தே..

*பாவலா!*

*முகமாலை சோதனைச் சாவடி நேர அதிகரிப்பிற்கு இராணுவப் பற்றாக்குறை தடையாமே! இது பற்றி என்ன நினைக்கிறீர்?*

*எஸ்.நாமளா*
*உடையார் கட்டு*

ஏன் குடா நாட்டில் நிலை கொண்டிருக்கும் முப்பதாயிரம் வரையிலான படையினருக்கு என்ன வேலையாம்?

*பாவலனுக்கு!*

*குற்றம் செய்யும் முஸ்லிம்களை தட்டிக்கேட்கும் உரிமை சிறிலங்கா அரசிற்கு மட்டுமே உண்டு என்று கூறும் ஹக்கீமைப்பற்றி நீர்! என்ன நினைக்கிறீர்?*

*பிரியதர்சினி,*
*உருத்திரபுரம்.*

தொடர்ந்து பேரினவாதிகளின் கீழ் அரை குறை அமைச்சுக்களைப் பெற்று சுகபோக கொத்தடிமையாக வாழ விரும்புகிறார்கள் போலும்.

*அன்பின் ப்ர்வலரே!*

*சர்வதேச சமூகம் சமாதானத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கையில் எமது நாட்டின் பேரினவாத தீய சக்தி கள் அமைதி முயற்சியை கடுமையாக குழப்பி வருகிறார்களே இது பற்றி நீர் கூறுவது?*

*உ.ஜெயந்தினி*
*மருதங்கேணி.*

சமாதானவாதம் பேரினவாத நோயாளிக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும் ஒன்று என்பது உங்களுக்கு தெரியாதா. அது சரி சமாதானத்தை வலியுறுத்தும் சில பிரதான நாடுகள் சிறிலங்கா படைக்கு சகல வழிகளிலும் உதவி வருவதை நீங்கள் அவதானிக்கவில்லையா சர்வதேச வல்லாதிக்க சக்திகள் சமாதானத்தை வலியுறுத்தும் அதே வேளை யுத்தத்திற்கும் கைகொடுக்கும் அவ்வளவேதான்.

*பாவலரே!*

*நாளாந்த வாழ்க்கைச் செலவு அதிகரிப்புப் பற்றி கூறுங்களேன்?*

*லவன்*
*கைவேலி.*

செலவு அதிகரிக்கிறது, தரம் தாழ்கிறது. வாழ்க்கை தள்ளாடுகிறது.

*அன்பின் பாவலரே!*

*சந்திரிகாவின் சர்வசன வாக்கெடுப்புப்பற்றி உமது பார்வை?*

*தமிழ்விழி*
*வள்ளிபுனம்.*

சர்வதேசத்தின் சமாதான அழுத்தத்தை சமாளிக்க சர்வசன வாக்கெடுப்பை ஒரு திசைதிருப்பல் மற்றும் காலம் கடத்தும் நடவடிக்கையாகவே கையாள நினைக்கிறார் சந்திரிகா...

*அன்பின் பாவலரே!*

*வணக்கம்! இலங்கை அரசியல் குளத்தில் தற்போது நீச்சலடிப்பவர் யார்?*

*(மாட்டாமல் மழுப்பாமல் பதில் தாரும் பாவலர் இல்லையேல் உமது தலை வெடித்து சுக்குநூறாகிவிடும்)*

*அ.மதனகுமாரன்,*
*கிளிநொச்சி.*

இலங்கையில் அரசியல் குளமில்லை நண்பரே சாக்கடை தான் உள்ளது. இதில் எவரும் நீச்சலடிக்கவில்லை, மூழ்கிப்போயுள்ளார்கள்.

*பாவலரே!*

*சேது சமுத்திர திட்டத்திற்கு ரணில் பச்சைக் கொடி காட்டியுள்ளாரே?*

*சி.ராஜன்*
*வட்டக்கச்சி.*

அவர் 'பச்சை' கொடிக் கட்சிக்காரர் தானே...!

*அன்பின் பாவலர்!*

*உலகிலேயே உங்களை கவர்ந்தவர் யார்?*

*அ.குமணன்*
*வன்னேரி.*

அவர் எல்லா தமிழர்களையும் கவர்ந்த ஒருவரே...

*பாவலரே!*

*வேலை வெட்டி இல்லாமல் மற்றவர்களைப் பற்றி குறை கதைப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

*ச.குமார்*
*மாங்குளம்*

திண்ணைப் பேச்சு வீரர்கள் அல்லது அரசியல் வாதிகள் என நினைக்கிறேன்.

*பாவலரே வணக்கம்!*

*தங்களைக் கவர்ந்த ஹக் கூ கவிதை ஒன்று கூறுங்களேன்?*

*சசிக்குமார்,*
*விசுவமடு*

வயலில் நாற்று நடும் பெண்களின் பாடல்களில் மட்டும் சேறுபட்டிருக்கவில்லை...



# தெருப்பேச்சு

"எட பாத்தீனியம் செடியை அழிப்போம் எண்டு போட்டில எழுதியிருக்கு. போட்டுக்கு அடியிலயே பாத்தீனியம் முளைச்சிருக்கு, பூத்திருக்கு."

"அது... உங்களுக்கு பாத்தீனியம் எண்டா என்னண்டு காட்ட நட்டிருக்கு"

"அ.... ஓகோ... அது சரி உந்தச் செடிய கையாலும் புடுங்கி அழிக்கேலாதாமே."

"கிருமிநாசினிக்கு மழியாதாம்."

விசர்க்கதை பறையிறாய் வன்னிக்குள்ள உந்தச் செடியில்லையே...

"வன்னிக்குள்ள என்னண்டு வரும் இந்தச் செடி உண்மையில இந்தியனாமியோட வந்ததெண்டு சொன்னாப்பிறகு வன்னிக்க விடுவாங்களே வன்னி எண்டா... நெருப்பு."

"ரெண்டுபேரும் நிப்பாட்டுங்கோ கதைய உதென்ன செடி தெரியுமோ... உதுதான் ஒறிஜினல் கேரளத்ததுக்கஞ்சா... இஞ்ச இதைப் பாடம் பண்ணத்தெரியாது ஒருவருக்கும். அங்கே... உந்த முகாம்களைச் சுத்தித்தான் உதுகூட முளைக்கிது ஆ.... உண்மையாவோ.

* * *

வவுனியாவில்:-

"மச்சான் கிளிநொச்சியில பெட்டையளின்ர கண்காட்சி பாத்தனியே. ஆயுதஞ்செய்து காட்டினம் நீ சொல்லுறா மோட்டார் செல்லுகள் அடிக்கிறதெல்லாம் என்ன விளக்கமா சொல்லினம்."

"உதைவிடு, படகு கட்டுறதப் பாத்தியே கரும்புலியள் போற போட்டுமச்சான் அதுகளே செய்யிறதுதானாம். படகு கட்டுற பெட்டையளப் பாக்கேலா... சூ... என்ன புளுகிறனெண்டு பாக்கிறியோ...."

"சீ... புளுகில்ல உப்படி ராணுவ ரகசியங்களை வெளியிடுறதெண்டா இனி சண்டை வராதோ."


"நீ.. மடையா உதெல்லாம் செய்து காட்டிப்போட்டு கடைசியா ஒண்டு சொல்லுகினம் கவனிச்சனியே.... ங... உதெல்லாம் நாங்கள் முதல் பாவிச்ச ஆயுதங்கள், இப்ப பாவிக்கிறேல்ல".

"அப்ப இனி"

"அ.... விளங்குதே விளங்கினாச்சரி."

* * *

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -91



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள் -91**

........................................
........................................
........................................
........................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -90



**அ.யாழ்மதன்,**
**பிரதான வீதி**
**கிளிநொச்சி.**

### பரிசுக்குரிய வரிகள்

*மூதாட்டியே! நீர் கூறும் செய்தி புரிகிறது - இன்று*
*அலுமினியம், பிளாஸ்ரிக், பொலித்தீன் என மூழ்குவோரே!*
*எம் மண்ணின் வளத்தில் அடுக்கணி செய்து -அதில்*
*சமைத்துச் சுவைத்தால் எப்பண்டமும் சுவையுடன் சுத்தமே.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*காடு வாவென்பதால் நான் கலங்கவில்லை*
*வீடு போவென்பதால் நான் வெதும்பவில்லை*
*நாடு நமதாகும் நாள்வரை நானுழைப்பேன்*
*பாடுபட்டேனும் மண்மீட்க நானும் நிதி கொடுப்பேன்.*

செ.ந.தனேஸ்,
நிதித்துறை.

*மாதராய் பிறப்பதற்கே நல்ல*
*மாதவம் செய்ய வேண்டும் - இன்றோ*
*போரின் கொடுமையால் குடும்ப சுமையை*
*சிலுவையாக சுமக்க வேண்டியுள்ளதே.*

சு.செல்வி,
பரந்தன்.

*பொருட்களின் விலையோ மலையேற்றம்*
*மட்பாண்ட விலையோ ஏணியேற்றம் இன்றோ*
*ஏழை எம் வீட்டுப் பானையும் காலி,*
*நாம் வாழ்வதன் அர்த்தப் என்ன இந்த பூமியில்.*

ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*தான் பெற்றமகன் நாட்டுகாய் பெரும்பணியில்*
*அன்னையவள் வயிற்றுக்காய் கடும் உழைப்பில்*
*காலந்தான் கூடிவரும் அன்னையவள் துயர்துடைக்க*
*அது வரையில் அவள் துயர்துடைக்க அங்காடியோ....?*

நி.நிலக்சனா,
கிளிநொச்சி.

*உழைக்க வேண்டுமென சளைக்காது வந்த தாயே!*
*உங்கள் சுட்டு விரல் நீண்டு சுட்டும் பொருளெதுவோ?*
*சட்டிப் பானை யோடு சண்டை நிதம் செய்யும்*
*சண்டப்பிரசண்ட 'குடி' காரன் வாறானோ?*

வே.நிலாகி,
கண்டாவளை.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
















இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்--IV

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஐப்பசி-06 | 22-10-2004 | வெள்ளிக்கிழமை | ஓசை -247




## மட்டக்களப்பில் பல பிரதேசங்களில்

# கருணாவின் கட்சிப் பதிவினை ஆட்சேபித்து

# பெரும் கவனயீர்ப்புப் போராட்டங்கள்!

### பொதுமக்கள்,மாணவர் எனப் பலதரப்பினர் பங்கேற்பு

(மட்டக்களப்பு)

**கருணாவும் அவருடனான தேசவிரோத சக்திகளும் உருவாக்க முனையும் அரசியல் கட்சிப் பதிவினை ஆட்சேபித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பகுதிகளில் பல்வேறுபட்ட தரப்பு மக்கள் கவனயீர்ப்புப் போராட்டங்களையும் பேரணிகளையும் நடத்தியுள்ளனர். பல்கலைக்கழக மாணவர்களிலிருந்து பாடசாலை மாணவர்கள் வரையிலும் மற்றும் பொதுமக்களும் இப்போராட்டங்களில் ஈடுபட்டனர்.**

கல்வியற்கல்லூரி, கிழக்கு பல்கலைக் கழகம் ஆகியவற்றின் மாணவர்கள் நேற்று நண்பகல் நடாத்திய மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் "தமிழரே புலிகள், புலிகளே தமிழர்" என்றும் "விடுதலைப் புலிகளே தமிழர்களின் ஏக பிரதிநிதிகள்" என்றும், "தமிழர்களின் ஒரே தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனே" என்பது உட்பட, கருணாவிற்கு எதிரான ஏராளமான பதாதைகளும் கோசங்களும் எழுப்பப்பட்டன. "மட்டக்களப்பு மக்களினதும், ஒட்டுமொத்தத்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் விநியோகிக்கும் புலிகளை வசைபாடும் பிரசுரம்!

மட்டக்களப்பு நகரின் உயர்பாதுகாப்பு வலயத்தில் சீருடை தரித்த இராணுவத்தினர், விடுதலைப்புலிகளை வசைபாடும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துள்ளனர். இத்துண்டுப்பிரசுரங்கள் கருணாவின் பெயரில் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளையும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையையும் வசைபாடும் மேற்படி துண்டுப் பிரசுரங்களை நேற்று முன்தினம் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் இராணுவத்தினர் விநியோகித்தனர். அதேவேளை நகரின் வேறுசில பகுதிகளிலும் இதையொத்த சிறு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

## கிங்ஸ்லி இராசநாயகத்தின் கொலைக்குப் புலிகள் கண்டனம்

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கிங்ஸ்லி இராசநாயகம் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை விடுதலைப்புலிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல்துறை விடுத்துள்ள அறிக்கையில், இக்கொலைக்குத் தேசவிரோதிகளான கருணா கும்பலே பொறுப்பு என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அந்த அறிக்கை வரு

(iv ஆம் பக்கம் பார்க்க)

## போராட்டம் நடத்திய மாணவர் மீது அதிரடிப்படையினர் தாக்குதல்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஆரயம்பதிப் பிரதேச செயலகம் முன்பாக கருணா உள்ளிட்ட தேசவிரோத சக்திகள் உருவாக்க முனையும் அரசியற் கட்சியைப் பதிவு செய்வதை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் விசேட அதிரடிப் படையினரால் தாக்கப்பட்டனர்.

இது தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் நேற்று மாலை விடுதலைப்புலிகளினால் புகார் செய்யப்பட்டுள்ளது. கருணாவின் அரசியல் கட்சியைப் பதிவு செய்யக்கூடாது எனக்கோரி ஆரையம்பதிப் பிரதேச செயலகம் முன்பாக அப்பிரதேச மாணவர்கள் கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த மாணவர்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபடத் தயாரான போது, அருகிலுள்ள படைமுகாமிலிருந்து அங்கு விரைந்த விசேட அதிரடிப் படை

(iv ஆம் பக்கம் பார்க்க)

-புலிகளின் போக்குவரத்தில்-

## கட்டுப்பாடுகளை ஏற்படுத்த அரசாங்கம் தீர்மானம்

போர் நிறுத்த உடன்படிக்கையில் காணப்படும் விடுதலைப் புலிகளின் தரைவழிப் போக்குவரத்து மற்றும் உலங்குவானூர்திப் பாவனை என்பனவற்றில் சில கட்டுப்பாடுகளைக் கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தரைவழியாக வைத்திய சிகிச்சை போன்றவற்றுக்கு வரும் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் தமது அடையாளங்களை உறுதிப்படுத்தத் தவறுவதால், இது தொடர்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் போ.நி.க.குழு உபதலைவர் சந்திப்பு

போர் நிறுத்தக்கண்காணிப்பு குழுவின் உதவித்தலைவர் ஹாக்லண்ட் நேற்று சமாதானச் செயலக பணிப்பாளர் ஜயந்த தனபாலவைச் சந்தித்து உரையாடியுள்ளார். இதன்போது கொலைச் சம்பவங்கள் நிறுத்தப்படவேண்டும் என்பது உட்படப் பல விடயங்கள் இதன் போது பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உதவித் தலைவர் ஹாக்லன்டிடம் வினவிய போது,

(iv ஆம் பக்கம் பார்க்க)

## மகளிர் படையணி நன்றி தெரிவிப்பு

6.10.2004 - 10.10.2004 வரையான காலப்பகுதியில் கிளி.மத்திய மைதானத்தில் நடத்தப்பட்ட போரியல் வரலாற்றுக் கண்காட்சிக்குப் பெரும் ஆர்வமுடன் வருகை தந்து எமக்கு ஊக்கமும் வாழ்த்தும் தெரிவித்த மக்கள் அனைவருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் படையணி நன்றி தெரிவித்துள்ளது.

கண்காட்சியைப் பார்வையிடும் நேரம் மட்டுப்படுத்தப்பட்டமையால் தமது பிள்ளைகளின் ஆற்றல்களைத் தம்மால் முழுமையாகப் பார்வையிட முடியாமை குறித்தும், கண்காட்சி நாட்கள் இன்னும் நீடிக்கப்படாமை குறித்தும், அனைத்து

(iv ஆம் பக்கம் பார்க்க)

### இடமாற்றம்

புதுக்குடியிருப்பு கைவேலியில் இயங்கிவந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலக மக்கள் தொடர்பகம் நேற்றுமுதல் (21.10.2004) உடையார்கட்டு வள்ளிபுனம் இனிய வாழ்வு இல்லத்திற்கு முன்பாக இயங்குகின்றது என்பதை விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்தினர் அறியத் தந்துள்ளனர்.

## ஊழல் நிறைந்த நாடுகள் பட்டியலில் சிறிலங்காவிற்கு 67ஆவது இடம்

உலகில் ஊழல் நிறைந்த நாடுகளின் வரிசைப்படுத்தலில் இலங்கை 67 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. 146 நாடுகள் ஊழல் நிறைந்த நாடுகளாக இனம் காணப்பட்டு வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பட்டியலில் முதலிடத்தில் பங்களாதேசும் அதைத் தொடர்ந்து ஹெய்ட்டி நைஜீரியா மற்றும் மியன்மார் போன்ற நாடுகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. ஊழல் அற்ற நாடாகப் பின்லாந்து தெரிவு செய்யப்பட்டுள்ளது. (32)

-வல்வெட்டித்துறை மீன்பிடி இறங்குதுறை-

## படையினர் எதிர்ப்பையும் மீறி ஆழமாக்கும் பணியில் தொழிலாளர்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைப் பகுதியில் மீன்பிடி இறங்குதுறையினை ஆழப்படுத்தும் பணி தொடர்பில் அப்பகுதி மீனவ சங்கப் பிரதிநிதிகளிற்கும், அங்கு நிலைகொண்டுள்ள படையினருக்கும் இடையே தொடர்ந்து முறுகல் நிலை நீடித்து வருகின்றது. கனரக வாகனங்களைப் பயன்படுத்தி இறங்குதுறைகளை ஆழப்படுத்த அனுமதி வழங்க படைத்தரப்பு தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வருகின்றது

எனினும் நேற்றுக் காலை வல்வெட்டித்துறை மீனவசங்கம் கனரக வாகனங்கள் மூலம் இறங்குதுறையினை ஆழப்படுத்தும் பணியினை ஆரம்பித்துள்ளது. அவ்வேளையில் அதற்குப் படைத்தரப்பு ஆட்சேபனை தெரிவித்ததையடுத்து இரு தரப்பிற்குமிடையே பலத்த வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளது. எனினும்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## 2005 நவம்பர் சனாதிபதித் தேர்தலை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்

### ஐக்கிய தேசியக்கட்சி கோரிக்கை

அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் அடுத்த சனாதிபதித் தேர்தல் நடைபெறுவது உறுதிப்படுத்தப் பட வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது. இலங்கையின் அரசியலமைப்பின்படி ஒருவர் சனாதிபதியாக இரண்டு முறையே பதவியை வகிக்க முடியும். அந்த இரண்டுவருட காலம் முடிவடைந்த பின்னர் குறிப்பிட்ட பதவியில் இருந்தவர் விலகிச்செல்ல வேண்டியது அவசியமானதாகும்.

இந்த நிலையில் அந்த பதவிக்காலத்தை நீடிப்பதோ அல்லது மீண்டும் பதவிக்கு வர முயற்சிப்பதோ அரசியலமைப்புக்கு முரணான செயல் எனப் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல் பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார். அரசாங்கம் தேர்தலின் போது அடையாள அட்டையை அறிமுகப்படுத்தி சுமார் 38 இலட்சம் பேரின் வாக்குரிமைக்கு குந்தகம் விளைவிக்க எடுத்த முயற்சி எதிர்க்கட்சியின் தலையீட்டால் தடுக்கப்பட்டது. நாட்டின் இன்றைய நிலையில் அரசாங்கம் தமது வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு என்ன நிவாரணத்தை வழங்கப் போகிறது என ஜி.எல்பீரிஸ் கேள்வி எழுப்பினார். அதேநேரம் நாட்டின் மொத்தச் சனத்தொகையில் 5 வீதமான அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வை

(iv ஆம் பக்கம் பார்க்க)

# சாவு அறிவித்தல்

## சீனித்தம்பி–கற்பகம்



அன்புச்சோலை முதாளர் பேணலகத்தின் பராமரிப்பில் உள்ள கொக்குத்தொடுவாய் முல்லைத்தீவினைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற அமரர் ச.சீனித் தம்பி- அவர்களின் அன்புத்துணை வியாரும், மாவீரர் இதயன் அவர்களின் அன்புத் தாயாருமான சீனித்தம்பி கற்பகம் அவர்கள் 21.10.2004 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று சிவபதம் எய்திவிட்டார். அன்னாரின் தகனக்கிரியை 21.10.2004 வியாழன் மாலை 5.00மணிக்கு கனகபுரம் இந்து மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், போராளிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்
பணிப்பாளர்,
அன்புச்சோலைமுதாளர் பேணலகம்,
கனகபுரம், கிளிநொச்சி.

(சி 10584)

## நாகபூசனி அம்மன் திருமணசேவை

எமது திருமண சேவையின் மூலம் சீதனம் கொடுக்க வசதி இல்லாமல் திருமணம் செய்யா திருக்கும் பெண் கள், சீதனம் கொடுத்து திருமணம் செய்யக் கூடிய பெண்கள், சீதனத்தை எதிர்பாராமல் திருமணம் செய் யக்கூடிய ஆண்கள் மற்றும் சர்வதேச ரீதியில் வாழ்கின்ற ஆண், பெண் இரு பாலரின் ஜாதகங்களும் உள்ளன.

மற்றும் ஜாதகம், புகைப் படம் என்பவற்றுடன் நேரிலோ, அல்லது கடிதம் மூலமுமோ தொடர்புகொள்ள வும்.

NO.70
STATION R.D
VAIRAVAR PULIYAN KULAM,
VAVUNIYA
SRI LANKA.
T.P:- 077 6630207
024 2222301
FAX:- 024 2222150
E.mail:- SRI NAGAPUSANI AMMAN THIRUMANASAVAI @YAHOO.COM.

# காணவில்லை



முழுப்பெயர்:- விமலசூரியன் றஜீந்திரன்
விலாசம்:- வட்டுத் தெற்கு,
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.
யாழ்ப்பாணம்.
வயது:- 28

*13.10.04 அன்று உடையார் கட்டிலிருந்து கிளிநொச்சிக்கு வருகை தரும்போது காணாமற் போனார். கழுத்தில் ஒரு தங்கச் சங்கிலியும், பட்டர் கலர் ரீசேட்டும், கறுப்பு ஜீன்ஸ்சும் அணிந்திருந்தார். இவரைக் கண்டவர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.*

மோகன்,
1ஆம் பண்ணை,
வீட்டு இல.05
கனகபுரம்,
கிளிநொச்சி.
T.P -021-2225890
060-2213154

# தமிழீழ நுண்கலைக் கல்லூரி

**விஜயதசமி புதிய பிரிவுகள் ஆரம்பமும்,நாள் வகுப்புக்களும்**

*எதிர்வரும் 23.10.2004 புரட்டாதி மாதம் சனிக் கிழமை அன்று காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு நுண்கலைக்கல்லூரியிலும், மாலை 3.00 மணிக்கு முள்ளியவளை நுண்கலைக் கல்லூரியிலும் கீழ்வரும் கலைப்பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.*

**கலைப்பிரிவுகள**

| | | |
|---|---|---|
| வாய்ப்பட்டு | மிருதங்கம் | நடனம் |
| ஓவியம் | வயலின் | வீணை |
| ஓகன் | தபேலா | கிற்றார் |
| தற்காப்புக்கலை | அழகியல் | |

*நிர்வாகம்*
*தமிழீழ நுண்கலைக் கல்லூரி*

(சி.4699)

# பணிநிலை வெற்றிடம்

வன்னிப் பெருநிலப்பரப்பில் இயங்கிக் கொண்டிருக்கும் டா. பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் கடமைபுரிவதற்கு சுகாதாரத் தொண்டர்கள் ஆண், பெண் இரு பாலிடத்திலிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*கல்வித் தகைமை :– க. பொ. த. சாதாரணத்தில் கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் சித்தி.*

*வயதெல்லை:– 18–24 வருடங்கள்*

குறிப்பு:- ஏற்கனவே, முதலுதவி படித்தவர்கள், சுகாதார நிலையங்களில் உதவியாளராகக் கடமை புரிந்தவர்கள், சுகாதார வைத்திய அதிகாரியின் கீழ் தொண்டராகப் பணிபுரிந்தவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை' வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட தகைமையுடையவர்கள் 25-10-2004 அன்று காலை 10.00 மணிக்கு நேர்முகத் தேர்விற்கான சுயவிபரக் கோவையுடன் டா. பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை கிளிநொச்சிக்கு சமுகம் தரவும்.

தகவல் : **பணிப்பாளர்,**
டாக்டர்.பொன்னம்பலம்
ஞாபகார்த்த மருத்துவமனை,
கிளிநொச்சி.

(சி-10582)

# சுடர் ஒளி வண்ணச் சோலை



**(சுகுணா வண்ணச் சோலை)**

- சேட்டிங் , சூட்டிங், பட்டுச்சேலை, பட்டுவேட்டி, சாறிவகைகள், புடவை வகைகள்.
- அழகுசாதனப் பொருட்கள், வீட்டுத் தளபாடப் பொருட்கள்.
- கண்ணாடி பிறேமிங், பாடசாலை உபகரணப் பொருட்கள்.

அனைத்தையும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.

**தீபாவளித் திருநாளை முன்னிட்டு கொள்வனவு செய்யப்படும் பொருட்களிற்கு சிறந்த விலைக்கழிவு வழங்கப்படும்.**



உரிமையாளர்கள் த. சின்னையா
சி.சபேசன்

நீதிமன்று முன்பாக யாழ்சாலை - கிளிநொச்சி.
சில்வா வீதி, வட்டக்கச்சி.

(சி-10393)

# வீரவணக்கம்

## 04 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகளில்




தாயின் மடியில்
12
01
1982

தாயக மண்ணில்
22
10
-
2000

தமிழீழ காவல்துறை
**தலைமைக் காவலர் அன்ரனிஜெயந்தன்**
(யோசப் அன்ரனிஜெயந்தன்)
17 ஆம் கட்டை வள்ளிபுனம்,
புதுக்குடியிருப்பு.

கிளாலி எழுதுமட்டுவாள் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனானநேரடி மோதலின்போது 22.10.2000 அன்று வீரச்சாவடைந்தனர்.
இம்மாவீரர்களுக்கும் இந்நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும்எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



தாயின் மடியில்
14
06
1976

தாயக மண்ணில்
22
-
10
-
2000

தமிழீழ காவல்துறை
**உபபரிசோதகர் ஜெயக்காந்தன்**
(சிவலிங்கம் ஜெயக்காந்தன்)
செல்வபுரம், அச்சுவேலி,
யாழ்ப்பாணம்.

**"தமிழீழ காவல்துறையினர்"**

(சி5200)

# பின்தங்கிய பிரதேசங்களில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்

## பிரதியமைச்சர் சந்திரசேன தெரிவிப்பு

(கொழும்பு)

பின்தங்கிய பிரதேசங்களில் சேவையாற்றுகின்ற தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கல் தொடர்பான மகஜருக்கு அமைச்சரவை நேற்று முன்தினம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சனாதிபதி சந்திரிகா இம்மகஜரைச் சமர்ப்பித்துள்ளார். இதற்கமைய 2515 தொண்டர் ஆசிரியர்கள் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தொண்டர் ஆசிரியர்கள் தங்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு கோரிக் கடந்த காலங்களில் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

தொண்டர் ஆசிரியர்கள் மூன்று வருடங்கள் பாடசாலை ஒன்றில் தொடர்ச்சியாக சேவையாற்றியிருக்க வேண்டுமென சமூக நலன்புரி மகளிர் விவகாரப் பிரதியமைச்சர் சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறிப்பிட்ட பாடசாலையில் ஆசிரிய வெற்றிடங்கள் இருக்கவேண்டும். அவர்களுக்குப் போதிய தராதரங்கள் இருக்க வேண்டும் ஆசிரியர்களை நியமிப்பதற்கான விதிமுறைகளுக்கமைய தகுதியுடைய ஆசிரியர்களுக்கு நிரந்தரநியமனங்கள் வழங்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இத் தீர்மானம் பற்றி உண்ணாவிரதம் இருந்து வந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்பட்டவுடன் அவர்கள் ஒரு வாரகாலமாகக் கல்வியமைச்சுக்கு முன்பாக மேற்கொண்டுவந்த உண்ணாவிரதத்தை நேற்றுக் கைவிட்டுள்ளனர்.

# ஐ.தே.கட்சி பிழையான செய்திகளை ஊடகங்களுக்கு வழங்குகிறது

## அமைச்சர் மங்கள சமரவீர குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி ஊடகங்களுக்குப் பிழையான செய்திகளை வழங்கி அதன் குறைபாடுகளை மறைக்கப்பார்க்கின்றதென ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர குற்றஞ்சாட்டியுள்ளார்.

முன்னைய ஆட்சிக் காலத்தின்போது தவறுகளைச் செய்ததோடு சீரான முறையில் ஆட்சியை நடாத்தாததால் பெரும்பான்மையான மக்கள் இரண்டு வருடங்களுக்குள் ஐ.தே. கட்சி ஆட்சியை பதவியிலிருந்து அகற்றினர்.என அமைச்சர் செய்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது;

அடிப்படைக் காரணங்கள் எதுவுமின்றி தேவையற்ற குற்றச்சாட்டுகளை அரசாங்கத்தின் மீது சுமத்துவதால் மட்டும் ஐ.தே.கட்சி பொதுமக்களை அவ் தவறச் செய்ய இயலாதென அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மருத்துவ மாதுகளுக்கான பயிற்சிக்கு மூன்று பேர் தெரிவாகினர்

அண்மையில் நடைபெற்று முடிந்த மருத்துவ மாது நேர்முகப் பரீட்சையில் தேறியவர்களுக்கு பயிற்சி வகுப்புகள் வவுனியா பொதுத் தாதிய பயிற்சி மண்டபத்தில் நடைபெறுகின்றன. முதற்தொகுதியில் பயிற்சிக்கு அழைக்கப்பட்டவர்களில் சமூகமளிக்காதவர்களின் இடங்களுக்குப் பின்வருவோர் அழைக்கப்பட்டுகின்றனர். இவர்கள் உடனடியாக கிளிநொச்சி மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

செல்வி கந்தசாமி சுமித்தா- கிளிநொச்சி, செல்வி நல்லையா சிவரூபி- கிளிநொச்சி, செல்வி மரியரேமசூரியர் ஜெயசீலி-கிளிநொச்சி.

## கண்டெடுப்பு

யாழ்ப்பாணம்,பிறவுண் வீதி கந்தர் மடத்தைச் சேர்ந்த திருமதி கே. கேதீஸ் என்பருடைய 2004 ஆம் ஆண்டிற்குரிய வாகன அனுமதிப் பத்திரம், மற்றும் காப்புறுதிப் பத்திரம் என்பன கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தில்

# சாவடைந்த மூதாளருக்கு புலிகள் இறுதி அஞ்சலி

(அலுவலக செய்தியாளர்)

அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தின் பராமரிப்பில் இருந்து நேற்றுக் காலமாகிய மூதாளர் ஒருவரின் உடல் தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் உட்பட்டவர்களின் இறுதி வணக்கத்துடன் நேற்று அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

யுத்தத்தின் விளைவுகளால் பாதிக்கப்பட்டு உறவுகள் இன்றித் தவித்த முதியவர்களைப் பேணிப் பாதுகாத்துவரும் அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தில் வசித்துவந்த மூதாளர்களில் நேற்றுக் காலமாகிய கொக்குத் தொடுவாய் முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட ச. சீனித்தம்பி கற்பகம் என்ற மூதாளர் அன்புச்சோலையில் பயன்பெற்று காலமாகிய இரண்டாவது மூதாளர் ஆவார்.

நேற்று அன்புச் சோலை மூதாளர் பேணலகத்தில் இவரின் உடலுக்கான இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றது. அன்புச் சோலைத் தலைவர் அ. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமரர் சீனித்தம்பி கற்பகம் அவர்களின் உடலுக்கு அவரின் மூத்தமகள், தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் ரேகா, போராளிகள், மாவீரர் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் உள்ளிட்டோர் மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து அன்புச்சோலை மூதாளர்கள் அனைவரும் மலரஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து இறுதிக் கிரியைகளுக்காக மூதாளரின் உடல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

(லோ,தீ)

# விபுலானந்தன் ஞாபகார்த்த பட்டி மன்றப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கோட்டைப்பகுதியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட மத்தியகல்லூரி மாணவத்தலைவன் விபுலானந்தன் ஞாபகார்த்த அகில இலங்கை ரீதியாக உள்ள தமிழ் பாடசாலைகளுக்கிடையிலான பட்டிமன்றப்போட்டி எதிர்வரும் 28ஆம் 29ஆம் திகதிகளில் இடம்பெற இருப்பதால் இதில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் யாழ் மத்தியகல்லூரி அறிவிப்பாளர் கழகத்தில் 27ஆம் திகதிக்கு முன்பதாக நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றார்கள்

(36)

# விசேட சிகிச்சைகளுக்கு முன்கூட்டியே பதிவு செய்க

(அலுவலக செய்தியாளர்)

வைத்திய கலாநிதி பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் விசேட சிகிச்சைகள் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வெளிநாட்டிலிருந்து வருகை தந்த காது, மூக்கு, தொண்டை நிபுணரால் சிகிச்சை வழங்கப்படும். இதில் பயன்பெற விரும்புவோர் மேற்படி மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை 24.10.2004 ஆம் நாள் ஞாயிறு காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணிவரை புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் நடைபெறும். அத்தோடு இதய நோய்க்கான விசேட சிகிச்சை நவம்பர் 2ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதிவரை அமெரிக்காவிலிருந்து வருகை தரவிருக்கும் இதய சிகிச்சை நிபுணர் துஸ்யந்தன் ஜேம்ஸ் ஞானப்பிரகாசம் அவர்களினால் அளிக்கப்படவுள்ளது.

அத்தோடு மூட்டுவாதக் காய்ச்சலினால் இதயப்பாதிப்புற்றவர்களும், பிறப்பிலிருந்து இதயத்தில் பாதிப்புற்றவர்களும், மாரடைப்பினால் இதயதசையில் பாதிப்புற்றவர்களும், விசேடமாக இதயத்தில் பாதிப்புற்ற குழந்தைகளும் பயன்பெறலாம். விசேட இதயப் படப்பிடிப்புக் கருவி மூலம் பரிசோதிக்கப்பட்டு அதற்கேற்ற ஆலோசனைகளும் சிகிச்சைகளும் வழங்கப்படவுள்ளது. இதில் பயன்பெற விரும்புவோர் புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையிலும் கிளிநொச்சி டாக்டர் சி.பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையிலும் இன்று தொடக்கம் 01.11.2004 நாள் வரை காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை முன்கூட்டியே பதிவினை மேற்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(லோ)

## மீண்டும் சிரித்திரன்

(அலுவலக செய்தியாளர்)

சிரித்திரன் சஞ்சிகை அறிமுகவிழா யாழ். பலநோக்கு கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 24ஆம் திகதியன்று பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது. மூத்த பத்திரிகையாளர் கோபு ஐயா தலைமையில் நடைபெறவுள்ள சிரித்திரன் சஞ்சிகையின் அறிமுக விழாவில் யாழ். மாநகரசபை ஆணையாளர் செங்கையாளியன்,எழுத்தாளர் பொன்.கணேசமூர்த்தி, யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கே.ரி. கணேசலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்புரை நிகழ்த்தவுள்ளனர். மாமனிதர் சிரித்திரன் சுந்தர் அவர்களின் மறைவிற்கு பின்பு மீண்டும் சிரித்திரன் சஞ்சிகை வெளிவரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## கொடுப்பனவு

(புதுக்குடியிருப்பு)

கியூடெக் நிறுவனத்தால் தொண்டர் ஆசிரியர்கள், வைத்தியசாலைத் தொண்டர்கள், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதந்த கொடுப்பனவுகள் வரும் திங்கட்கிழமை பூநகரி பகுதியிலும், செவ்வாய்க்கிழமை புதுக்குடியிருப்பு/கரைத்துறைப் பற்றுப் பிரிவுகளிலும் வழமையான நேரப்படி வழமையான இடங்களில் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (08)

## கண்காட்சி திறந்துவைப்பு

உடையார் கட்டு மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு மகாணவர்களின் பாடத்திட்டத்திற்கமைவான கண் காட்சி நேற்று முன்தினம் 10.00 மணிக்கு வைபவரீதியாகப் பாடசாலை அதிபர் ,உப அதிபர்,பிரதி அதிபர் ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இக்கல்வி கண்காட்சியில் பாடசாலை ஆரம்பப்பிரிவின் பல நூற்றுக்கணக்கான மாணவர்களின் தேடல்கள்,சுய ஆற்றல் வெளிப்படுத்தல்கள், கற்பித்தல் உபகரணங்களாக அமைந்து மாணவர்களுக்கு பயன்தரல்,உருக்கள் போன்றன காணப்பட்டன.இதில் மாணவர்கள் கையாளுதல்,இவர்களுடன் பெற்றார் இணைந்து தமது சிறார்களை ஊக்குவித்தலை அவதானிக்க முடிந்தது. (19)


நினைவின் சாரங்களில் உங்கள் மனம் வரைந்தோம்

செழுமையும், சீர்மையும் உணர்வாய்
மனிதமும், புனிதமும் ஆன்மாவாய்
எம் தேச வெளியில் ஒளி துலங்கும்
தேசத் தலைவனால் நடப்பட்டிருக்கும்
எதிர்கால நம்பிக்கை விருட்சமான
'செஞ்சோலை' தனது 13ஆவது அகவையை
நிறைவுசெய்து 14ஆவது அகவையில்
காலெடுத்து வைக்கின்றது.

எங்கோ பூத்து ஒளி வதங்கிய வதனங்களை
ஒன்றாய்க் கோர்த்து
ஈழத்தாயின் கழுத்தினில் மணம் வீசும்
தூர சிந்தைப் பணிக்கு உரமிட்ட
உள்ளங்களுக்கு எங்கள்
நெஞ்சம் நிறைந்த வணக்கங்கள்

கடற்கரும்புலி மேஜர் காந்தரூபனின்
கனவுக்கும், அதைச் செயல் வடிவமாக்கிய
தேசியத்தலைவர் மாமாவுக்கும்-அவர்
கரங்களைப் பலப்படுத்திய உங்களுக்கும்
நாளைய ஒளி விளக்குகளாகிய
எமது நன்றிகள்.

ஊர் பிரிந்து, உறவு கலைந்து
உலகின் பல மூலைகளிலும்
வாழ்வைப் பதியமிட்டு
தூரதேசத்து வாழ்வை ஏந்திருந்த போதும்
பனிகவியும் பொழுதுகளில் - வியர்வைப்
பூ மலர உங்கள் உழைப்பில்
சிறுதுளியை எமக்காய் உவந்தளித்து
எமது வளமான வாழ்வுக்கும்
பலம் சேர்ந்த உங்கள் மனிதநேயத்தையும்
இனப்பற்றையும் நாம் தலைகுனிந்து
வணங்குகின்றோம்.

விடுதலை பெறத்துடிக்கும் தமிழினத்தின்
குழந்தைகளான எமக்காய் நீங்கள்
செயல்வடிவில் நேசிக்கும் இந்தச்சேவை
மாபெரும் கனதி வாய்ந்தது
உங்களின் சிறுதுளி பெருவெள்ளமாகி
தேசத்தாயின் துயர் துடைக்கும்
இடங்களால் தூரவிருந்தாலும் - என்றும்
எமது இதயங்களுக்கு அருகில்
வாழ்கின்ற செஞ்சோலையின் அன்பு உறவுகளே
இந்நாளில் எங்களது நன்றி கலந்த
வணக்கங்களைக் கூறுகின்றோம்.

செஞ்சோலைக்குடும்பம்

# யாழ்.வைத்திய சாலைப் படுகொலை 17 ஆவது ஆண்டு நினைவு நாள் அனுஷ்டிப்பு

1987 ஆம் ஆண்டு இந்திய ஆக்கிரமிப்புப் படையினரால் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட ஊழியர்கள் 41 பேரினதும் 17 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.சதுர்முகன் தலைமையில் இடம் பெற்ற நினைவு தின நிகழ்வில் உயிரிழந்த ஊழியர்களது உறவினர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் கலந்து கொண்டனர். ஈகச்சுடரேற்றப்பட்ட பின்னர் ஊழியர்களது உருவப்படங்களுக்கு உறவினர்கள் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலியுரையினை அரசியல்துறையைச் சேர்ந்த செழியன் உள்ளிட்ட பலர் ஆற்றியிருந்தனர்.

1987ஆம் ஆண்டு நேற்றைய நாளில் யாழ். போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறிப் பிரவேசித்த இந்திய இராணுவத்தினர் அங்கு பணி புரிந்த வைத்தியர், தாதியர் உள்ளிட்ட 41 ஊழியர்களை ஈவிரக்கமற்று சுட்டுக்கொன்றமை தெரிந்ததே. (27)

## இந்திய இராணுவத் தளபதி நவம்.1 இல் சிறிலங்கா விஜயம்

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் என்.சி.விட்ச் அடுத்த மாதம் முதலாம் திகதி சிறிலங்காவுக்கு விஜயம் செய்யவுள்ளார். சிறிலங்கா இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொடவின் அழைப்பின் பேரில் இவர் சிறிலங்காவுக்கு வருகை தரவுள்ளதாக இராணுவத் தலைமையகம் தெரிவிக்கின்றது. இந்தியத் தளபதி நான்கு நாட்கள் சிறிலங்காவில் தங்கியிருக்கவுள்ளார். இந்த விஜயத்தின் போது இந்திய இராணுவத் தளபதி சனாதிபதி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் முப்படையினர் ஆகியோரோடு சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளார்.

## இறுதித்தீர்மானத்திற்கு வந்துள்ள இந்.சிறிலங்கா பாதுகாப்பு உடன்பாடு

இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக இறுதித் தீர்மானத்திற்கு வந்திருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள இந்திய அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையையடுத்தே ஒப்பந்தம் தொடர்பான இறுதிக்கட்டத்திற்கு வந்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய 98 சத வீதமான விடயங்களில் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத், இந்த ஒப்பந்தத்தின் படி இரு நாடுகளுக்கும் இடையே இராணுவப் பயிற்சி, கடற்படையினருக்கு ஒத்துழைப்பு வழங்குதல் உட்படப் பல விடயங்கள் அடங்கியிருப்பதாகத் தெரிவித்தார். இந்த ஒப்பந்தத்தில் எப்போது கைச்சாத்திடுவது என்பதை அரசாங்கமே தீர்மானிக்கும் எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

### கிங்ஸிலி...

மாறு, கடந்த பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் மட்டக்களப்பில் போட்டியிட்டுப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுப் பதவி ஏற்காமல் அதிலிருந்து விலகிக் கொண்ட கிங்ஸ்லி இராசநாயகம், கருணா கும்பலைச் சேர்ந்த தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை அவரது குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்கின்றோம். இத்தகைய செயல் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது, இப்படியான தகாத செயல்கள் தொடராமல் இருப்பதற்கு மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ள அந்த அறிக்கையில், சிறந்த கல்விமானான இவர், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில் பணியாற்றியதையும் நினைவு படுத்தியுள்ளனர்.

### படையினர்...

படையினரது எதிர்ப்பையும் மீறி இறங்குதுறையினை ஆழமாக்கும் பணிகள் நேற்றுத் தொடர்ந்தும் இடம்பெற்றிருந்தது.

### அரச...

சந்திப்புக் குறித்து எவ்வித கருத்தையும் தாம் வெளியிடப் போவதில்லை எனத் தெரிவித்தார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகள் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருவது தொடர்பாகவும், அதன் போது அரசாங்கம் அதற்கு உதவுவது தொடர்பிலும் இன்றைய சந்திப்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மகளிர்...

மாவட்டங்களில் இருந்தும் எமது மக்களால் தெரியப்படுத்தப்பட்ட கருத்துக்களையும் நாங்கள் கவனத்தில் எடுத்து, அதற்காக எம் மக்களிடம் மன்னிப்பை வேண்டி, இன்னுமொரு சந்தர்ப்பத்தில் அனைவரது எதிர்பார்ப்பையும் பூர்த்திசெய்யும் முகமாக அது போன்ற ஒரு நிகழ்வை நிச்சயம் எம் மக்களின் பார்வைக்குக் கொண்டு வருவோம் என்பதைக் கூறி மீண்டும் எம்மோடு ஒத்துழைத்து, ஊக்கப்படுத்தி, வாழ்த்துரைத்த அனைத்து மக்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதில் நிறைவடைகின்றோம் என்றும் மகளிர் படையணி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

### கட்டுப்பாடுகளை...

பாகப் படையினர் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாக படைத்தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது. ஒரு சிலர் மாத்திரம் தாம் புலிகளின் உறுப்பினர் என்னும் அடையாளத்தை உறுதிப்படுத்தும் அதே வேளையில், பெரும் எண்ணிக்கையிலான விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் சாதாரண மாகப் பொதுமக்களுக்குரிய நடைமுறைகளைப் பின்பற்றி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகளுக்கு அப்பாலும் விடுதலைப்புலிகள் உலங்கு வானூர்திகளை அதிகம் பயன்படுத்தியுள்ளதாகவும் அரச தரப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இவ்விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து முடிவுகளை மேற்கொள்ளப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் பியூறு ஹொவ்டேயும் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவும் நேற்றுச் சந்தித்துப் பேசவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### கருணாவின்...

தமிழ்ச் சமூகத்தினதும் மிகப் பெரிய துரோகியே கருணா" என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் பலத்த கோசமெழுப்பினர். "ஆயிரமாயிரம் தமிழ் மக்களைக் கொன்றொழித்து, கிழக்கிலங்கையின் தமிழ்க் கிராமங்கள் பலவற்றைச் சூறையாடியதுடன், தமிழ்-முஸ்லிம் சமூகங்களிடையே குரோதத்தை உருவாக்கிவரும் சிறிலங்கா அரசினதும், இராணுவத்தினதும் கைக்கூலியாக மாறிய கருணா ஒரு அப்பட்டமான தமிழினத் துரோகி" என்றும் அங்கே கோசமெழுப்பப்பட்டது. இதேவேளை ஆரையம்பதிப் பிரதேச செயலகம் முன்பாகவும் இத்தகையதொரு ஒரு போராட்டமொன்று நடைபெற்றுள்ளது.

அத்தோடு கருணாவின் அரசியல் கட்சியைப் பதிவு செய்யக் கூடாது எனக் கோரி, நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கே பல்வேறு இடங்களில் மக்களின் கவனயீர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

இந்தப் போராட்டங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள். களுவாஞ்சிக்குடி தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் பட்டிருப்பு சந்தியிலிருந்து களுவாஞ்சிக்குடி ஊடாக எழுச்சிப் பேரணியொன்று நடைபெற்றது. இந்தப் பேரணி விடுதலைப் புலிகளின் பட்டிருப்புக்கோட்ட அரசியல் துறை அலுவலகத்தைச் சென்றடைந்து, அரசியல்துறை பொறுப்பாளர் செல்வாவிடம் மகஜரொன்று கையளிக்கப்பட்டது. அதன் பின்பு அங்கிருந்து பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது. அங்கு உதவிப்பிரதேசசெயலாளர் தர்சினி சிவபாதசுந்தரத்திடம் அரசாங்கத்திற்கான மகஜர் கையளிக்கப்பட்டது. இந்தப் பேரணியில் கலந்து கொண்டவர்கள் "தமிழரே புலிகள், புலிகளே தமிழா", "எங்கள் தேசியத் தலைவர் பிரபாகரன", "பதவி வெறியர்களையும் துரோகிகளையும் அரசியல் என்ற போர்வையில் அனுமதிக்க மாட்டோம்" என்பது உட்பட பல்வேறு கோசங்களையும் எழுப்பினார்கள்.

## வீரவணக்கக் கூட்டமும் வித்துடல் விதைப்பும்

கடந்த 30.09.1996 அன்று யாழ்/ வடமராட்சிப் பகுதியில் இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவடைந்த.

கடற்புலி மேஜர் செல்வம் (கறுவல்தம்பி-வடிவேற்கரசன் வெற்றிலைக்கேணி)

கடந்த 16.12.1997 அன்று யாழ்/ வடமராட்சிப்பகுதியில் இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவடைந்த.

கடற்புலி லெப். அருணன் (அருந்ததி ஜெயக்காந்தன் செம்பியன் பற்று வடக்கு).

இம் மாவீரர்களின் வித்துடல் கடந்த செவ்வாய்கிழமை உடுத்துறை ம.வி மண்டபத்தில் வைக்கப்பட்டு வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது.

வடமராட்சி மாவீரர் துயிலுமில்லப் பொறுப்பாளர் வே.தமிழரசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைத்துணைப் பொறுப்பாளர் செல்வி அர்ச்சனா ஏற்றிவைக்க மேஜர் செல்வம் அவர்களின் வித்துடலுக்கு அவரின் உறவினரும் லெப். அருணனின் வித்துடலுக்கு அவரின் பெற்றோரும் ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தனர்.

வீரவணக்க உரைகளை உடுத்துறை பாடசாலை அதிபரும், கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி பூரணியும் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகமும் நிகழ்த்தினர். பின் கடற்புலிகளின் மாணவரமைப்பின் பாண்ட் இசை மரியாதையுடன் வித்துடல்கள் வடமராட்சி கிழக்கு மாவீரர்துயிலுமில்லம எடுத்துச்செல்லப்பட்டுப் பூரண இராணுவ மரியாதையுடன் புனித விதை குழியில் விதைக்கப்பட்டது.

### பிணையில் விடுதலை

யாழ்ப்பாண புன்னாலைக்கட்டுவன் ஈவினைப் பகுதியில் ஒரு மாதத்துக்கு முன்னர் வயோதிபர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யபட்டிருந்த இரண்டு பல்கலைக்கழக மாணவர்களும் இன்று யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்தால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

எனினும் இந்தக் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள ஏனைய பொதுமக்கள் 6 பேரினதும் பிணை மனுக்களை நீதிமன்றம் நிராகரித்துள்ளது. (27,33)

### போராட்டம்....

யினர் அதனைத் தடுக்க முற்பட்டனர். இதனையடுத்து மாணவர்களுக்கும், படை வீரர்களுக்குமிடையில் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக கைகளினாலும் துப்பாக்கிப் பிடிகளினாலும் மாணவர்கள் தாக்கப்பட்டுள்ளார்கள். இதனையடுத்து மாணவர்களும், மாணவிகளும் நாலா புறமும் சிதறி ஓடியதால் சில நிமிட நேரம் அங்கு பதற்றம் நிலவியது.

### 2005 நவம்பர்...

வழங்கப்போவதாகக் கூறும் அரசாங்கம் தனியார் துறை ஊழியர்களின் சம்பள உயர்வுக்கு என்ன உத்தரவாதத்தை வழங்கப் போகிறது என்றும் அவர் வினவினார்.


தகவல் தொழிநுட்ப கற்கைநெறிகள்

டிப்ளோமா பாடநெறிகள் தமிழ் விளக்கங்களுடன்



Diploma in MS Office

Diploma in Computer Programming

Diploma in Desktop Publishing

Diploma in Web Design

Diploma in Computer Studies

Diploma in Computer Programming

இப்பாடநெறிகளுக்கான காலம் 4 மாதங்கள்

கணினி மொழிகளான

C, C ++, Visual Basic

ஆகிய பாடங்கள் 25/10/04 முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. பதிவுகள் 20/10/04 முதல் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

கணினியியல் கல்லூரி ~ The Computer Collage

(Affiliated to Asian Computers)

யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி-10581)



கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 14 . 01 . 1941



இறப்பு 21 . 10 . 2004

சீனித்தம்பி – கற்பகம்

எமது அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தின் பயனாளியான சீனித்தம்பி-கற்பகம் அவர்கள் நேற்று இறைபதம் எய்திவிட்டார். இவரின் மறைவையொட்டி எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்,
பணியாளர்கள்,
சமுதாய முன்னேற்ற நிலையம்.

(சி 10583)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.